janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 85 | 2022 டிசம்பர் 11 - டிசம்பர் 17 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 36




## மோடி அரசின் தொழிலாளர் விரோதக் கொள்கைகளை எதிர்த்து ஜனவரி 24ல்

# தமிழ்நாடு முழுவதும் ஏஐடியுசி மறியல்!

## ஏஐடியுசி 20வது மாநில மாநாடு அறைகூவல்!




**அனைத்திந்திய தொழிற்சங்கப் பேராயம் - ஏஐடியூசியின் 20 வது மாநில மாநாடு திருநெல்வேலியில் 2022, டிசம்பர் 01,02,03 தேதிகளில் குருதாஸ் தாஸ் குப்தா நகரில், ஜி.மணியாச்சாரி நினைவரங்கத்தில் பேரெழுச்சியுடன் நடைபெற்றது. நூற்றுக்கணக்கான பிரதிநிதிகள் மற்றும் தோழர்களின் உணர்வுப்பூர்வ முழக்கங்களுக்கு இடையே மூத்த தோழர் ஏ. சாமி கொடியேற்றி வைத்தார். பின்னர் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து தமிழ்நாடு ஏஐடியூசியின் தலைவர் கே.சுப்பராயன் எம்.பி., தலைமையில் பொது மாநாடு நடைபெற்றது.**

வரவேற்பு குழு தலைவர் ஆர். சடையப்பன் வரவேற்புரையாற்றினார். மாநில செயலாளர் ம.இராதாகிருஷ்ணன் அஞ்சலி தீர்மானத்தைச் முன் மொழிந்தார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் தொடக்கி வைத்து பேசினார்.. உலக தொழிற்சங்க சம்மேளனத்தின் (WFTU) துணைப் பொதுச் செயலாளர் ஸ்ரீகுமார் வாழ்த்துரையாற்றினார்.

பிரதிநிதிகள் மாநாட்டில் பொதுச் செயலாளர் அறிக்கையை டி.எம். மூர்த்தி சமர்ப்பித்தார். 66 பிரதிநிதிகள் அறிக்கையின் மீதான விவாதத்தில் பங்கேற்று பேசினர். விவாதத்தின் நிறைவாக பொதுச் செயலாளர் தொகுப்புறையை ஏற்று அறிக்கை ஒருமனதாக ஏற்கப்பட்டது.

"ஒன்றுபட்டு எதிர்கொள்வோம் !" என்ற தலைப்பில், ஏஐடியூசியின் தேசிய செயலாளர் வஹிதா நிஜாம் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் தொமுச பேரவை பொதுச்செயலாளர் மு. சண்முகம் எம்.பி. சிஐடியு மாநிலப் பொதுச் செயலாளர் ஜி.சுகுமாரன், ஹெச்எம்எஸ் மாநில தலைவர் மு.சுப்பிரமணியன், ஐஎன்டியூசி மாநில பொதுச்செயலாளர் டி.வி.சேவியர், ஏஐயுடியுசி மாநிலத் தலைவர் அ.அனவரதன், ஏஐசிசிடியு மாநிலப் பொதுச் செயலாளர் க. ஞானதேசிகன் ஆகியோர் கருத்துரையாற்றினர்.

நெல்லை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப், வங்கி ஊழியர் சங்க செயலாளர் இ.அருணாசலம், தேசிய தொலைதொடர்பு ஊழியர் சங்க செயலாளர் கே.நடராஜன், பொதுக்காப்பீட்டு ஊழியர் சங்க செயலாளர் சவரி முத்து, அரசு பணியாளர் சங்கச் செயலாளர் மு.பொன்னிவளவன் உள்ளிட்டோர் வாழ்த்தி பேசினர். பரீக்ஷா குழுவின் பலூன் நாடகம் நடைபெற்றது. வரவேற்பு குழு பொருளாளர் ஆர்.ரெங்கன் நன்றி கூறினார்.

123 பேர் கொண்ட மாநிலப் பொதுக்குழு தேர்வு செய்யப்பட்டது.பொதுக்குழுவில் நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

03.12.2022 மாலை பாளையங்கோட்டை மரியா கேண்டீன் பேருந்து நிறுத்தம் அருகில் இருந்து மாபெரும் செந்தொண்டர் அணிவகுப்பு, கலை நிகழ்ச்சிகளுடன் தொழிலாளர்கள் பல்லாயிரக்கணக்கில் பங்கேற்ற மாபெரும் பேரணி நடைபெற்றது. கொட்டும் மழையிலும் பேரணி தொடர்ந்தது. பாளையங்கோட்டை லூர்துநாதன் சிலை அருகில், தோழர் எஸ்.எஸ்.தியாகராஜன் நினைவரங்கத்தில் பிரம்மாண்டமான பொதுக்கூட்டம் தமிழ்நாடு ஏஐடியுசி தலைவர் எஸ்.காசிவிஸ்வநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், ஏஐடியூசி தேசிய செயலாளர்கள் டி.எம். மூர்த்தி, வஹிதா நிஜாம், தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கச் செயலாளர் நா.பெரியசாமி, பொதுச்செயலாளர் ம. இராதா கிருஷ்ணன் உள்ளிட்டோர் பேசினர். வரவேற்பு குழுத் தலைவர் ஆர். சடையப்பன் வரவேற்புரையாற்றினார். புரவலர் லெட்சுமணன் நன்றி கூறினார்.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

**2023 ஜனவரி 24ல்**
**தமிழ்நாடு முழுவதும் மறியல் போர் !**

ஒன்றிய மோடி அரசு பதவியேற்றதிலிருந்து தொழிலாளர்கள் மீதான தாக்குதல் கூர்மைப்படுத்தப்பட்டு உள்ளது. 150 ஆண்டுகளுக்கு மேலாக இந்திய தொழிலாளர்கள் போராடிப் பெற்ற வேலை பாதுகாப்பு, சம்பளப் பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு, தொழிற்சங்க உரிமைகள்

தொடர்ச்சி 15ம் பக்கம்



சாணிப்பால், சவுக்கடியை தடுத்து நிறுத்துகிற போராட்டத்தில் களம் பல கண்ட போராளி எங்கள் தோழர் **த.னா** என்கிற

**கே.தனிக்கொடி** அவர்களின்

4ஆம் ஆண்டு நினைவு தினம் (11-12-2022)



இவண்


**குடும்பத்தார்கள்**

**கே.டி.மகேந்திரன்** வி.ச. ஒன்றியக்குழு
**எம்.சோபியா, க.சாந்தி** BA
**ஜி.கண்ணையன்** சுகாதாரத்துறை
**க.யோகேஸ்வரி** BE
**எம்.தனுஷ் கிருஷ்ணன், எம்.தர்ஷன்** கொத்தமங்கலம்

கட்சிக் கடிதம்

# அணி திரள ஆயத்தமாவீர்! 4





பேரன்புமிக்க தோழர்களே!

**கட்சி அமைப்புகள் மிகுந்த ஆர்வத்தோடும், நம்பிக்கையுடனும், உற்சாகத்தோடும் செயல்பட்டு வருவது வரவேற்கத்தக்க பாராட்டுக்குரியதாகும். குறிப்பாக நமது கட்சியின் மாநில செயற்குழு, நிர்வாகக் குழு, மாவட்ட செயலாளர்கள் கூட்டங்கள் கடந்த நவம்பர் முறையே 12, 13, 14 ஆகிய நாட்களில் நடைபெற்றன. இக் கூட்டங்களில் அனைத்து தோழர்களும் குறிப்பிட்ட நேரத்தில் பங்கு கொண்டு தங்களின் பங்களிப்பை செய்தனர்.**

இக்கூட்டங்களில் அரசியல், அமைப்பு நிலை ஆகியன குறித்து விவாதித்து பல்வேறு முடிவுகள் எடுக்கப்பட்டன.

இவை குறித்து கடந்த 30.12.2022ல் நெல்லையில் நடைபெற்ற நிர்வாகக் குழு கூட்டத்தில் பரிசீலித்த போது,

அனைத்து மாவட்டக் குழு கூட்டங்களும், நடைபெற்று, முடிவுகளை நிறைவேற்றிட திட்டமிட்டது குறித்தும், இதனைத் தொடர்ந்து இடைநிலை, கிளை கூட்டங்களுக்கு திட்டமிட்டிருப்பது குறித்தும் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர்கள், தாங்கள் மேற்கொண்ட கட்சிப் பணிகள் குறித்தும் விரிவாக எடுத்துக் கூறினர்.

மாதர் சங்க அமைப்பு கூடி இயக்கத்திற்கு திட்டமிட்டு, விலைவாசி உயர்வுக்கு எதிராக கடந்த நவம்பர் 29ல் இயக்கம் நடத்தியுள்ளனர்.

அனைத்திந்திய மாணவர், இளைஞர் பெருமன்ற அமைப்புகள் சார்பில் வேலை உறுதியளிப்பு சட்டம் கோரி, டெல்லியில் நடைபெற்ற பேரணியில், கடும் குளிரையும் பொருட்படுத்தாது 250 தோழர்கள் பங்கு கொண்டு சிறப்பித்துள்ளனர்.

விவசாயிகள் கூட்டமைப்பின் சார்பில், ஒன்றிய அரசு கொடுத்திட்ட வாக்குறுதியை நிறைவேற்றிட வலியுறுத்தி, நவம்பர் 26 அனைத்து மாநில தலைநகரங்களிலும் பேரணி நடத்தி கோரிக்கை மனுக்களை அளித்துள்ளனர். தமிழகத்தின் தலைநகரான சென்னையில் மூவாயிரத்திற்க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கு பெற்றதும், நமது தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் நல்முயற்சியின் காரணமாக ஆயிரக்கணக்கான விவசாயிகள் பங்கு பெற்றதும் பாராட்டத்தக்கது.

தொழிலாளி வர்க்கத்தின் முன்னணி அமைப்பான தமிழ்நாடு ஏஐடியூசி மாநில இருபதாவது மாநாடு நெல்லை மாநகரில் இம்மாதம் 1, 2, 3 ஆகிய மூன்று நாட்கள் மிக வெற்றிகரமாக நடைபெற்றுள்ளது.

அனைத்து மாவட்டங்களில் இருந்தும் பிரதிநிதிகள் பங்கு பெற்றதும், தொழிலாளி வர்க்கத்தின் பிரச்சினைகள் குறித்து விவாதித்து அறுபதுக்கும் மேற்பட்ட தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளார்கள்.

நிறைவு நாளான டிசம்பர் 3ஆம் நாள் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பங்கு பெற்ற பேரணியும், பொதுக் கூட்டமும் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றுள்ளது.

பேரணி தொடங்கி முடிவடைகின்ற நேரத்தில் மழை பெய்தும்கூட, தடையின்றி நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

நெல்லை மாவட்ட தோழர்கள் மெச்சத் தகுந்த முறையில், மாநாட்டை சிறப்பாக நடத்தியது பாராட்டுக்குரியது.

இம் மாநாட்டிற்கு முன்னதாக தமிழ்நாடு ஏஐடியூசி கட்டுமான தொழிலாளர் சங்கத்தின் மாநில மாநாடு நவம்பர் 16, 17 தேதிகளில் ராணிப்பேட்டையில் சிறப்பாக நடைபெற்றது. தமிழக அமைச்சர்கள் திரு.காந்தி, திரு சி.வெ.கணேசன் ஆகியோர் மாநாட்டில் கலந்து கொண்டு வாழ்த்திப் பேசினர்.

ஏஐடியூசியின் மாநில மாநாட்டில் அனைத்து தொழிற்சங்க தலைவர்களும் பங்கு கொண்டு வாழ்த்துரை வழங்கியது குறிப்பிடத்தக்கது.

டிசம்பர் 6ஆம் நாள் சட்டமேதை டாக்டர் அம்பேத்கர் அவர்களின் நினைவு நாளாகும். நாடு முழுவதும் அவரது திருவுருவச்சிலைக்கும், படத்திற்கும் மாலை அணிவித்தும், மலர் தூவியும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

பாலன் இல்லத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நமது மதிப்பிற்குரிய மூத்த தலைவர் இரா. நல்லகண்ணு அவர்கள் பங்கு பெற்று அம்பேத்கர் அவர்களின் படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள். வடசென்னை, மத்திய சென்னை, தென் சென்னை மாவட்ட தோழர்கள் செங்கொடியை உயர்த்திர் பிடித்து நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பித்தனர்.

ஆர்எஸ்எஸ் வன்முறை கூட்டம். பாபர் மசூதியை இடித்து தரைமட்டமாகி, நாட்டின் மதச்சார்பின்மை கொள்கைக்கு களங்கம் விளைவித்தார்கள்.

மசூதியை இடிப்பதற்கு அவர்கள் தேர்ந்தெடுத்த நாள் டிசம்பர் 6. ஏன் அந்நாளை அவர்கள் தேர்வு செய்ய வேண்டும்?

சூழ்ச்சிக்காரர்கள் மசூதியை இடிக்க வேண்டும், மதசார்பின்மை கொள்கைக்கு ஊறுவிளைவிக்க வேண்டும், மகத்தான அரசமைப்புச் சட்டத்தை நமக்களித்திட்ட அம்பேத்கரின் புகழை மங்கடிக்க வேண்டும், அவரது நினைவு நாளை மக்கள் நினைவு கூரக்கூடாது, மாறாக மசூதி இடிப்பு என்பது குறித்து நாடு விவாதித்துக் கொண்டிருக்க வேண்டும் என்ற உள்நோக்கத்துடன், சூழ்ச்சிக்காரர்கள் சதியில் ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிப்பது என்று சொல்வார்களே, அத்தகைய காரியத்தை தான் 1992 டிசம்பர் 6ல் வன்முறைக் கூட்டம் மேற்கொண்டது.

சதிகாரர்களின் சூழ்ச்சிகளை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அவர்கள் சாதாரணமானவர்கள் அல்ல. சூழ்ச்சி நிறைந்த, வஞ்சக எண்ணமுடைய சதிகார கூட்டம் என்பதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

வஞ்சக சூழ்ச்சிகளை, வஞ்சக செயல்களை கைவிட மாட்டார்கள், தொடர்ந்து மேற்கொள்வார்கள்.

குரங்கின் கையில் அழகிய பூமாலை அகப்பட்டால் அதன் கதி என்னவாகும். பல்வேறு மதங்களைக் கொண்ட இந்நாட்டை நமது முன்னோர்கள் மதச்சார்பின்மை நாடு என்று பிரகடனப்படுத்தினார்கள்.

அரசியலமைப்புச் சட்டத்தை யார் எழுதுவது என்ற வினா எழுந்த போது, அண்ணல் அம்பேத்கரை அடையாளம் காட்டியவர் தேசப்பிதா காந்தி. எவ்வளவு தீர்க்கதரிசனத்துடன் டாக்டர் அம்பேத்கரை தேர்ந்தெடுத்துள்ளார்.

காந்தியின் மதிப்பீடு எவ்வளவு சரியானது என்பதனை டாக்டர் அம்பேத்கர் மெய்ப்பட செய்தார்.

அண்ணல் அம்பேத்கர் உருவாக்கி தந்திட்ட அரசியலமைப்புச் சட்டம்தான் நாட்டை வழிநடத்துகின்றது.

அச்சட்டம்தான் நமது நாட்டை மதச்சார்பற்ற ஜனநாயக சோசலிச குடியரசு என பிரகடனம் செய்கின்றது.

இச்சட்டம் வழங்கியுள்ள ஜனநாயக முறையில்தான் இன்றைய மோடி தலைமையிலான ஆட்சியாளர்கள் அதிகார பீடத்தில் அமர்ந்துள்ளனர்.

தான் மேலே ஏறி வருவதற்கு பயன்பட்ட ஏணியை எட்டி உதைப்பது போன்று, தாங்கள் அதிகாரத்திற்கு வருவதற்கு பயன்பட்ட அரசியல் அமைப்புச் சட்டத்தை துச்சமென மதித்து அதற்கு எதிராக செயல்பட்டு வருகின்றார்கள்.

நாட்டு மக்கள் அனைவருக்கும் தெரியும் படியாக அரசியலமைப்பு சட்ட புத்தகத்தை தங்களின் இரு கைகளாலும் தொட்டு வாங்குவார்கள். இது வெளிவேஷம்.

ஆனால் அவர்கள் உளமாற ஏற்றுக்கொண்ட சட்டம் மனுதர்மம்.

உள்ளம்வேறு, உதடு வேறு. அரசியலமைப்புச் சட்டம் குறித்து பெருமைபட பேசுவது வஞ்சகப்புகழ்ச்சி.

கயமை காவிக் கூட்டம் மனமாற ஏற்றுக்கொண்டது மனுதர்மம்.

அரியணையில் வீற்றிருக்கும் அரிய வாய்ப்பை பெற்ற காவியாளர்கள் கூட்டம், தங்களுக்கு கிடைத்துள்ள சட்டரீதியான வாய்ப்பை பயன்படுத்தி, தாங்கள் ஏற்றுக் கொண்டுள்ள மனுதர்ம சட்டத்தை அங்குலம் அங்கலமாக அமல்படுத்தி வருகின்றார்கள்/

தூண்டிலில் உள்ள சிறு மீனை தனது பசி போக்க உண்ண ஆசைப்பட்ட பெரிய மீனின் கதி என்னவாகும்!

தூண்டிலில் உள்ள சிறுமீன் தன் உயிரை மாய்க்கும் வஞ்சகம் நிறைந்தது என்பது தெரியுமா?

தூண்டில்காரன் தனது வஞ்சகம் நிறைந்திட்ட சூழ்ச்சியால் சிறு மீனை காட்டி பெரும் மீனை அபகரிப்பது போன்று, இன்றைய மோடி ஆட்சியாளர்கள் செயல்பட்டு வருகின்றார்கள்.

ஒரு பக்கம் அம்பேத்கர் படத்திற்கு ஆள் உயர மாலை அணிவித்து, கரங்களை குவித்து பெரும் மரியாதையுடன் அஞ்சலி.

மறுபுறம் அவரது உயரிய சிந்தனைக்கு களங்கம் விளைவிக்கின்ற கயமைத்தனம். தாங்கள் மேற்கொண்டுள்ள கயமைத்தனம் குறித்து அவர்கள் வெட்கப்பட மாட்டார்கள். மாறாக நியாயப்படுத்தி பேசுகின்றனர்.

வஞ்சகம் நிறைந்திட்ட

தொடர்ச்சி 3ம் பக்கம்

2 ம் பக்கத் தொடர்ச்சி

கெடுமதியாளர்களின் சூழ்ச்சிகளை மக்களிடத்தில் எடுத்துச் சொல்லி புரிதலை உருவாக்கி, விழிப்புணர்வை ஏற்படுத்துவது நம் போன்றவர்களின் தலையாய கடமையாகும்.

அத்தகைய கடமைகளை இடைவிடாது சோர்வென்றியும், தொய்வின்றையும் மேற்கொள்ள வேண்டும்.

அந்நியர்கள் ஆட்சி குறித்தும், நாம் அடிமையாக உள்ளோம் என்பதனை எடுத்துக் கூறி விழிப்புணர்வை நாட்டு மக்களிடத்தில் உருவாக்க 200 ஆண்டு காலம் தேவைப்பட்டது.

200 ஆண்டு காலம் முடிந்து தானாக சுதந்திரம் வந்துவிடவில்லை.

200 ஆண்டு கால இடைவெளியில் இடைவிடாது நடைபெற்ற எண்ணற்ற இயக்கங்களை ஒரு கணம் நாம் திரும்பிப் பார்க்க வேண்டும்.

எத்தனை, எத்தனை ஆயிரம் உயிர்களை விலை மதிக்கவொண்ணா மா மணிகளை பலி கொடுத்துள்ளோம்.

எத்தனை லட்சம் பேர் சிறை கொட்டடியில் சித்திரவதைக்கு உள்ளானார்கள்.

வெள்ளை கொடுங்கோலர்களின் பீரங்கி குண்டுகளும், துப்பாக்கி குண்டுகளும் நமது முன்னோர்களின் உயிரைப் பறித்தது.

கங்கையும், காவிரியும் வற்றாத ஜீவநதியாய் நாடு முழுவதும் தண்ணீர் பாய்ந்து, தரிசு நிலங்கள் எல்லாம் விலை நிலங்களாகி, வேளாண் உற்பத்தி பெருகி பசி போக்கியது போன்று, நமது முன்னோர்கள் சிந்திய இரத்தப்பெருக்கு தாய் நாட்டின் மண்ணை சிவப்பாகியது.

நம்முடைய தேவைக்கு நமது உழைப்பாளி மக்கள் தயாரித்த கயிறுகள் நமது முன்னோர்களின் கழுத்தை இறுக்கி உயிர் பறிக்க பயன்பட்டது. மக்கள் கூடும் இடங்களில், நட்ட நடு வீதியில் எல்லோரும் அறியும் படியாக நமது ஆற்றல் மிகு தேச பக்தர்களை தூக்கு கயிற்றில் தொங்கவிட்டு உயிர் பலி வாங்கிய கொடூரத்தின் மூலம், மக்களை அச்சம் கொள்ளச் செய்து, தங்களின் கொள்கையையும், கொடூரத்தையும் நிலை நிறுத்திக் கொள்ள வெள்ளையர்களின் கொடுங்கோலரின் ஆட்சி முயன்றது.

இவை அனைத்தையும் துச்சமென மதித்து சமர் புரித்து, சாதித்த சாதனையாளர்கள், தியாகசீலர்கள் நிறைந்திட்ட நாட்டில்தான் நாம் வசிக்கின்றோம்.



வெள்ளையனே வெளியேறு என்று முழக்கமிட்ட ஆவேச முழக்கம், வீரமுழக்கம் எட்டுத் திசையிலும் இன்றும் எதிரொலித்துக் கொண்டுதான் உள்ளது.

அன்று வெள்ளையனே வெளியேறு என்று முன்னோர்கள் முழங்கிய போது நாம் இல்லை; பிறக்கவில்லை. கொடுங்கோலர்களை எதிர்க்க, போர் புரிய வாய்ப்பு இல்லையே என்று வருந்த வேண்டாம்,

அன்று எதிரியை எளிதாக நாட்டு மக்கள் அறிந்திருந்தார்கள்.

ஆனால் இன்றோ, யார் எதிரியென அடையாளம் காண்பதும், மக்களை காணச் செய்வதும் அவ்வளவு எளிதான ஒன்றல்ல தோழர்களே !

மாயமான் வேடம் பூண்டு வசீகரிக்கும், வஞ்சகக் கூட்டம் அதிகாரத்தில், அட்டாணிக்கால் போட்டு அமர்ந்துள்ளது.

விடுதலைப் போர்க்களத்தில் தனது சுண்டு விரலைக் கூட அசைக்காத, அசைக்க விரும்பாத கூட்டம் மட்டுமல்ல, வெள்ளையர்கள் ஆட்சி தொடர வேண்டும் என்று விரும்பி வெண்சாமரம் வீசிய வீணர்களின் கூட்டம் தான் இன்று அதிகார பீடத்தில் அமர்ந்துள்ளது.

கரையான் புற்றெடுக்க கருநாகம் குடியிருக்க என்றதொரு பழமொழி உண்டு.

புற்றை உருவாக்கியது சின்னஞ்சிறு கரையான்கள். ஆனால் அதனை மக்கள் கரையான் புற்று என குறிப்பிட மாட்டார்கள். பாம்பு புற்று என கூறுவது மட்டுமல்ல, பாம்பிற்கு பாலும் வார்ப்பார்கள்.

அக்கதிதான் இன்று நம் நாட்டிற்கு ஏற்பட்டுள்ளது. கொடிய விஷம் கொண்ட பாம்பை, பாம்பு நம்மை தீண்டினால் நம் உயிர் பலியாகும் என்பதனை நன்கறிந்த மக்கள், அப்பாவித் தனமாக தங்களின் தெய்வமாக அல்லவா கொண்டாடி வருகின்றார்கள். இத்தகைய அறியா இருள் போக்குவது எவ்வளவு கடினமாக உள்ளது.

விஷப் பாம்பை தெய்வமாக கொண்டுள்ள மக்களிடத்தில் தான் நாம் பணியாற்ற வேண்டியுள்ளது.

கொடிய பாம்பை காட்டிலும், மிகக் கொடிய விஷம் கொண்ட கூட்டம்தான் ஆர்எஸ்எஸ் கூட்டம் என்கிற பேருண்மையை மக்களுக்கு புரிய வைக்கத்தான், நாம் பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

தோழர்களே விழிப்புணர்வு ஏற்படுத்துதல் என்கிற பணி எளிதான ஒன்று அல்ல. மிக, மிக கடினமானது. கடினமான பணி என்று எண்ணி கைவிடுவோமானால் எதிர்காலம் சூனியம் ஆகிவிடும்.

எதிர்கால கனவுகள் மெய்ப்பட வேண்டுமெனில் கடுமையான பணி என்று கருதாது நாம் கடமையை மேற்கொள்ள வேண்டும்.

நமது பிள்ளைகளை, பேரக் குழந்தைகளை படி, படி, நன்கு படி என்று கூறுகின்றோமே ஏன்? நம்முடைய நலனுக்கா? இல்லை. மாறாக நமது பிள்ளைகள், பேரக் குழந்தைகளின் எதிர்காலம் மகிழ்ச்சி பொங்கியதாய், இன்பமயமானதாய் எல்லோரும் ஏற்றும், போற்றும் வளமான வாழ்க்கை அமைத்திடல் வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் தான் !

நாம் இன்று கூறுவது அக்குழந்தைகளுக்கு வேப்ப எண்ணையாய் கசக்கத்தான் செய்யும். ஏன் ஏனில் நாம் கூறுவது நமது நன்மைக்கே என்பதனை அறியக்கூடிய வயதில் அவர்கள் இல்லை, அறியும் பக்குவம் இல்லை. அதற்காக நாம் விட்டு விட இயலுமா? அவ்வாறு நாம் அலட்சியமாக விட்டு விட்டால் அவர்களின் எதிர்காலம் கசப்பாகி விடுவது மட்டுமின்றி, நாமும் நம் வாழ்நாள் முழுவதும் துயரப்பட வேண்டியதாகுமே !

அத்தகைய நிலை நமது வீட்டிற்கு மட்டுமல்ல, நாட்டிற்கும் ஏற்பட்டு விடலாகாது என்கிற அக்கறையுடன், தேசபக்த உணர்வுடன் நாம் களம் கண்டு வருகின்றோம்.

தோழர்களே, நமது கட்சிக்கு வயது 97 நிறைவுற்று, 98 ஆம் ஆண்டில் அடி எடுத்து வைக்கிறது.

ஆம், வரும் டிசம்பர் திங்கள் 26ஆம் நாள் நாம் அங்கம் வகிக்கும் மகத்தான பேரியக்கமான இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு அகவை 98 தொடங்குகின்றது.

அன்றுதான் நம் ஒவ்வொருவருக்கும் பிறந்த நாள். 1925 டிசம்பர் திங்கள் 25ஆம் நாள் நமது இயக்கத்தின் அகில இந்திய அளவிலான முதல் அமைப்பு மாநாடு.

சிந்தனை சிற்பி சிங்காரவேலர் தலைமையில் கான்பூர் நகரில் நடைபெற்ற மகத்தான மாநாடு.

மாநாட்டின் இரண்டாம் நாளான டிசம்பர் 26 அன்று நமது கட்சிக்கு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி என்று பெயர் சூட்டி மகிழ்ந்த நன்னாள்.

இந்நாளை ஆண்டுதோறும் நாம் கட்சியின் அமைப்பு தினமாக, அன்று முதல் இன்று வரை கொண்டாடி மகிழ்கின்றோம்.

டிசம்பர் 26 என்பது கட்சி பிளவுபட்ட 1964 பிறகு நம் வசதிக்கேற்ப எடுக்கப்பட்ட முடிவு அல்ல.

ஒன்றுபட்ட கட்சியால் மேற்கொள்ளப்பட்ட முடிவாகும். கட்சியின் முடிவை மதிப்பது மட்டுமல்ல, ஏற்பது மட்டுமல்ல, நிறைவேற்றுவதையும் தங்களது உயிர் மூச்சாக கருதி செயல்படுத்துபவர்கள் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் என்பதனை நாம் கம்பீரமாக ஓங்கி ஒலித்திட வேண்டும்.

அத்தகைய உணர்வுமிக்க, உணர்வு பூர்வமான கம்யூனிஸ்டுகளாகிய நாம் வரும் டிசம்பர் 26 அன்று, கட்சி பிறந்திட்ட அந்நாளில் அனைத்து கிளை அமைப்புகளிலும், அலுவலகங்களிலும் இரத்தம் தோய்ந்த அரிவாள், சுத்தியல் பொறிக்கப்பட்ட செங்கொடியை வானளாவ உயர்த்துவோம் !

செங்கொடி வாழ்க ! தியாகிகள் நாமம் வாழ்க ! பெற்ற சுதந்திரத்தை பாதுகாப்போம், மதச்சார்பின்மையை பேணிக்காப்போம், சர்வாதிகார, பாசிச ஆட்சியை வீழ்த்துவோம், பொதுவுடமை சமுதாயத்தை அமைப்போம் என விண்ணதிர முழங்கிடுவோம். இன்முகம் காட்டி, இனிப்புகள் வழங்கி கொண்டாடி மகிழ்வோம் !

அதே நாளில் தான் நமது மதிப்புமிகு தலைவர் தகைசால் தமிழர் விருதுபெற்ற தோழர் இரா.நல்ல கண்ணு அவர்களின் பிறந்தநாளை கொண்டாடி மகிழ்வோம்.

கோடீஸ்வர குடும்பத்தில் பிறந்து, கடைக் கோடியில் வறுமையில் உழலும் மக்களுக்காக வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்த, மா மனிதர் கே.டி.கே. தங்கமணியின் நினைவு நாளை நினைவு கூருவோம், அஞ்சலி செலுத்துவோம்.

இவைகள் மட்டுமின்றி இந்நாளில் தமிழ்நாடு முழுவதும் நமது இயக்கத்தின் போர்வாள் – கொள்கை விளக்கம் பெற, குழப்புவோர் வாயடைக்க பேராசான் ஜீவாவை ஆசிரியராகக் கொண்டு 1937 ஆம் ஆண்டு தொடங்கப் பெற்று கடந்த 85 ஆண்டு காலமாக பயணித்து வருகின்ற, தோழர் தா.பா. அவர்களால் “காகிதத்தில் ஓர் ஆயுதம்” என போற்றப்பட்ட ஜனசக்தி சிறப்பிதழ் விற்பனையை ஒரு மாபெரும் இயக்கமாக மேற்கொண்டு, ஊர்தோறும், இல்லம் தோறும், வணிக நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள், அனைத்துப் பகுதி மக்களையும் சந்தித்து, பல்லாயிரக்கணக்கான ஜனசக்தி சிறப்பிதழ் விற்பனையை வெற்றிகரமாக நடத்திடுவோம்.

நம் கட்சித் தோழர்கள் – ஆதரவாளர்கள் இல்லம் தோறும் ஜனசக்தி காலண்டர் அழகூட்ட செய்திடுவீர் !

இவ்விரண்டு பணிகளுடன் டிசம்பர் 29 ஆம் நாளை நினைவில் கொண்டு, அப்பணிகளையும் நிறைவேற்றிட ஆயத்தமாகிட வேண்டும்.

ஆம் தோழர்களே, ஒன்றிய பாஜக அரசு தான் ஆட்சிக்கு வர இயலாத, மக்களால் பாஜக நிராகரிக்கப்பட்ட மாநிலங்களில், ஆளுநர்களைக் கொண்டு சட்டபூர்வமாக அராஜகம் இழைத்து வருகின்றது.

அத்தகைய மாநிலங்களில் நாம் வாழும் தமிழ்நாடு ஒன்றாகும்.

இங்கே மோடியால் நியமனம் செய்யப்பட்டுள்ள ஆளுநர் ரவி என்பவர், சகுனியைக் காட்டிலும் மிக அதிகமான சகுனி வேலைகளை செய்து வருகின்றார்.

தான் வகிக்கும் மிக உயரிய ஆளுநர் பொறுப்பை தவறாக, தான்தோன்றித்தனமாக செயல்படுத்தி வருகின்றார்.

ஆளுநர் மாளிகை பாஜகவின் அலுவலகமாக செயல்பட்டு வருகின்றது.

அரசியலமைப்புச் சட்டத்திற்கு புறம்பாக செயல்படுகின்றார். மதவெறி பூண்ட, மதம் கொண்ட யானை போல் செயல்படுகின்றார்.

சனாதன வெறியராக உள்ளார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற சட்டப்பேரவை நிறைவேற்றிய சட்ட மசோதாக்களை அலட்சியப்படுத்துகின்றார். சட்டப்பேரவையை அவமதிக்கின்றார். போட்டி அரசை நடத்தி வருகின்றார். இந்தியா கெட்டுப்போனதற்கு மார்க்ஸ் தான் காரணம் என்று வாய்க் கொழுப்பாக வாந்தி எடுக்கின்றார்.

பாஜகவின் ஊது ஊழலாக, கோயபல்சாக வலம் வந்து கொண்டுள்ள ஆளுநர் ரவியை, ஆளுநர் பொறுப்பிற்கு பொருத்தமற்ற நபரை, நியமனம் செய்திட்ட மோடி அரசே திரும்பப் பெறு என கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகை முற்றுகைப் போராட்டம் டிசம்பர் 29ஆம் நாள்.

பொதுச் செயலாளர் தோழர் டி.ராஜா, தேசிய செயலாளர் டாக்டர் நாராயணா ஆகியோர் போராட்டத்திற்கு தலைமை தாங்குகிறார்கள்.

விடுதலைப் போராட்ட வீரரும், தகை சால் தமிழர் விருது பெற்ற தலைவர், நமது பேரியக்கத்தின் மூத்த தலைவர், 98 ஆம் அகவை காணும் ஒப்பாரும் மிக்காரும் இல்லா நமது பெருமைக்கும் போற்றுதலுக்குரிய தலைவர், தோழர் இரா. நல்லகண்ணு செங்கொடி அசைத்து பேரணியை தொடங்கி வைக்கின்றார்.


- போராட்டத்தை பொதுமக்கள் அனைவரிடமும் தெரியப்படுத்தி, அனைத்து மக்களின் பேராதரவை பெறுவது நமது கடமை.
- அத்தகைய கடமையை நிறைவேற்றிட, சுவர் எங்கும் விளம்பரம் செய்திடுவீர் !
- சுவரொட்டி, தட்டி, துண்டு பிரசுரம் மூலம் விளம்பரம் செய்திடுவீர் !
- தெருமுனைக் கூட்டங்கள் ஆங்காங்கே நடத்திடுவீர் !
- எட்டு திசை எங்கும் போராட்டம் எதிரொலிக்கட்டும். போர்முரசு கொட்டி ஜனநாயக மீட்புப் போரை மேற்கொள்ள, வெற்றி வாகை சூடிட ஆயத்தமாவீர் !
- டிசம்பர் 29 ஆம் நாள் சிங்கார சென்னை சிவப்பு சென்னையாகட்டும் !
- செஞ்சட்டை அணிந்து, சிவப்புக் கொடியேந்தி, மாவட்ட வாரியாக செம்பதாகையை தாங்கியவாறு அணிவகுக்க ஆயத்தப் பணிகள் அனைத்தையும் மேற்கொள்வீர் !
- வங்கக்கடல் சீற்றம் அடங்கி, செம்படையின் சீற்றம் மேலோங்கட்டும்.

நமது சீற்றம் நமக்கானதல்ல !

நாட்டிற்கானது. நாட்டு மக்களுக்கானது, ஜனநாயகம் காப்பதற்கானது, அண்ணல் அம்பேத்கரால் உருவாக்கப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தை காப்பதற்கானது, மதச்சார்பின்மை எனும் போற்றுதலுக்குரிய பெரும் கொள்கையை காப்பதற்கானது, சர்வாதிகாரத்திற்கு எதிரானது, பாசிச வெறிபிடித்த கூட்டத்திற்கு எதிரானது, பொதுவுடமை சமுதாயம் பூத்துக் குலுங்க நடைபெறுகின்ற மகத்தான போரில், மாபெரும் போரில், வரலாற்று சிறப்புமிக்க போரில், புதிய வரலாறு படைத்திடும் போரில், எமை மிஞ்சுவார் எவருமில்லை என எடுத்துக் கூறும் போரில், போர் முரசு கொட்டி, போர்முழக்கம் எழுப்பி, பங்கேற்க ஆயத்தமாவீர் !

ஆயிரம், ஆயிரமாய் ஆர்ப்பரித்து அணிதிரள்வீர் ! மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

தோழமைமிக்க,



இரா.முத்தரசன்

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 85 இதழ் 36

## நஞ்சோடு எதைச் சேர்த்தாலும் நஞ்சுதான்!

ஆசியா பசிபிக் மண்டலத்தில் உள்ள நாடுகளுக்கான ஐஎல்ஓ முத்தரப்பு மாநாடு டிசம்பர் 6 முதல் 9ம் தேதி வரை சிங்கப்பூரில் நடைபெறுகிறது.

இதற்காக இந்தியாவின் தொழிற்சங்கங்கள், வேலையளிப்போர் சங்கங்களுக்கு தகவல் தந்து அரசுப் பிரதிநிதிகளோடு சேர்த்து அனுப்பி வைக்குமாறு ஐஎல்ஓ இந்திய அரசுக்கு கடிதம் எழுதி இருக்கிறது. மோடி அரசு, தனது கட்சியுடன் இணைந்த சங்கமான பி.எம்.எஸ். பிரதிநிதிகளை மட்டும் அனுப்பி வைத்திருக்கிறது; மற்ற மத்திய தொழிற்சங்கங்களுக்கு எந்தத் தகவலும் தரவில்லை.

ஐஎல்ஓ ஆட்சிக் குழுவில் ஐஎன்டியுசி பிரதிநிதி இருக்கிறார். உலகத் தொழிற்சங்க சம்மேளனத்தின் ஆசியா பசிபிக் மண்டல பொறுப்பு ஏஐடியுசியிடம் இருக்கிறது. மோடி அரசு, நீருக்குள் மூழ்கி ரகசியமாய் ஏப்பம் விட்டால், காற்று வெளி வராமலா போய்விடும்.

செய்தி அறிந்து, ஐஎல்ஓவிடமிருந்து வந்துள்ள தகவலை தொழிற்சங்கங்களோடு பகிருமாறும் பிரதிநிதிகளை அனுப்பி வைக்குமாறும் ஒன்றிய அரசால் அங்கீகரிக்கப்பட்ட மத்திய தொழிற்சங்கங்கள், தொழிலாளர் துறை அமைச்சருக்கு கூட்டாகக் கடிதம் எழுதின. பாவம், பதில் எழுதக் கூட அவருக்கு நேரமில்லை.

இந்தியாவின் உயர் மட்ட முத்தரப்பு அமைப்பான இந்திய தொழிலாளர் மாநாட்டை (ஐஎல்சி) ஆண்டுக்கு ஒரு தடவை நடத்துவது மரபு. மோடி ஆட்சிக்கு வந்த பின்பு ஏழு ஆண்டுகளாக நடத்தப்படவில்லை. பதிலாக அண்மையில் திருப்பதியில், தேசியத் தொழிலாளர் மாநாடு (என்எல்சி) என்ற பெயரில் ஒரு கூட்டத்தை மோடி அரசு நடத்தியது. ஆனால் அதில் எந்த தொழிற்சங்கத்தின் பிரதிநிதியையும் அழைக்கவில்லை. மாநிலத் தொழிலாளர் அமைச்சர்கள் மற்றும் தொழிலாளர் துறை செயலாளர்கள் மட்டுமே அழைக்கப்பட்டு இருந்தனர்.

அந்த மாநாட்டில் "பிரிட்டிஷ்காரர்களிடம் இந்தியா அடிமையாக இருந்தபோது இயற்றப்பட்ட பல தொழிலாளர் சட்டங்களில் அடிமைத்தனம் இருப்பதாகவும், அதிலிருந்து தொழிலாளர்களை விடுவித்து, அவர்களுக்கு அதிகாரம் அளிப்பதற்காக புதிய சட்டத் தொகுப்புகள் கொண்டு வருவதாகவும்" ஆவணம் வைக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் காலத்தில் 1936ஆம் ஆண்டில் வந்த சம்பளம் வழங்கும் சட்டத்தில் தொழிலாளிக்கு மாத ஊதியம் நிச்சயிக்கப்பட்டு இருந்தது. ஒருவேளை, ஒருநாள் கூலி வழங்க வேண்டும் என்றால், ஒரு மாதச் சம்பளத்தை 26ஆல் வகுத்துக் கணக்கிட வேண்டும் என்று குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தில் இருந்தது. இப்போது மோடியின் சட்டத்தில் தொழிலாளிக்கு ஒரு மணி நேரத்திற்கு கூலி நிச்சயித்திருக்கிறார்கள். தொழிலாளிக்கு தினக்கூலி என்ற தகுதி கூட கிடையாது, மணிக்கூலியாக்கி வைத்துவிட்டு அதிகாரம் அளிப்பதாகத் தேன்வழியப் பேசுகிறார்கள்.

ஒரு தொழிலில் அல்லது தொழிற்சாலையில் தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய ஊதியத்தை, கூட்டுபேரம் நடத்தி அனைவருக்கும் பொதுவான ஊதிய உடன்பாடு காண்பது தொழில் தகராறு சட்டத்தில் இருந்தது. இப்போது மோடியின் சட்டம், ஒவ்வொரு தொழிலாளியாக தனித்தனியாகக் கூப்பிட்டு அவரது சம்பளத்தை நிச்சயித்து முதலாளி ஒப்பந்தம் போட்டுக் கொள்ளலாம் என்று வருகிறது.

இவையெல்லாம் அதிகாரம் அளிப்பது அல்ல; தொழிலாளர்களின் உரிமைகளைப் பறித்து, முதலாளிகள் விருப்பம் போல உழைக்கும் மனிதர்களை வேட்டையாட வழி வகுக்கும் காட்டாட்சி முறை.


புளிக்கிற பொருள் என்றால் இனிப்பு சேர்த்து அருந்துவதற்கு பானம் செய்யலாம். கசக்கிறது என்றால் காரம், உப்பு சேர்த்து உண்பதற்குரிய வகையில் சுவையை மாற்றலாம். ஆனால் விஷத்தோடு எதைச் சேர்த்தாலும் அதுவும் விஷமாகவே மாறும்; அமிர்தம் ஆகாது.

கார்ப்பரேட்டுகளுக்கு சாதகமாகவும், மதவெறியை உயிர் மூச்சாகவும் கொள்கை கொண்ட, நஞ்சினும் கொடிய பிஜேபியுடன் கூட்டணி சேர்ந்த கட்சிகளின் புதிய நிலைபாட்டைப் பார்த்தாலே இது விளங்கும்.

ஆர்எஸ்எஸ்பிஜேபியின் தொழிலாளர் கொள்கை, தொழிலாளர் உரிமைகளையும் தொழிற்சங்கங்களையும் அழித்தொழிப்பதுதான். கொதிக்கிற வெந்நீருக்குள் வெண்ணையை வைத்து எவ்வாறு உருகாமல் பாதுகாக்க முடியாதோ, அதேபோல ஆர்எஸ்எஸ்பிஜேபி கும்பலின் ஆட்சியில் தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாக்க முடியாது.

தொழிலாளி வர்க்கம் தனக்கிடையே உள்ள பல வேறுபாடுகளை ஒதுக்கி வைத்து விட்டு, கூட்டாக இணைந்து முழுமூச்சாக இந்தக் கொடுங்கோலர்களை எதிர்த்து முறியடிப்பதுதான் தொழிலாளர்களையும் மக்களையும் பாதுகாப்பதற்கான ஒரே ஒரு வழியாகும்.

கேரளா மாநிலம், ஆலப்புழையில் டிசம்பர் 1620 தேதிகளில் கூடுகிற அனைத்திந்திய தொழிற்சங்கப் பேராயத்தின் (ஏஐடியுசி) மாநாடு இதற்கு வழிகாட்டட்டும்...




**மார்கழி என்றால் சென்னை இசைவிழா நினைவுக்கு வரும் . அதுபோல் டிசம்பர் மாதமென்றால் சென்னை திரைப்படவிழா நினைவுக்கு வரும்.20 வது சென்னை சர்வதேச திரைப்பட விழா 2022 டிசம்பர் 15 முதல் 22 வரை சென்னையில் நடைபெறுகிறது.**

சர்வதேச அளவில் கான், பெர்லின், பாரிஸ், டெஹ்ரான், வெனிஸ், ஸ்பெயின், சர்வதேச திரைப்பட விழாக்கள் சிறப்பு வாய்ந்தவை. இந்தியாவிலும் புனா, கோவா, திருவனந்தபுரம் சர்வதேச திரைப்பட விழாக்களும் சிறப்பு பெற்றவை. 2003 ம் ஆண்டு முதல் சென்னை சர்வதேச திரைப்பட விழாவை இண்டோ சினி அப்ரிசியேஷன் பவுண்டேஷன் என்ற திரைப்பட அமைப்பு விழாவை முன்னெடுத்து வருகிறது. இவ்வாண்டு 20 வது திரைப்பட விழாவை நடத்துகிறது.

சென்னை திரைப்பட விழாவில் 48 நாடுகளிலிருந்து 107 திரைப்படங்கள் திரையிடப்படுகின்றன. ஈரானின் வேல்டு வார் 3 ,இத்தாலியின் மெட்ரோனாம், தென்கொரியாவின் புரோக்கர், பாலஸ்தீனத்தின் மெடிட்டரேனியன் பீவர் போன்ற படங்கள் திரையிடப்படுகின்றன.

ஜெர்மனியின் ஏஇஐஓயு, மாற்று சினிமாவை முன்வைத்து வரும் ஈரானிய திரைப்படங்களை பெருமைப்படுத்தும் வகையில் ஈரானின் பிரபல இயக்குனர் ஜாபர் பனாகியின் நோ டியர்ஸ், பிரெஞ்சு சினிமா மேதை கோடார்ட்டை கௌரவிக்கும் வகையில் பேரட் லீ போ, ஹங்கேரி பிரபல இயக்குனர் இஸ்வன் சாபோவின் ‘லவ் பிலிம்’ உள்பட சர்வதேச அளவில் விருதுபெற்ற, கவனத்தை ஈர்த்த திரைப்படங்கள் திரையிடப்படுகின்றன.

இந்தியன் பனோரம பிரிவில் 4 தமிழ்ப்படங்கள் உள்பட 17 இந்திய திரைப்படங்கள் திரையிடப்படுகிறது.

**உலகமயத்தின் கொடூரத்தாக்குதல், விளைவுகள், புலம்பெயர்ந்தோர், அகதிகள் வாழ்க்கை, இனஒதுக்கல், நுகர்வு கலாச்சாரத்தின் சிக்கல்கள், குழந்தைகள் உரிமை பறிப்பு , மத அடிப்படைவாத பிரச்சனைகள், பாலியல் வேட்கை, பாலியல் சமத்துவம், பாலியல் சுதந்திரம் போன்ற கதைக் களங்கள் இத்திரைப்படவிழாவில் வெளியிடப்படும் திரைப்படங்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றன.**

கிழக்கிலிருந்தும், தெற்கிலிருந்தும் வரும் சினிமாக்கள் சினிமாக்களே அல்ல என்று ஹாலிவுட்டும், ஐரோப்பியாவும் நிராகரித்த நிலையில் மூன்றாம் உலக நாடுகளிலிருந்து வெளி வரும் திரைப்படங்கள் சர்வதேச திரைப்பட விழாக்களை அலங்கரிக்கின்றன.

கௌபாய்,ஜேம்ஸ்பாண்ட் மற்றும் மசாலாபடங்களை மட்டுமே குப்பைகளாக கொட்டிக்கொண்டிருந்த ஹாலிவுட் திரைப்படங்களையும், விளக்குகள் அனைக்கப்பட்ட திரையரங்குகளில் வெறும் பாலியல் இச்சை திரைப்படங்களை வெளியிட்ட ஐரோப்பிய திரைப்படங்களை பின்னுக்கு தள்ளி சர்வதேச சினிமாவை அடுத்த தளத்திற்கு கொண்டு சென்றதில் கிழக்குக்கும், தெற்கிற்கும் பிரதான பங்களிப்பு உண்டென்பதை சர்வதேச திரைப்படவிழாக்கள் உணர்த்துகின்றன.

புராணங்களும், பாம்பும், பசுவும், ராஜா, ராணிகளுமே ஆக்கிரமித்திருந்த இந்திய சினிமாவில் புதிய அலையை தோற்றுவித்து இந்திய சினிமாவை சர்வதேச தளத்திற்கு எடுத்துச்சென்றவர்கள் சத்யஜித்ரே, மிருணாள்சென், ரித்விக் கட்டக். இவர்களே இந்திய சினிமாவின் முகமாய் சர்வதேச அளவில் அறியப்பட்டார்கள். ’பதேர் பாஞ்சாலி’ திரைப்படம் உலகமே இந்திய சினிமாவை திரும்ப பார்க்க வைத்தது.

இந்தியாவின் ஆன்மா என போற்றப்படும் இந்தியக் கிராமங்கள் உலகின் பொதுபுத்திக்கு காட்சிப்படுத்தப்பட்டது. இந்தியக் கிராமங்களும், மக்களும், காலனி ஆட்சியாலும், இந்திய நிலப்பிரபுவத்தாலும் சுரண்டப்பட்ட கொடுமைகள் அம்பலப்படுத்தப்பட்டன. வறுமையை படம்பிடித்து காசு பார்க்கிறார்கள் இந்திய சினிமாக்காரர்கள் என ஐரோப்பிய மேதாவிகள் சிறுமைப்படுத்தினர். புறக்கணிப்புகளையும், சிறுமைகளையும் புறந்தள்ளி இந்திய சினிமா புதிய பாதையில் பயணித்தது.

வங்க, மலையாள திரைப்படங்களில் பல புதிய பரிசோதனைகள் செய்யப்பட்டன. மாற்று சினிமா உருவாகியது. புனா திரைப்படக் கல்லூரியிலிருந்து படைப்பாற்றல் மிக்க இளைஞர்கள் வெளிவந்து சர்வதேச தரத்திலான திரைப்படங்களை வழங்கினர். ஆனால் இன்றைக்கு இந்திய சினிமா பின்னோக்கி செல்ல துவங்கியுள்ளது. 1930, 40 களில் ஐரோப்பிய சினிமாவை கவ்விய பாசிசம் தற்போது இந்திய சினிமாவை கவ்வ துவங்கியுள்ளது. இந்தியவகை பாசிசமான இந்துத்வா, இந்திய சினிமாவை கபளீகரம் செய்ய எத்தனித்து வருகிறது. தி காஷ்மீர் டைரீஸ் போன்ற இழிவான சினிமாக்கள் வெளிவரத் துவங்கியுள்ளன.

இந்திய சினிமாவை பாதுகாக்க வேண்டிய கடமை முன்னுக்கு வந்துள்ளது. புத்தகத்திருவிழாக்கள் போன்று ஊர்தோறும் திரைப்படவிழாக்கள் நடத்தப்பட வேண்டும். இத்திரைப்படவிழாக்களில் சர்வதேச திரைப்படங்கள், மாற்று சினிமாக்கள் திரையிடப்பட வேண்டும். சினிமா குறித்த விவாதங்கள் பரவலாக நடத்தப்பட வேண்டும். ஊர்தோறும் திரைப்பட சங்கங்கள் உருவாக்கப்பட வேண்டும். திரைப்பட புத்தக வாசிப்பை அறிமுகப்படுத்த வேண்டும். கலைஞர்கள், படைப்பாளிகள், முற்போக்காளர்கள், கல்வியாளர்கள்,ஆசிரியர்கள்,தொழிற்சங்கவாதிகள், சமூக ஆர்வலர்கள் இப்பணியை மேற்கொள்ள முன்வர வேண்டும்.20 வது சென்னை சர்வதேச திரைப்பட விழா இவ்முன்னெடுப்புகளுக்கான தாக்கத்தை உருவாக்க வேண்டும். உருவாக்கும் என்ற நம்ம்பிக்கையோடு சென்னை சர்வதேச திரைப்பட விழாவை வரவேற்போம். போற்றுவோம்.

– ஜி.வெங்கடாசலம்
தொடர்புக்கு: 9442907585.

# இதுவல்ல அம்பேத்கரின் இந்தியா!



து.ராஜா

**ஜி20 நாடுகளின் அமைப்புக்கு இந்தியா, சுழற்சி முறையில், தலைமை ஏற்றுள்ளது. இந்த நிகழ்வை, இந்தியா மீதான மதிப்பு மற்றும் அதன் பொறுப்புணர்வு என்று கூறாமல், பிரதமர் நரேந்திர மோடியின் சாதனை என்று ஆர்.எஸ்.எஸ். – பா.ஜ.க அணி முன்னிறுத்துகிறது. 'ஒரே பூமி – ஒரே குடும்பம் – ஒரே வருங்காலம்' என்ற விளம்பரம் நாடெங்கிலும் பரவலாக இருக்கிறது.**



"ஜி20 அமைப்பிற்கான இந்தியாவின் செயல்திட்டம் தீர்மானகரமாகவும், அனைவரையும் உள்ளடக்கியதாகவும், இலக்கை அடையும் இலட்சிய நோக்குடையதாகவும், நடைமுறை சாத்தியமுடையதாகவும் இருக்கும். மனிதநேயத்தை மையமாகக் கொண்ட உலகமயம் எனும் ஒரு புதிய முன்னுதாரணத்தை உருவாக்க அனைவரும் ஒன்றிணைந்து உழைப்போம் என்று பிரதமர் நரேந்திர மோடி பெயரில் விளம்பரப்படுத்தப்படுகிறது.

சர்வதேச சமூகத்திற்கு இப்படி ஒரு மாபெரும் போதனை! ஆனால், இன்றைய இந்தியா எப்படி இருக்கிறது? என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். 2022 ஆம் ஆண்டில் உலக பசி குறியீட்டில் உலக நாடுகளின் வரிசையில் இந்தியா 107 வது இடத்திலும், பத்திரிக்கை சுதந்திர குறியீட்டில் 150 வது இடத்திலும், உலக மகிழ்ச்சி குறியீட்டில் 136 வது இடத்திலும், லஞ்ச ஊழல் குறியீட்டில் 85 வது இடத்திலும், உணவு பாதுகாப்பு குறியீட்டில் 71வது இடத்திலும், சட்டத்தின் ஆட்சி குறியீட்டில் 77 வது இடத்திலும், ஜனநாயகத்திற்கான குறியீட்டில் 46 வது இடத்திலும் இருக்கிறது.

இன்றைய அரசாங்கம் மூர்க்கத்தனமாக நடைமுறைப்படுத்திவரும் நவீனதாராளமய பொருளாதார கொள்கைகள் தான் இந்தப் பேரழிவுக்கு இட்டுச் சென்றுள்ளது.

மோடி தலைமையிலான இன்றைய அரசாங்கம் அனைவரையும் உள்ளடக்கிய மனிதநேயமிகு செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்தவில்லை. ஆனால், அதற்கு மாறாக, ஒரு பிரிவினைவாத, பிற்போக்கான மற்றும் வகுப்புவாத செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறது. இன்றைய இந்தியா எவ்வாறு உள்ளது என்பதைச் சர்வதேச சமூகம் புரிந்துகொள்வதற்கு ஏற்றபடி, நமது நாட்டில் உள்ள சமூக ரீதியாகப் புறக்கணிக்கப்படும் பிரிவினர் மற்றும் சிறுபான்மையினரின் நிலை நம் அனைவரின் முன் உள்ளது. இது குறித்த அம்பேத்கரின் முன்னுணர்வுடைய எச்சரிக்கைகள் நம் அனைவரின் முன் உள்ளது.

**"சிறுபான்மைச் சமூகங்கள் ஒழிக்கப்படலாம். ஒருவேளை அவர்கள் ஒழிக்கப்படவில்லை என்றாலும், கொடுங்கோன்மைக்கும் அடக்குமுறைக்கும் உள்ளாக்கப்படலாம். அவர்கள் பாரபட்சமாக நடத்தப்படுவதும், பொதுவாழ்வில் அனைவருக்கும் சமமான வாய்ப்பு மற்றும் சட்டத்தின் முன் அனைவரும் சமம் ஆகியவை அவர்களுக்கு மறுக்கப்படுவதும் உறுதி ஆகும்."**

மோடி அரசாங்கம் பின்பற்றும் பொறுப்பற்ற பெரும்பான்மைவாதத்தின் காரணமாக அல்லலுறும் சிறுபான்மையினரின் துன்பத்தைப் பதிவு செய்வதற்காக, அரசியல் மற்றும் அரசியல் வளர்ச்சிப் போக்குகள் குறித்து எழுதக்கூடிய உணர்திறமுடைய விமர்சகர் ஒருவர் தான் இவ்வாறு எழுதியிருக்கக் கூடும் என்ற கருத்தை மேலே உள்ள வரிகள் உருவாக்குகின்றன.

ஆனால், உண்மையில் இவ்வாறு எழுதியவர் வேறு யாருமில்லைஞ்டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் ஆவார்! 'மொழிவாரி மாநிலங்கள் குறித்த சிந்தனைகள்' (houghts on Linguistic States) எனும் அவருடைய நூலில் பெரும்பான்மையினர் மற்றும் சிறுபான்மையினர் பற்றிய அத்தியாயம் ஒன்றில் அவர் இவ்வாறு எழுதியுள்ளார்.

அம்பேத்கரின் கூற்று மெய்யாகியுள்ளது என்பதை அவர்தம் நினைவுநாளான டிசம்பர் 6 ல் நாம் வருத்தத்துடன் நினைவுகூர வேண்டியிருக்கிறது. வகுப்புவாதம் தோய்ந்த தேர்தல் நடைமுறையைக் கொண்டுள்ள அரசியல் உள்ளிட்ட அனைத்து தளங்களில் இருந்தும் சிறுபான்மையினர் விலக்கப்படுவர்; பாதுகாப்பற்றவர்களாக உணருவர் என்றும் அவர் எச்சரித்தார்.

அதிர்ச்சியளிக்கக்கூடிய முறையில், இந்தியாவில், வகுப்புவாதம் தோய்ந்த தேர்தல் நடைமுறையானது, அச்சுறுத்தக்கூடிய ஒரு எதார்த்தமாக உருவெடுத்துள்ளது. மத நம்பிக்கை, உணவு, உடை, காதல் மற்றும் தங்கள் விருப்பப்படியான திருமணம் ஆகியவற்றின் பெயரால், பா.ஜ.க தலைவர்கள் சிறுபான்மையினரைக் குறிவைக்கிறார்கள். இது பா.ஜ.கவிற்குச் சாதகமான தேர்தல் முடிவுகளுக்கான ஒரு தீர்மானிக்கும் காரணியாக உள்ளது.

சிறுபான்மையினர் குறித்த அம்பேத்கரின் சிந்தனையில் முஸ்லீம்கள், கிறித்துவர்கள் மற்றும் இதர மதச் சிறுபான்மையினர் மட்டுமின்றி தலித்துகள் மற்றும் சமூகத்தின் இதர நலிவடைந்த பிரிவினரும் அடங்குவர்.

அவர் மறைந்து 66 ஆண்டுகளுக்குப் பின், சிறுபான்மையினரைக் குறிவைக்கும் அரசியல் நிலை காரணமாக உருவாகியுள்ள மோசமான சூழலை இந்தியா எதிர்கொண்டு வருகிறது. மக்கட்தொகையில் 12 முதல் 14 சதவிகிதம் வரை உள்ள முஸ்லீம்களை, விரிவான சமூக மற்றும் பொருளாதார ரீதியில் புறக்கணிக்க வேண்டும் என்று பா.ஜ.கவைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் சிலர் வெளிப்படையாகக் கோரிக்கை விடுத்துள்ளனர் என்பது அனைவரும் அறிந்ததே!

சுதந்திர இந்தியாவில் சிறுபான்மையினர் சமூக மற்றும் பொருளாதார ரீதியாகப் புறக்கணிக்கப்படுவதற்கான சாத்தியப்பாட்டை தொலைநோக்கு பார்வை கொண்ட அம்பேத்கரால் முன்பே கண்டுணர முடிந்தது. எனவே தான், 1945 ஆம் ஆண்டில் இந்திய ஐக்கிய மாகாணங்களுக்காக அவர் தயாரித்த அரசியலமைப்பு முன்வடிவில் சிறுபான்மையினர் புறக்கணிப்பு பிரச்சனையை அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தில் இடம்பெறச் செய்தார்.

**அந்த அரசியலமைப்பு முன்வடிவில், சொல், செயல் என்று எந்த வடிவத்தில், எவ்வகையில் சிறுபான்மையினர் புறக்கணிக்கப்பட்டாலும், அவற்றைத் தடுக்கும்படியான தண்டனைகள் அளிக்கப்பட வேண்டும் என்றும், அத்தகைய குற்றங்களுக்கு எதிராகக் கடும் தண்டனைகளை அளிப்பதற்கான வழிவகைகளைக் கொண்ட சட்டங்களை இந்தியாவின் வருங்கால சட்டமன்றம் இயற்ற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்திக் கூறியுள்ளார்.**

சிறுபான்மையினரை மிகக் கடுமையாகப் பாதிக்கக்கூடிய இந்தப் புறக்கணிப்பு பிரச்சனையை உள்ளடக்கிய மனு ஒன்றை 1947 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அரசியல் நிர்ணய சபையில் அம்பேத்கர் சமர்ப்பித்தார்.

அரசியல் நிர்ணய சபையில் நடைபெற்ற விவாதங்களும், அங்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களும் அந்தச் சபையின் சட்டமியற்றும் நோக்கத்தை ( Legislative Intent ) வடிவமைக்கின்றன. அந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு தான் உச்ச நீதிமன்றமானது, சட்டமன்றங்கள் இயற்றும் சட்டங்களை ஆராய்ந்து அறிந்து உறுதிப்படுத்துகிறது. அம்பேத்கரின் நினைவு நாளில், 75 வது இந்திய விடுதலைத் திருநாளைக் கொண்டாடும் இந்த 2022 ஆம் ஆண்டில், சிறுபான்மையினர் புறக்கணிப்பு பிரச்சனை குறித்த அம்பேத்கரின் கருத்துகளை நாம் மீண்டும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

சிறுபான்மையினர் பிரச்சனை குறித்து வெகுண்டெழுந்து முழங்கிய அம்பேத்கரைத் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்ளத் துடிக்கும் பிரதமர் மோடி மற்றும் அவரது அமைச்சரவை உறுப்பினர்கள், சிறுபான்மையினரைப் புறக்கணிக்க வேண்டும் என்று பா.ஜ.க சட்டமன்ற உறுப்பினர்கள் துணிச்சலாகக் கூச்சலிடும் போது, மவுனமாக இருப்பது ஏன்?

உண்மையில், அம்பேத்கரின் இலட்சியம் மற்றும் அரசியல் நிர்ணய சபையின் சட்டமியற்றும் நோக்கம் ஆகியவற்றுடன் பிரதமர் இசைவு கொண்டவரில்லை என்பதையே அவரின் மவுனம் எடுத்துக்காட்டுகிறது.

அரசியலமைப்பு நெறிமுறைகளை அம்பேத்கர் உணர்வுப்பூர்வமாக உயர்த்திப் பிடித்தார். மதச்சார்பின்மை, பன்மைத்துவம், அனைவரையும் அரவணைத்துச் செல்வது ஆகிய அரசியலமைப்பின் மாண்புறு இலட்சியங்களை உயர்த்திப் பிடித்திட, ஒவ்வொரு குடிமகனும் அரசியலமைப்பு நெறிமுறைகளை உள்வாங்கி வளப்படுத்திக் கொள்ள வேண்டியது திட்டவட்டமான அவசியக் கடமை ஆகும் என்ற கருத்தை அவர் அழுத்தந்திருத்தமாக வலியுறுத்தியுள்ளார்.

'உங்கள் முன்னேற்றம் உங்கள் கரங்களில்' என்று பிரதமர் வாய்ஜாலம் செய்து வருகிறார். ஆனால், நடைமுறையில் அவரும், அவரது கட்சியும் சிறுபான்மையினரைக் குறிவைத்து தாக்குகிறார்கள். அவரது கட்சிக்காரர்களும், கட்சியைச் சார்ந்தவர்களும் முஸ்லீம்களைப் புறக்கணிக்கவும், அழித்தொழிக்கவும் அறைகூவல் விடுக்கும் போது கள்ள மவுனம் சாதிக்கிறார்.

இது போன்ற மோசமான போக்குகளால், இந்தியாவின் பெருமை சர்வதேச அரங்கில் சீர்குலைந்து வருகிறது. பா.ஜ.க வின் செய்தித் தொடர்பாளர் ஒருவர் முகமது நபி குறித்து வெளியிட்ட இழிவான கருத்து காரணமாக, சுதந்திர இந்தியாவின் வரலாற்றில் முதல் முறையாக, வளைகுடா நாடுகளில் இந்திய பொருள்கள் புறக்கணிப்பு நடந்தது; இந்தியா மன்னிப்பு கோர வேண்டும் என்று அந்நாடுகள் மிகவும் அழுத்தமாக வலியுறுத்தின. இது போன்ற நிகழ்வுகள் அனைத்தும் இந்தியாவில் நிகழும் மனித உரிமை மீறல்களை எடுத்துக்காட்டுகின்றன.

இந்தியாவின் ஜனநாயக, மதச்சார்பற்ற மாண்புகள் சர்வதேச அளவில் மங்கி மறைந்து வருகிறது. ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட எதேச்சதிகார நாடு என்றும் ஓரளவு சுதந்திரம் உள்ள நாடு என்றும் நமது நாடு வர்ணிக்கப்படுவது வேதனைக்குரியதாக இருக்கிறது.

நமது நாட்டின் அரசுப் பொறுப்பில் உள்ளவர்களே அரசியலமைப்பு, அரசியலமைப்பின் நெறிமுறைகள் மற்றும் அரசியல் நிர்ணய சபையின் சட்டமியற்றும் நோக்கம் ஆகியவற்றைத் திட்டமிட்டு மதிப்பிழக்கச் செய்வதைக் கண்டு அம்பேத்கர் அதிர்ச்சியில் ஆழ்ந்திருக்கக் கூடும்.

அரசியலமைப்பின் நோக்கங்களை வென்றெடுக்க அரசியலமைப்பு ரீதியிலான வழிமுறைகளை ஏற்க வேண்டும் என்று அவர் அறைகூவல் விடுக்கிறார். வேறு வகையான எந்தவொரு வழிமுறையும் அராஜகத்திற்கான இலக்கணத்தையே இயற்றும் என்றும் அவர் எச்சரித்தார்.

முஸ்லீம்களை அழித்தொழிப்பது, சமூக மற்றும் பொருளாதார ரீதியாக அவர்களைப் புறக்கணிப்பது, அவர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப்படும் கொடுமைகளுக்கான அறைகூவல்கள் ஆகியவை அராஜகப் போக்கிற்கே இட்டுச் செல்லும் என்பதோடு மட்டுமின்றி, எந்தவொரு அதிகார பலத்தாலும் கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு நிரந்தரமான சமூக மற்றும் பொருளாதார பேரழிவை உண்டாக்கும். எனவே, அம்பேத்கர் எழுப்பிய அந்தப் பிரச்சனைகள் குறித்து இந்தியாவை ஆட்சி செய்பவர்கள் கவனமாகச் சிந்திக்க வேண்டும்; வரவிருக்கும் பேரிடரில் இருந்து இந்தியாவைப் பாதுகாக்க அரசியலமைப்பு ரீதியிலான வழிமுறையை ஏற்க வேண்டும்.

**தமிழில்: அருண் அசோகன்**



க.பாரதி

# உயிரைக் கொல்லும் ஆன்லைன் சூதாட்டம்



**தமிழகத்தில் ஆன்லைன் ரம்மி உள்ளிட்ட ஆன்லைன் விளையாட்டுகள் (சூதாட்டம்) மூலம் பணத்தை இழந்து, தற்கொலை செய்வோர் எண்ணிக்கை அதிகரித்து வருவது வேதனை அளிப்பதாகவும், அதிர்ச்சி அளிப்பதாகவும் உள்ளது.**

இந்தியா முழுவதும் பணத்தை வைத்து விளையாடும் எண்ணற்ற ஆன்லைன் சூதாட்ட செயலிகள் பெருகிவிட்டன. தமிழ்நாட்டில் கடந்த இரண்டு ஆண்டுகளில் ஆன்லைன் ரம்மி விளையாட்டு மூலம் பணத்தை இழந்து, 33 பேர் தற்கொலை செய்துள்ளனர்.

இந்த சூதாட்டங்களை பற்றிய ஆயிரக்கணக்கான, வஞ்சகத்தனமான குறுஞ்செய்திகள் மக்களுக்கு அனுப்பப்பட்டது. திரைத்துறை நடிகர்கள், பிரபலமான விளையாட்டு வீரர்கள் யூடியூபில் பிரபலமானவர்கள் தாங்கள் இதன் மூலம் எவ்வளவு பணம் சம்பாதிக்கிறார்கள் என்று பெருமை பேசி இந்த செயலியை விளம்பரப்படுத்தி, பிரபலப்படுத்தினார்கள்/

இந்த சூதாட்டங்களின் மூலம் தினசரி வருமானத்தை திரட்டுவதற்கான குறிப்புகளையும் வழங்கினர். இவை தந்திரங்கள் என்பதை மக்கள் புரிந்து கொள்ளவில்லை. வரவேற்பு தொகையில் மட்டும் விளையாடிவிட்டு எவ்வித பாதிப்பும் இல்லாமல் தப்பித்து விடலாம் என நினைத்தால்,அது அரிதாகவே நிகழ்கிறது. ஏனெனில், பெரும்பாலான செயலிகளில் வரவேற்புத் தொகையை பெறுவதற்கு ஆரம்பக் கட்டணத்தை செலுத்த வேண்டி உள்ளது. இதற்காக வாடிக்கையாளர்களின் வங்கி கணக்கை இதனுடன் கட்டாயம் இணைக்க வேண்டும்.

எனவே, செயலில் உள்ள பணத்தை இழந்தவுடன் இழந்ததை மீட்க நாம் தன்னிச்சையாக வங்கி கணக்கில் உள்ள பணத்தை மீண்டும் அந்த செயலியில் கொட்ட அது வழி வகுக்கிறது. வரவேற்பு தொகையை தொடக்கத்திலேயே பயன்படுத்தும் நிலை இருந்தால், அதை மட்டும் வைத்து விளையாடிவிட்டு நம்மால் இதில் வெற்றி பெற முடியாது. என்பதை உணர்ந்து வெளியேறி விடுவர் என்பதை திட்டமிட்டு, இந்தக் கன்னி வைக்கப்பட்டுள்ளது .

இந்த செயலிகள் தங்கள் சதி திட்டங்களை இத்துடன் நிறுத்திக் கொள்வதில்லை. இதன் பின்னர், பயனாளர்களை சலுகைகள் மற்றும் தள்ளுபடிகள் பற்றிய அறிவிப்புகளை இடைவிடாமல் அனுப்புவதன் மூலம் செயலியில் மேலும், அதிக பணத்தை கொட்ட பலவிதமான நுட்பங்களை நிறுவனங்கள் பயன்படுத்துகின்றன.

ஆன்லைன் ரம்மி விளையாடும் போது தொடக்கத்தில் ஒரு சில ஆட்டங்களில் வெற்றி பெறுவர். அதனால், தொடர்ந்து வெற்றி பெறலாம் என்று நம்பி அடுத்தடுத்து கூடுதலான பணத்தைக் கட்டி விளையாடுவார்கள்.

ஆனால், யாரேனும் ஒருவர் மட்டுமே வெற்றி பெற முடியும். மற்றவர்கள் தோல்வியடைந்து பணத்தை இழப்பதுதான் சூதாட்டத்தின் சிறப்பு .

சூதாட்ட போதை இதை பரிசீலிப்பதில்லை. இதனால், அதிக பணத்தை கட்டி இழந்தவர்கள் விரக்தியில் தற்கொலை செய்து கொள்கின்றனர்.

இந்தியாவில் சூதாடினால் சூதாட்ட பொதுச்சட்டம் 1867 இன் கீழ் வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோல், தமிழக விளையாட்டு சட்டத்தின் கீழ் பணம் வைத்து சீட்டாடுவது தடை செய்யப்பட்டுள்ளது.

ஆனால், இதே சூதாட்டம் ஆன்லைனில் நடைபெற்றால், அது குற்றமாக வரையறுக்கப் படுவதில்லை.

இதன் காரணமாக, மக்கள் மத்தியில் கடுமையான எதிர்ப்பு எழுந்ததின் அடிப்படையில், முதலில் ஆன்லைன் ரம்மி தடைக்கான அவசர சட்டத்தையும், பின்னர் சட்டமன்றத்தில் நிரந்தர சட்டத்தையும் தமிழ்நாடு அரசு கொண்டுவந்தது.

அவசர சட்டத்துக்கு ஒப்புதல் அளித்த ஆளுநர் ஆர்.என்.ரவி நிரந்தர சட்டத்துக்கு ஒப்புதல் அளிக்க தொடர்ந்து மறுத்து வருகிறார். உலகமயமாக்கல் கொள்கை அமல்படுத்தப்பட்ட பின்னர், அனைவரும் போட்டி போட்டுக்கொண்டு பணம் ஈட்டுவதிலும், ஆடம்பர பொருட்களை சேகரிப்பதிலும் தனது அந்தஸ்தை உயர்த்திக் கொள்ள முடியும் என நம்புகின்றனர். நுகர்வு பொருட்களும், ஆடம்பர பொருட்களும் முதலாளிய உற்பத்தியில் திட்டமிட்டு குவிக்கப்படுகின்றன. இவற்றை வாங்குவது சமூக அந்தஸ்துக்கு அடையாளமாக கருதப்படுகிறது.

ஒருபுறம் அடிப்படை தேவைகளை கூட நிறைவேற்றிக் கொள்ள மக்கள் போராடும்போது இன்னொரு புறம் நுகர்வு பொருட்களையும், ஆடம்பர பொருட்களையும் வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் போது தனிநபர் வருமானம் என்பது யானை பசிக்கு சோளப் பொறியாக உள்ளது.

**ஒன்றிய அரசின் தவறான பொருளாதார கொள்கைகளால் வேலையின்மை, பசி, பட்டினி, பஞ்சம் என்பது தொடர்ந்து அதிகரித்து வருகிறபோது இதிலிருந்து மீண்டு தங்களுடைய வாழ்க்கையை நடத்திக் கொள்ள “அதிர்ஷ்டம் ”என்ற நம்பிக்கையில் மக்கள் மூழ்கி விடுகின்றனர்.**

இதனால், விளையாட்டுகள் எல்லாம் தற்போது சூதாட்டங்களாக மாறி, பணம் சம்பாதிக்கும் ஆசையை மக்களுக்கு தூண்டி, அவர்களைக் கடன்காரர்கள் ஆக்கி, கார்ப்பரேட்டுகளின் லாபத்தை பெருக்கும் கருவிகளாக மாறிவிட்டன.

கிரிக்கெட், கால்பந்து, ஹாக்கி போன்ற விளையாட்டுகள் உடல் திறன் மேம்பாடு என்ற நிலையைத் தாண்டி, கார்ப்பரேட் வணிக நலனுக்காகவே என்று மாறி விட்டன.

ஆகவே, இந்த விளையாட்டு போட்டிகளின் மூலம் நடைபெறும் சூதாட்டங்களால், தாங்கள் உழைத்து, சம்பாதித்த பணத்தை பறிகொடுத்து வந்த மக்கள், சமீப காலமாக ஆன்லைன் விளையாட்டுகளில் தங்கள் பணத்தை பறிகொடுப்பதோடு, தற்கொலையும் செய்து கொள்கின்றனர்.

**ஆளுநர் ஆன்லைன் சூதாட்ட தடை சட்டத்துக்கு ஒப்புதல் அளிக்காமல், மறுத்து வருவதற்கு இந்த ஆன்லைன் சூதாட்டங்களில் புழங்கும் பணம் சுமார் 61 ஆயிரம் கோடி ரூபாய் என மதிப்பிடப்படுகிறது.**

ஏஸ் உத்ரி, போக்கர் டேங்கல், பாக்கெட் 52, கேங்டோ க்ளப் இப்படி பல பெயர்களில் 132 ஆன்லைன் சூதாட்ட விளையாட்டு செய்திகள் உள்ளன.

இவற்றை ஜங்கிலி கேம்ஸ், ப்ளே கேம்ஸ், ரீட் டிஜிட்டல், கே .பி. எம். ஜி, ஆர்.ஜி. எப் போன்ற சர்வதேச கார்ப்பரேட் கம்பெனிகள் நடத்துகின்றன. இதன் மூலம் ஒவ்வொரு நிறுவனமும் பல்லாயிரம் கோடி ரூபாய் லாபம் ஈட்டுகிறது.

ஆன்லைன் ரம்மி என்பது திறமை சார்ந்த விளையாட்டு; சூதாட்டம் அல்ல என்று உச்ச நீதிமன்றம் பல தருணங்களில் தீர்ப்பளித்துள்ளது .

சட்ட ஆணையமும் இதே கருத்தை தான் தெரிவிக்கிறது. அந்த அடிப்படையில் தான் ஆன்லைன் ரம்மி உள்ளிட்ட விளையாட்டுகளை தடை செய்ய முடியாது, முறைப்படுத்துவதற்கு மட்டுமே முடியும் என்று கூறி ஆன்லைன் சூதாட்ட தடை சட்டம் செல்லாது என சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.



இத்தகைய விளையாட்டுகளில் திறமையின் கூறுகளை எவ்வாறு அளவிடுவது என்பது குறித்து ஆராய்ச்சியாளர்களிடையே பல்வேறு வழிமுறைகள் உள்ளன. ஒரு பொதுவான சோதனையானது, ஒரு குழுவில் ஒருவர் மற்றொருவருடன் தொடர்ந்து விளையாட அனுமதித்து, ஒவ்வொரு ஆட்டத்திற்குப் பிறகும் ஆட்டக்காரர்களின் முடிவை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடுவதும் ஆகும். சிலரால் மற்றவர்களை தொடர்ந்து தோற்கடிக்க முடிந்தால், அந்த விளையாட்டில் திறமையின் கூறு உள்ளது. மேலும், அது நிலையான வெற்றியாளர்களைக் கொண்டுள்ளது.

இதுபோன்ற மற்றொரு நிலையில், குறைந்த தர மதிப்பீட்டை பெற்ற வீரர், அதிக மதிப்பீட்டைப் பெற்ற வீரரை தோற்கடிக்கும் எண்ணிக்கையை வைத்து விளையாட்டின் சீரற்ற தன்மையின் ஆதிக்கம் தீர்மானிக்கப்படுகிறது. இதில், அதிக மதிப்பீட்டைப் பெற்ற வீரர் கணிசமான முறையில் தொடர்ந்து தோற்கடிக்கப்படும் போது, அவற்றில் மற்ற காரணிகளின் தாக்கமும், ஆதிக்கம் செலுத்துகிறது என்பதை கண்டறியமுடியும். இதையே விளையாட்டில் உள்ள சீரற்ற தன்மை என்கிறோம்.

இத்தகைய சோதனைகள் முடிவுகள் பலவிதமான விவரங்களை வழங்குகின்றன. இதன் மூலம் இரண்டு வகையான விளையாட்டுகளுக்கும் (திறன் அல்லது வாய்ப்பு) இடையேயான எல்லைகளை வரையறுக்க முடியும். இத்தகைய தொழில்நுட்ப முடிவுகள் வசதியானவை, இவற்றிலிருந்து விளையாட்டுகளை வாய்ப்பு அடிப்படையிலானதா? அல்லது திறன் அடிப்படையிலானதா? என எளிதில் வகைப்படுத்தலாம். ஆனால், வீரர்கள் ஏன் இவ்வகை விளையாட்டுகளில் மூழ்கி, யதார்த்த உணர்வை இழந்து மீண்டும் மீண்டும் விளையாட தூண்டப்படுகிறார்கள்? என்பதை ஆராய்ச்சியாளர்கள் விளக்கவில்லை.

நீதிமன்றங்கள் இந்த விளையாட்டுகள் தொடர்பான கேள்விகளை சரியான கோணத்தில் விவாதிக்குமேயானால், இவை வாய்ப்பு அல்லது திறன் அடிப்படை யிலானது என்பதையும் தாண்டி வேறு நிலைக்கும் செல்லக்கூடும்.

இத்தகைய சூதாட்டங்கள் விளையாடுபவரை அதிக பணத்தை வெல்ல முடியும் என்ற கற்பனையில் மூழ்கடிக்கும் தன்மையை கொண்டுள்ளன. போட்டியில் பணத்தை வெல்ல தனக்கு நல்ல வாய்ப்பு இருப்பதாக நினைக்கும் போது மட்டுமே ஒரு வீரர் அந்த விளையாட்டில் பங்குபெறுகிறார். அவர் தன்னை புத்திசாலி என்று கற்பனை செய்து கொள்வதோடு, குறைந்த முயற்சிகளுக்கு ஈடாக பெரிய வெகுமதிகளை வெல்ல முடியும் என நம்புகிறார். இது யதார்த்தத்தை புறக்கணிப்பவர்களின் கருத்தாகும்.

சீரற்ற நிலையில் இருக்கும், ஆனால் பந்தயம் கட்டப்படாத ‘லுடோ’ விளையாட்டில், நகர்த்துவதற்கு ஒரு துண்டைத் தேர்ந்தெடுப்பது மட்டுமே விளையாட்டில் வெற்றி பெறத் தேவைப்படும். இருப்பினும், பந்தயம் கட்டப்பட்ட சூதாட்டத்தில், வீரர்கள் வெற்றி பெறுவது மட்டுமல்லாமல், பந்தயம் கட்டப்படும் பணத்தை பெறவேண்டும் என்ற அழுத்தத்தின் காரணமாக கடினமாக போராட வேண்டியுள்ளது. ஒரு பெரிய வெகுமதி பெற போகிறோம் என்ற எதிர்பார்ப்பின் மாயையில் இத்தகைய சூதாட்டங்களை விளையாடுகிறவர்கள், இதில் பந்தயம் கட்டப்பட்ட பணத்தை சேமிக்க அல்லது சம்பாதிக்க தம்மால் செலுத்தப்பட்ட உழைப்பை மறந்துவிடுகின்றனர்.

இங்கே கவனிக்கப்பட வேண்டிய ஒரு முக்கிய கேள்வி என்னவென்றால், அதிர்ஷ்டத்தை முயற்சி செய்ய ஒருவரைத் தூண்டுவது எது? என்பதாகும். தூண்டுவது முதலாளிய உற்பத்தி முறை அது சுரண்டலுக்குள்ளாக்கும், மக்கள் துன்ப துயரத்தில் மூழ்கும் போது, அதிர்ஷ்டம் சொர்க்கம் என்ற நம்பிக்கையை விதைத்து அவர்களை மேலும் சுரண்டுகிறது. அதற்காக அவர்களை கொலையும் செய்கிறது.

இந்த முதலாளிய உற்பத்தி முறை நீடிக்கும் வரை கார்ப்ரேட் நலனுக்காகதான் சட்டங்கள் இயற்றப்படும் சட்டங்கள் வளைக்கப்படும். தமிழ்நாடு அரசு இயற்றியுள்ள ஆன்லைன் ரம்மி தடை சட்டத்திற்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்கவேண்டும் என நாம் நிர்ப்பந்திப்பதன் மூலம், மற்ற மாநிலங்களிலும் இச்சட்டத்தை இயற்ற வைக்கலாம்.

ஒன்றிய அரசுக்கும் நெருக்கடி ஏற்படும். அதன் காரணமாக, ஒன்றிய அரசு ஆன்லைன் ரம்மி தடை சட்டத்தை கொண்டுவந்தே தீர வேண்டும். வெகுமக்களின் போராட்டத்தை கட்டியெழுப்புவோம். ஒரு சில கார்ப்ரேட் நலனுக்காக உழைக்கும் மக்கள் சாகடிக்கப்படுவதை தடுத்து நிறுத்துவோம்.

தொடர்புக்கு: 97917 53865

# நூறு சதம் சுகப்பிரசவம் சாத்தியமற்றது



ஜி.ஆர்.இரவீந்திரநாத்

**“அறுவை சிகிச்சையின்றி சுகப் பிரசவம் நடைபெறுவதை 100 விழுக்காடாக உயர்த்துவதை இலக்காகக் கொண்டு அரசு மருத்துவமனைகள் செயல்பட வேண்டும்” என தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறுவது அறிவியலுக்குப் புறம்பானது.**

இது பேறுகாலத் தாய்மார்களின் இறப்பு விகிதத்தையும், பச்சிளம் குழந்தைகளின் இறப்புவிகிதத்தையும் அதிகரிக்கும்.

இதுபோன்ற அறிவியலுக்குப் புறம்பான கருத்துக்களை பொதுவெளியில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறுவதை தவிர்க்க வேண்டும்.

தமிழகத்தில் அண்மைக் காலங்களில் “பிரசவம் என்பது இயற்கையானது. அதை வீட்டிலேயே இயற்கையாக பார்த்துக் கொள்ள வேண்டும். ஆடு, மாடுகள், கால்நடைகள் இயற்கையாக பிரசவிக்கவில்லையா?

நாம்மட்டும்ஏன்பிரசவத்திற்காக மருத்துவமனைகளை நாட வேண்டும்? மருத்துவமனைகளுக்குச் சென்றால் பல ஆயிரம் செலவாகும்.

பணத்தை பிடுங்குவதற்காக தேவையின்றி அறுவை சிகிச்சை செய்கிறார்கள்” என்றெல்லாம் நன்கு படித்தவர்களே கருத்துக்களை பரப்புகின்றனர். நவீன அறிவியல் மருத்துவத்திற்கு எதிராக செயல்படுகின்றனர். இது சரியல்ல. அரசு மருத்துவமனைகளில் கட்டணக் கொள்ளை எங்கே நடைபெறுகிறது? தவறான கருத்துக்களின் தாக்கத்தால், வீட்டிலேயே “யு டியூப்” பார்த்து பிரசவம் பார்க்கும் நிகழ்வுகளும் நடக்கின்றன. இதில் சில தாய்மார்களும் இறந்துள்ளனர்.

எனவே, மருத்துவ அறிவியல் மீது நம்பிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டிய நேரத்தில் அதை தகர்க்கக் கூடாது. சுகப்பிரசவம் குறித்தே தவறான கண்ணோட்டம் உள்ளது.

**பெண்ணின் பிறப்பு உறுப்பு வழியாக குழந்தை பிறந்தாலே (vaginal delivery) அது சுகப்பிரசவம் ஆகிவிடாது. பிரசவம் முடிந்த பின்னர் குறைந்தது சில நாட்கள் ஆகும் வரை தாயும், சேயும் ஆரோக்கியமாக இருந்தால் மட்டுமே அப் பிரசவத்தை சுகப்பிரசவம் என்று கூற முடியும்.**

இத்தகைய சுகப்பிரசவம் எனச் சொல்லப்படுவனவற்றில், பல நேரங்களில் பல்வேறு சிக்கல்கள் உருவாகின்றன. பிரசவத்திற்குப் பிறகு ஏற்படும் கடும் இரத்தப்போக்கின் காரணமாக மட்டுமே ஏராளமான தாய்மார்கள் இறக்கிறார்கள். பல பச்சிளங் குழந்தைகள் பல காரணங்களால் இறக்கின்றன. இவற்றை எவ்வாறு சுகப்பிரசவம் எனக் கூறுவது?

நவீன அறிவியல் மருத்துவத்தை எதிர்க்கும் பல அமைப்புகள், பிற்போக்கு சக்திகள், பழமைவாதிகள், சிசேரியன் என்றாலே பெரிய கேடு, கொலைக்குற்றம் என்ற எண்ணத்தை மக்களின் மனதில் பதிய வைத்து வருகின்றன. அதற்கு வலுசேர்க்கும் வகையில் சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியம் அவர்களின் கருத்து அமைந்துள்ளது மிகுந்த அதிர்ச்சியையும், வருத்தத்தையும் தருகிறது.

அமைச்சர் அவர்கள் “100 சதவீத சுகப்பிரசவம் செய்வதுதான் இலக்கு” என்று பேசி வருவது, சிசேரியன் அறுவை சிகிச்சையை ஏதோ குற்றச் செயல், அவசியமற்ற ஒன்று என்பதை போன்ற தோற்றத்தை உருவாக்குகிறது.

சிசேரியன் அறுவை சிகிச்சை தாயின் உடல் நிலை கருதியும், குழந்தையின் உடல் நிலை கருதியும், கருப்பையில் உள்ள குழந்தைகளின் எண்ணிக்கை கருதியும், குழந்தை மற்றும் நஞ்சுகொடி இருக்கும் நிலை கருதியும், தாய், சேய் உயிர்களைக் காக்க செய்யக்கூடிய அறுவை சிகிச்சையாகும்.

கர்ப்பப்பை வாய் சரியாக விரிவடையாத நிலை, குறுகலாக பெண்ணின் இடுப்பு எலும்பு இருத்தல், பிறப்பு உறுப்பு வழியாக குழந்தை வெளி வர முடியாத வகையில் குழந்தையின் தலை பெரியதாக இருக்கும் நிலை (CPD) குழந்தை எடை



அதிகமாக இருத்தல், தலை மேலாகவும், புட்டம் கீழாகவும் (breach) இருக்கும் குழந்தை, தாய்க்கு மிக உயர் இரத்த அழுத்தம் இருத்தல், நஞ்சுக்கொடி முன்கூட்டியே பிரிதல் (abruption) போன்ற சிக்கல்கள் ஏற்படும் போது தாய்சேய் உயிர் காக்க சிசேரியன் தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

அண்மைக் காலங்களில் அதிகரித்து வரும், உடல் பருமன், கர்ப்பகால சர்க்கரை நோய், மிகை ரத்த அழுத்தம் போன்றவையும் சிசேரியன் அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய கட்டாயத்தை உருவாக்குகின்றன.

எனவே, எந்த ஒரு காலத்திலும் சிசேரியனே தேவை இல்லை என்ற நிலையை, 100 விழுக்காடு சுகப்பிரசவம் என்றநிலையை எட்ட முடியாது. அப்படிப்பட்ட முயற்சி அவசியமற்றது; ஆபத்தானது. எண்ணற்ற உயிர்களை பலி கொள்ளக் கூடியது.

கடந்த 50 ஆண்டுகளில் மகப்பேறு மருத்துவம், மயக்க மருத்துவம், குழந்தை மருத்துவம், (neonatal ICU), தீவிர சிகிச்சை மருத்துவம் என மருத்துவத் தொழில் நுட்பம் வளர்ந்துள்ளதால் சிசேரியன் செய்வது பாதுகாப்பான ஒன்றாக மாறி விட்டது. அறிவியல் தொழில் நுட்பம் மனித குலத்திற்கு வழங்கிய மாபெரும் கொடை அது. கோடிக்கணக்கான உயிர்களை அது காப்பாற்றியுள்ளது.

இந்தியா சுதந்திரம் பெற்ற பின் தாய், சேய் மரணம் தொடர்ந்து குறைந்து வருவதற்கு மருத்துவரீதியாக தேவைப்படும் (medically indicated) சிசேரியன் அறுவை சிகிச்சை ஒரு முக்கிய காரணமாகும்.

இன்னும் சொல்லப்போனால் பல குறைமாத மற்றும் 600 கிராம் எடை மட்டுமே உள்ள குறைமாத சிசுக்கள் கூட இன்று உயிருடன் இருப்பதற்கு காலத்தே செய்த சிசேரியன்தான் காரணம்.

பல தாய், சேய் மரண ஆய்வுகளில் (death audit) சரியான நேரத்தில் சிசேரியன் செய்யப்பட வில்லை என்பதுதான் காரணமாக கூறப்பட்டு வருகிறது.

உலக சுகாதார நிறுவனம் மொத்த பிரசவங்களில் 10 முதல் 15 சதவீதம் வரை சிசேரியன் மூலம் பிரசவம் பார்ப்பதன் மூலம் தாய், சேய் மரணங்களை குறைக்க முடியும் எனக் கூறியுள்ளது. பல ஆய்வு முடிவுகளும் அதையே கூறுகின்றன.

சிசேரியன் எந்த அளவிற்கு தாய் மற்றும் சேயின் உடல் மற்றும் உள பாதிப்புகளை குறைக்கிறது என்பது குறித்தும் ஆய்வு மேற்கொள்ள வேண்டியுள்ளது எனக் கூறியுள்ளது.

பிறப்பு உறுப்பின் வழியாக நடக்கும் சிக்கலான நீண்ட நேர பிரசவங்களால் (Obstructed loubour), பிரசவத்திற்கு பின்பு, பிறப்பு உறுப்புக்கும், மலக்குடல் அல்லது சிறுநீர்ப்பை இடையே துவாரம் ஏற்படுதல் (Recto, uretero vaginal fistula), கர்ப்பப்பை கிழிதல், வெடித்தல் (rupture uterus), போன்ற மோசமான பாதிப்புகள் ஏற்படுகின்றன.

அதேபோல குழந்தைக்கு மன வளர்ச்சிக் (mentally retarted) குறைபாடும் ஏற்படும் அபாயம் உள்ளது. சிசேரியன் அறுவை சிகிச்சையின் காரணமாக, இது போன்ற பாதிப்புகள் பெருமளவு தற்பொழுது குறைந்துள்ளன.

இது போன்ற பிரச்சனைகளை தடுத்திட, ஒரு குறிப்பிட்ட விழுக்காடு சிசேரியன் அறுவை சிகிச்சை செய்வது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

சிசேரியன் தேவையா? இல்லையா? என்ற முடிவை கர்ப்பிணி பெண்ணும், அவருக்கு சிகிச்சை அளிக்கும் மகப்பேறு மருத்துவரும் பேறுகால உடல் சூழ்நிலைகளைப் பொருத்து முடிவு செய்ய இயலும். இதில் பிறரின் தேவையற்ற அழுத்தம் தவிர்க்கப்பட வேண்டும்.

அமைச்சர் குறிப்பிடுவது போல் வரலாற்றில் எந்த ஒரு காலக்கட்டத்திலும் 100 விழுக்காடு சுகப்பிரசவம் நடக்கவில்லை.

யோகா செய்தால் சுகப்பிரசவம் நடக்கும் என்பதும் சரியல்ல. யோகாவை நீண்ட காலமாக செய்யும் பெண்களுக்கும் பல்வேறு காரணங்களால் சுகப்பிரசவம் ஏற்படாத நிலை உருவாகலாம். சிசேரியன் அவசியப்படலாம்.

பெண்களின் உடல் உழைப்பு குறைந்தது தான், சுகப்பிரசவம் இல்லாமல் போகக் காரணம் என்பதும் மேம்போக்கானதாகும். கடுமையான உடல் உழைப்பு இருந்த காலத்தில் கூட, சிசேரியன் போன்ற சிகிச்சை வசதிகள் இல்லாத காரணத்தால், பேறுகால தாய்மார்கள் இறப்புவிகிதம் அதிகமாக இருந்தது என்பதை மறுக்க முடியாது.

**சுகப்பிரசவம் ஏற்பட வேண்டும் என்பதற்காக பெண்களை கடுமையான உடல் உழைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்த முடியாது; கூடாது. இத்தகைய முயற்சிகளை சில இந்துத்துவா மருத்துவ அமைப்புகள் மேற்கொள்கின்றன.**

அம்மிக்கல், ஆட்டுக்கல்லை பெண்கள் பயன்படுத்த வேண்டும் என ஆலோசனைகளைக் கூறுகின்றன. முகாம்களை நடத்துகின்றன. இத்தகைய கொடுமைகளை, பெண்ணடிமைத்தனத்தை ஆதரித்திட முடியாது. அமைச்சரின் கருத்து அத்தகையோருக்கு துணைபுரிந்துவிடக்கூடிய ஆபத்து உள்ளது.

எனவே, சிசேரியன் என்ற உயிர்காக்கும் அறுவை சிகிச்சையை முற்றிலும் தவிர்க்க இயலாது. அதை மருத்துவ ரீதியாக அவசியப்படும் நேரத்தில், பயன்படுத்தியே தீர வேண்டும். அந்த வசதிகளை மேலும் பரவலாக்க வேண்டும்.

அதேசமயம், அவசியமற்ற முறையில், லாப நோக்கு, மருத்துவக் காப்பீடு தொகையை பெறுதல் போன்ற காரணங்களுக்காகவும், மருத்துவர்களின் விருப்பங்களுக்கு ஏற்பவும், நல்ல நாள், கெட்ட நாள், நட்சத்திரம், மாதம், சாதகம் பார்ப்பது போன்ற பல்வேறு மூட நம்பிக்கைகளாலும் சிசேரியன் செய்யப்படுவது அதிகரிக்கிறது. இவை தடுக்கப்பட வேண்டும். அதற்குரிய விழிப்புணர்வை ஏற்படுத்திட வேண்டும்.

தாய்க்கோ அல்லது சேய்க்கோ சிறிய பாதிப்பு ஏற்பட்டாலும் மருத்துவர் அலட்சியம், கவனக் குறைவு, தவறான சிகிச்சை என தகராறு செய்யும் மக்களின் மனப்பான்மையும், மருத்துவ விரோத புதியச் சட்டங்கள் போன்றவையும், நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் போன்றவையும், மகப்பேறு மருத்துவர்களை பாதுகாப்பாக மருத்துவம் செய்யும் முறைக்கு (Defensive practice) தள்ளுகின்றன. இவற்றாலும் சிசேரியன் அறுவை சிகிச்சைகள் அதிகமாகின்றன.

இயல்பான பிரசவத்தால் ஏற்படும் வலி பயத்தாலும் பல பெண்கள் சிசேரியனை விரும்புகின்றனர். இதற்கு தீர்வு காண வேண்டும். வலியில்லா நவீன பிரசவ முறைகளை நடைமுறைப் படுத்த வேண்டும்.

தொடர்புக்கு: 9940664343

## தோழர் ஜியாங் ஜெமின் மறைவு

சீனாவின் முன்னாள் அதிபர் ஜியாங் ஜெமின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது. இது குறித்து கட்சியின் தேசிய செயற்குழு வெளியிட்டுள்ள இரங்கல் குறிப்பு பின்வருமாறு:

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளரும், சீனாவின் முன்னாள் அதிபருமான ஜியாங் ஜெமின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது. அவர் 2022 நவம்பர் 30 அன்று காலமானார். சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவிற்கும், அதன் அனைத்து உறுப்பினர்களுக்கும், சீன மக்களுக்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு கட்சியின் தேசிய செயற்குழு வெளியிட்டுள்ள இரங்கல் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



கே.கதிரவன்

**உயர்கல்வியை முடித்து வெளிவரும் மாணவர்கள் வேலைவாய்ப்பு பெறுவதில் பெரிய இடர்பாடு உள்ளது. ஆகவே மாணவர்கள் வேலைவாய்ப்பு பெறும் வகையில் பாடத் திட்டங்களை மாற்றியமைக்க கல்விக் கொள்கை 2022 பரிந்துரை செய்துள்ளது. ஆனால் கல்வி என்பது மாணவர்களின் அறிவை வளர்ப்பதற்காகவா? அல்லது மாணவர்களை ஊழியர்களாக/ தொழிலாளர்களாக ஆக்குவதற்கான பயிற்சி கூடங்களாக கல்வி நிலையங்களை உருவாக்க போகின்றோமா? என்று தெரியவில்லை.**



# மாணவர்களின் எ
# சிதைக்கும் கல்

தற்பொழுது அனைத்து தளங்களிலும் வேலைவாய்ப்புக்கு ஏற்ற படிப்பை நாம் தர வேண்டும் என்ற குரல் ஒலித்துக்கொண்டு உள்ளது.

ஆனால் வேலைவாய்ப்பு அளிக்கின்ற எவ்விதமான துறை தற்போது வளர்ச்சி பெற்றுக் கொண்டுள்ளது என்ற தரவுகள் இல்லை. அதுபோல் அந்த வேலைக்கு என்னவிதமான பட்டப்படிப்புகளை அல்லது தொழிற்கல்வியை நாம் தரவேண்டும் என்ற தரவுகளும் இல்லை, அதுபோல் இந்த வேலை வாய்ப்பிற்கு ஏற்ற படிப்புகளை சொல்லித் தருவதற்கு ஏற்ற சிறப்பு ஆசிரியர்களும் இங்கு இல்லை.

சந்தைக்கு (Market) ஏற்ற பாடங்களை நாம் கற்றுத் தரவேண்டும் என்று தேசியகல்விக் கொள்கை கூறுகின்றது. ஆனால் எந்த விதமான சந்தை இங்கு நிலவுகிறது என்று எந்த தகவலும் இல்லை. கடந்த 10 ஆண்டுகளில் எந்த விதமான சந்தை வளர்ச்சி பெற்றுள்ளது வரும் காலங்களில் எவ்விதமான சந்தைக்கு அதிகமான ஊழியர்கள் தேவைப்படுவார்கள் என்ற புள்ளி விவரம் நம்மிடம் இல்லை.

ஆனால் தற்போது வீட்டிற்கு அன்றாடம் தேவைப்படும் உணவு பொருட்களை அளிக்கும் சேவைநிறுவனங்கள்தான் அதிக அளவில் வளர்ச்சி பெற்று வருகின்றன. இதுபோன்ற சேவைத் துறைக்கு எந்தவித பட்டப்படிப்பும் தேவையில்லை.

பல்கலைக்கழக மானியக் குழு அறிவுறுத்தி இருப்பது சந்தைக்கு ஏற்ப பாடத்திட்டங்களை நாம் உருவாக்க வேண்டும், எதிர்வரும் காலங்களில் அந்த பாடத்திட்டங்கள் சந்தைக்கு சாத்தியப்படவில்லை அல்லது மாணவர்கள் விருப்பப்படவில்லை என்றால் அந்தபாடத்திட்டத்தை கைவிட்டு விடலாம், அதாவது பாடத் திட்டங்களை உருவாக்கி பின்பு அது மாணவர்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்கக்கூடியதாக இல்லை என்றால் அதை நிறுத்தி விட்டு வேறு ஒரு பாடத்தை நாம் உருவாக்கலாம் என்பதாக பொருள் கொள்கிறது.

இந்தக் கொள்கையினால் கல்லூரி முதலாளிகளுக்கும் அல்லது ஆசிரியர்களுக்கும் எந்தவித பாதிப்பும் இருக்கப்போவதில்லை, இதை கற்ற மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும்.

கடந்த 20 ஆண்டுக்கு முன்பாக கல்லூரிகளில் அறிவியல் பட்டப்படிப்பை படிக்க ஆர்வம் கொண்ட மாணவர்களை அதிக அளவில் ஈர்த்த பட்டப்படிப்பு உயிர் தொழில்நுட்பவியல். இதன் காரணமாக உயிர் தொழில்நுட்பவியல் (Biotechnology) என்ற துறை ஆரம்ப காலங்களில் பல்கலைக்கழகங்களில் மட்டும் ஆரம்பிக்கப்பட்டது. அதன் பிறகு புற்றீசல் போல் அனைத்து தன்னாட்சி மற்றும் சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் நிர்வாக (Management Course) பாடப்பிரிவாக இந்தப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

இப்பிரிவில் வருடத்திற்கு கிட்டத்தட்ட15,000 முதல் 30 ஆயிரம் மாணவர்கள் வரை படித்தனர். பின்பு அண்ணா பல்கலைக்கழகத்தை சார்ந்த அனைத்து தொழில்நுட்ப கல்லூரிகளிலும் உயிர் தொழில்நுட்பவியல் துறை ஆரம்பிக்கப்பட்டு வருடத்திற்கு 30 ஆயிரம் மாணவர்கள் பயின்றனர். இன்று பெரும்பாலான உயிர் தொழில்நுட்பவியல் படித்த மாணவர்கள் வேலைவாய்ப்பு இன்றி நிற்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.

ஏனென்றால் தமிழகத்தில் 100 முதல் 150 உயிர் தொழில் நுட்பவியல் துறையை சார்ந்த தொழிற்சாலைகள் மட்டும் இயங்கி வருகின்றன. உயிர் தொழில்நுட்பவியல் துறை போல் மைக்ரோ பயாலஜி, பயோகெமிஸ்ட்ரி போன்ற பாடப்பிரிவுகளில் பட்டம் பெற்ற மாணவர்களும் தற்போது படிப்பிற்கு ஏற்ற வேலை கிடைக்காமல் தவித்து வருகின்றனர். இதனால் தற்போது பெரும்பாலான தொழில்நுட்பக் கல்லூரிகளில் இருந்த உயிர் தொழில்நுட்பவியல் துறை மூடுவிழா கண்டு வருகின்றது.

அதுபோல் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலும் மாணவர் சேர்க்கை குறைந்து கொண்டு வருகின்றது. உயிர் தொழில்நுட்பவியல் துறையினால் கல்வி வியாபாரிகள் பலன் அடைந்தனர். ஆனால் இதை கற்ற மாணவர்கள் இன்றளவும் வேலைக்காக போராடி வருகின்றனர். தமிழகத்தின் உயர் கல்வித் துறையின் கீழ் உள்ள அரசு கல்லூரிகளில் இத்துறை ஒரே ஒரு கல்லூரியில் மட்டும் அரசு உதவிபெறும் பாட பிரிவாக அமைந்துள்ளது. மற்றபடி இந்த பாடப்பிரிவு தமிழகத்தில் வேறு எந்த அரசு கல்லூரிகளிலும் நடத்தப்படவில்லை, அப்படி என்றால் ஏன் அரசு கல்லூரிகளில் பாடப்பிரிவு ஆரம்பிக்கப்படவில்லை, தனியார் கல்லூரிகளில் மட்டும் நடத்தப்படுவதன் நோக்கம் என்ன என்பதை நாம் அறிய வேண்டும்.

**சந்தையை மனதில் கொண்டு நாம் பாடப்பிரிவுகளை ஆரம்பித்தால், அது வருங்கால சந்ததியினரின் வாழ்க்கையை கேள்விக்குறியாகிவிடும். இதனால் கல்வி வியாபாரிகள் அதிக பணத்தை ஈட்ட முடியுமே தவிர மாணவர்களுக்கு எந்த பலனையும் தர இயலாது.**


அரசு உதவி பெறும் தன்னாட்சி கல்லூரிகளில் வணிகவியல் துறை என்பது கல்லூரிகளின் வணிகத்தை பெருக்குவதற்காக உருவாக்கப்பட்டுள்ளதாக தெரிகின்றது, ஏனென்றால் வணிகவியல் துறை மூலமாக குறைந்தது 10 வித பட்டப் படிப்புகளை

---



அசோகன்

# வீணை



**உலகத்தில் உள்ள பெரும்பாலான உயிரினங்களிலும் ஓசை உள்ளது. இசையின் அடிப்படை இந்த ஓசை தான். இந்த இசை முற்றிலும் உடலை விட்டு வெளியேறினால் அந்த உயிரினம் இறந்து விட்டதாக பொருள்.**

ஆப்பிரிக்கா ..ஆசியா.. ஐரோப்பா.. கண்டங்களில் வாழ்ந்த ஏதோ ஒரு பண்டைய இனக்குழு தான் வண்டு துளைத்த மூங்கில் மர சத்தத்தை வைத்து புல்லாங்குழல் கண்டுபிடிக்கப்பட்டது.

பின்பு பரிணாம வளர்ச்சியின் காரணமாக புல்லாங்குழல் மிருகங்களின் கொம்பு – எலும்புகளில் இசைக்கப்பட்டது. பின்பு வில்லில் இருந்து வெளிவரும் “"நாண்"" என்ற கயிற்றின் அதிர்வு அலைகள் ஒளியால்"" யாழ்"" என்ற இசை பிறந்தது .உலகில் வாழும் மனித இனக்குழு வாழ்வியல், இடம், சூழ்நிலைக்கு ஏற்ப இசைக் கருவிகளும் மாறின.

ஓர் இனக் குழுவை கட்டுப்படுத்த இயல் இசை நாடகத்தின் மேல் கை வைத்து சீரழித்து விட்டால் அந்த இனம் தனது தாய்மொழி, பண்பாட்டை இழந்து விடும்.

பலா மரத்தின் தரையின் தூர் பகுதியை குடை போல் குடைந்து குப்பனும்.. சுப்பனும்.. வெட்டி எடுக்க...வீரனும் .. சூரனும்... தங்கள் மேல் அதிகாரிகள் தங்கியுள்ள கோட்டை பகுதியில் ஒப்படைக்க... வீணையை குல தொழிலாக வேலை செய்யும் காடையனும் அவன் மனைவி கௌதாரியும் பலாமரத்தின் அடிப்பகுதியை குடை போல் குடைந்து எடுக்க வில் பாட்டு வீர பரம்பரையைச் சேர்ந்த இசைக் கலைஞர்கள் அதற்கு நரம்பு என்னும் நாண் பிடித்து வீணையாக செய்ய அந்த வீணை தான் வித்வான்கள் கையில் மிளிரும் கோவில் மண்டபங்களில் வாசிக்கப்படும் நடன மங்கைகள் ஆடுவார்கள்.

கி.பி. 1750 க்கு முன்பு பல இனக்குழுக்கள் தஞ்சையில் ஆட்சி அதிகார மையத்திற்கு போட்டியிட்டு தஞ்சை பகுதியை கைப்பற்றியதன் விளைவாக தமிழ், தெலுங்கு, மராட்டிய கலாச்சாரம் கலந்து பரவி இருந்தது. ஆகையால் கடைசியாக தஞ்சை பகுதியை ஆண்ட மராட்டிய இனக்குழுவு அவர்களின் பாரம்பரிய இசைகளான "கோந்தலா" என்ற நாடகமும் "லாவணி" என்ற இசையும் மக்கள் மத்தியில் திணிக்கப்பட்டு தமிழ் பண்பாட்டு கலாச்சாரம் சீரழிந்து இருந்தது .

இப்படி தமிழ் பண்பாட்டு கலாச்சாரம் சிதைந்து இருந்தாலும் கிபி 1750 க்கு பின்பு தஞ்சை தரணி முழுமையாக கும்பேனியார் நேரடி கட்டுப்பாட்டில் சென்று விட்டது. இப்படி தமிழ் கலாச்சாரம் அழியும் சூழ்நிலையில் இருந்தாலும் உலகப் புகழ்பெற்ற தஞ்சை வீணையும் அதன் ரகசியமும் ஆங்கிலேயரால் பாதுகாக்கப்பட்டது என்றே சொல்லலாம்.

ஒருவர் வீணையை தொட்டு வாசிக்க வேண்டும் என்றால் ஆங்கிலேயருக்கு கட்டுப்பட்டாராக இருக்க வேண்டும். அல்லது அவர்கள் மதம் சார்ந்து இருக்க வேண்டும். அப்படி இருந்தாலொழிய யார் கையில் வீணையை கொடுப்பது, கொடுக்கக் கூடாது என்பதை தென்னிந்தியாவின் பிரிட்டிஷ் அதிகார மையத்தின் தலைமை அதிகாரி பிரட்டிரிக் ஸ்சுவார்ட்ஸ் ( Rew: Chrisitian Fredrik Schwarts) முடிவு செய்ய வேண்டும்.

கி.பி. 1750 ஆம் ஆண்டு முதல் வீணை தரங்கம்பாடி டேனிஷ் கோட்டை, அதைத் தொடர்ந்து தஞ்சை பெரிய கோயில் சார்ந்த கோட்டையில் அவர் தங்கிய சி.எஸ்.ஐ. கிறிஸ்துநாதர் கிறிஸ்தவ தேவாலயத்தின் நுழைவு வாயிலின் அருகில் செய்யப்படுகின்றது. இவருக்குப்பின் தஞ்சை மாவட்ட பிரிட்டிஷ் கலெக்டர் முடிவு செய்தார்.இந்தியா சுதந்திரம் அடைந்து இன்று வரையிலும் உலகப் புகழ்பெற்ற தஞ்சை வீணை அந்த இடத்தில்தான் செய்யப்படுகிறது.

அப்படி இருந்த சூழ்நிலையிலும் ஒரு சில இசை மேதைகள் "தம்புரா" என்ற இசைக் கருவியில் உள்ள ஒன்பது இசை பண்புகளை சுருக்கி ஏழு வகை இசை சுவா்ணங்கலாக சுருக்கினார்கள். அந்த இசை கர்நாடக சங்கீதம் எனப்பட்டது. 9 இசை பண்புகளை 7 இசை பண்புகளாக குறைத்து எளிமைப்படுத்தியவர்களுக்கு அறிவியல் ரீதியாக அதை நிரூபிக்க முடியவில்லை. என்றே சொல்லலாம்.

# திர்கால கனவை விநிறுவனங்கள்



அளித்து வருகின்றன. ஆனால் அரசு கல்லூரிகள் இன்று வரை 2 பட்டப் படிப்புகளை மட்டும் அளிக்கின்றன.

அரசு உதவி பெறும் கல்லூரிகள் மற்றும் தனியார் கல்லூரிகள் பணத்தை ஈட்ட வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக பத்துவித வணிகவியல் பட்டப் படிப்புகளை அளிக்கின்றன. அதாவது B.Com general, B.Com Bank Management, B.Com Corporate Secretaryship, B.Com Marketing Management, B.Com Accounting and,- Finance, B.Com computer application, B.Com Honors, B.Com professional accounting and B.Com Information system and Management என்று பட்டப் படிப்புகளை அளித்து வருகின்றன.

குறிப்பாக இந்த பட்டப் படிப்புகளில் பெரும்பாலான பாடங்கள்(Syllabus) ஒன்றுக்கு ஒன்று ஒத்ததாக இருக்கின்றன ஆனால் பட்டங்கள் மட்டும் வெவ்வேறு பெயர்களில் அளிக்கப்பட்டு வருகின்றன. இதுபோன்ற பாடங்கள் அதிக வேலை வாய்ப்பை அளிக்கின்றது என்றால் ஏன் அரசு கல்லூரிகளில் இந்த பாடங்கள் ஆரம்பிக்கப்படவில்லை, இல்லை என்றால் அரசுக்கு கிராமப்புற ஒடுக்கப்பட்ட வசதியற்ற மாணவர்கள் வேலைவாய்ப்பு பெறுவதில் அக்கறை இல்லையா? உண்மையாலுமே வணிகவியல் படிப்புகளுக்கு வேலைவாய்ப்பு இருக்கிறது என்றால் ஏன் அரசு கல்லூரிகளில் ஆரம்பிக்கப்படவில்லை? என்ற கேள்வி எழுகின்றது.

வணிகவியல் துறையில் படித்தால் வேலை கிடைத்து விடும் என்ற ஒரு மாய தோற்றத்தை நம்பி பெருவாரியான மாணவர்கள் அதிக கல்விக் கட்டணத்தை அளித்து தங்களின் வாழ்க்கையை இழந்து வருகின்றனர். அதாவது பிகாம் ஜெனரல் படித்தாலும் அல்லது கல்லூரி நிர்வாகத்தினர் அளிக்கின்ற மற்ற பட்டப்படிப்புகளை படித்தாலும் வேலை என்பது ஒன்றுதான் அதாவது பிகாம் படித்து விட்டு வெளிவரும் மாணவர்கள் பெரும்பாலும் ஐடி துறையில் குறைந்தது ரூ.10 ஆயிரத்திலிருந்து ரூ 15,000 ரூபாய்க்கு அமர்த்தப்படுகின்றனர் அல்லது இவர்களுக்கு ஏதாவது ஒரு நிறுவனத்தில் குமாஸ்தாவாக அமர்த்தப்படுகின்றனர். அதிகாரிகளாக வேலை கிடைப்பதில்லை.

**வணிகவியல் துறையில் பிகாம் போன்ற படிப்புகளுக்கு அரசு நிர்ணயித்த கல்விக் கட்டணம் குறைந்தது வருடத்திற்கு 500 ரூபாய் மட்டுமே. ஆனால் அரசு உதவி பெறும் கல்லூரிகள் தங்களின் கல்லூரியின் நட்சத்திர அந்தஸ்திற்கு ஏற்றவாறு வருடத்திற்கு 80 ஆயிரம் ரூபாய் முதல் ஒரு லட்சம் ரூபாய் வரை மாணவர்களிடம் கொள்ளையடிக்கின்றனர்.**

அதிலும் பெரும்பாலான இந்த பாடத்திட்டங்கள் அரசு உதவி பெறும் பாடத்திட்டமாக இல்லாமல் மாலை நேர வகுப்புகளில் நிர்வாக( Mangement) பாடமாக அமைத்துக்கொண்டு கல்வி கட்டணத்தை வசூலித்து வருகின்றன. தாங்கள் பணம் ஈட்டுவதிலயே கவனத்தை செலுத்தி வருகின்றனர்.

வணிகவியல் பட்டப் படிப்பை விரும்பும் மாணவர்கள் தங்களுடைய பன்னிரண்டாம் வகுப்பில் வணிகவியல் பாடத்தை தேர்ந்தெடுத்து இருக்க வேண்டும் என்ற விதிகளின்படி, அரசு கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் இயங்கி வருகின்றன. ஆனால் தனியார் பல்கலைக்கழகங்கள் பன்னிரண்டாம் வகுப்பில் அறிவியல் பாடத்தினை படித்த மாணவர்களும் பிகாம் பட்டப்படிப்பில் சேரலாம் என்று தளர்வை ஏற்படுத்தி ஒவ்வொரு பாடத்திற்கும் 10 வகுப்புகளை நடத்தி வருகின்றனர். அதாவது வணிகவியல் துறையில் மட்டும் வருடத்திற்கு 2500 மாணவர்களை தங்களுக்கு ஏற்றவாறு சேர்த்து வருகின்றனர். அப்படி என்றால் ஒரு மாணவரிடம் ஒரு பருவத்திற்கு 50 ஆயிரம் ரூபாய் கல்விக் கட்டணமாக வசூலித்தால் 6 பருவத்திற்கும் சேர்த்து அம்மாணவர் மூன்று லட்சம் வரை செலுத்தி வருகின்றனர். ஆனால் 3 லட்சம் அளித்து வணிகவியல் பட்டத்தைப் பெறும் மாணவர்கள் அதற்கு ஏற்ற வேலை கிடைக்கின்றதா? என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

19 ஆம் நுற்றாண்டில் ஏற்பட்ட தொழில் புரட்சி, உலகமயமாக்கல் விளைவின் காரணமாக உருவாக்கபட்ட படிப்பு தான் இளநிலை, முதுநிலை வணிக மேலாண்மை(Business Management-BBA.MBA). ஆரம்பத்தில் இப்படிப்பு கணக்குப்பதிவு, நிதிமேலாண்மை, சந்தைப்படுத்துதல், மனிதவளம், இயங்கு மேலாண்மை என சில பிரிவுகளை கொண்டாலும் இன்று நூறுக்கு மேற்பட்ட பாட பிரிவுகளை கொண்டுயுள்ளது.

முதுநிலை வணிக மேலாண்மை படிப்பை தொடர வேண்டும் என்றால் ஆரம்பகாலகட்டத்தில் மாணவர்கள் கட்டாயம் கேட், மேட், டான்செட் நடத்தும் நுழைவு தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் ஆனால் காலபோக்கில் நுழைவு தேர்வின் பெற வேண்டிய மதிப்பெண் தளர்ச்சியின் விளைவாய் இன்று ஆண்டுதோன்றும் 20,000 மேற்பட்டோர் இப்படிப்பினை படிக்கின்றனர் ஆனால் கல்வி தகுதிக்கு ஏற்ற வேலையை வெறும் 5000 பேர் தான் பெறுகின்றனர் மீதம்யுள்ள 12000க்கு மேற்பட்ட முதுநிலை வணிக மேலாண்மை படித்தவர்கள் வேலையின்றி கல்வித்தகுதிக்கு பொருத்தம் அற்ற வேலையை செய்து வருகின்றனர்.

கல்லூரிகள் மாணவர்களை படிப்பிற்கு ஏற்ற தகுதிகளை உருவாக்காமல் அவர்களிடம் லட்ச கணக்கில் பணத்தை புடுங்கி கொண்டு தெருவில் அலையவிடுகின்றனர்.

கடந்த காலங்களில் வேலை வேலைவாய்ப்பிற்காக உருவாக்கப்பட்ட பி.காம், பி.பி.ஏ., பி.சி.ஏ., அதிலும் குறிப்பாக BSc ல் மைக்ரோ பயாலஜி, பயோ டெக்னாலஜி, பயோ கெமிஸ்ட்ரி மற்றும் BCOM போன்ற எட்டுவித படிப்புகள் அனைத்தும், அரசு கலை கல்லூரிகளில் ஆரம்பிக்கப்படவில்லை ஒடுக்கப்பட்ட மாணவர்களுக்காக இது உருவாக்கப்படவில்லை மேற்சொன்ன அனைத்து பாடப்பிரிவுகளும், தனியார் தன்னாட்சிக் கல்லூரிகளில் மாலை நேர வகுப்பாக இன்றளவும் நடந்து வருகிறது.

இதற்கான கட்டணம் ஒடுக்கப்பட்ட மற்றும் கிராமப்புற மாணவர்களுக்கு ஏற்றதாக இல்லை. ஆக தேசியக் கல்விக் கொள்கையின் படி வேலைவாய்ப்பிற்கு என்று நாம் உருவாக்க போகின்ற பாடங்கள் உண்மையாலுமே வேலைவாய்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற மாணவர்களிடம் செல்லுமா அல்லது பணம் படைத்த மேல்தட்டு மக்களுக்கு மட்டும் இது பயன்படுமா என்ற கேள்வி எழுகின்றது.

தொடர்புக்கு: 8667338638

இல்லை இது தமிழரின் குறிஞ்சி நில இசையான வில் இசையில் இருந்து திருடியது என்பது வெளி உலகத்திற்கு தெரிந்து விடலாம் எனவும் எடுத்துக் கொள்ளலாம்.

தஞ்சை தரணிக்கு புகழ் சேர்த்த ஆபிரகாம் பண்டிதர் திருநெல்வேலியில் பிறந்து கிறிஸ்தவ மதத்திற்கு மாறி ஆங்கில கல்வியில் புலமை பெற்று தானும் தன் மனைவியும் ஆங்கில ஆசிரியராக தஞ்சையில் தனது கல்வி பணி மற்றும் வாழ்க்கையை தொடங்கி இசை ஆராய்ச்சி, சித்த மருத்துவம், வானவியல், ஜோதிடம், இலக்கியம், விவசாயம் புகைப்படக் கலைஞர் என்ற பன்முகத்துடன் தஞ்சையின் முதல் அச்சகமான "லாலி" அர்ச்சகத்தை நிறுவினார்.

தனது முதல் மனைவி ஞான வடிவு பொன்னம்மாள் மரணம் அடைந்த நிலையில், இரண்டாவது மனைவியாக கோவில் பாக்கியம் என்பவரை மணந்து கொண்டார். இரண்டாவது மனைவி கும்பகோணத்தைச் சேர்ந்த இசை கலைஞர் குடும்பத்தைச் சேர்ந்தவர். யாழிசை, வீணை இசை நன்கு தெரிந்தவர். ஏற்கனவே நாகஸ்வரம் இசை, யாழ் இசை, ஆர்மோனியம் மேல்நாட்டு இசை வீணை இசை கற்று தேர்ந்த ஆபிரகாம் பண்டிதருக்கு முறைப்படி சங்கீதம் கற்ற மனைவியின் ஆதரவு கூடுதல் பலமாக இருந்தது என்றே கூறலாம்.

இதில்குறிஞ்சிநிலத்தை அடிப்படையாகக் கொண்டு வில்லில் இருந்து அம்பு வெளியேறும்போது தோன்றிய "'"நாண்"'" இசையே வில்லிசையாக மலர்ந்தது. இதுவே தமிழரின் நரம்பு தொடுத்த முதல் இசைக்கருவியாகும். நரம்பு மூலம் தமிழர் வாசித்த முதல் இசைக்கருவி யாழ் ....இதில் யாழ் என்னும் இசைக்கருவி மனித உடல் போன்றது என்கிறார் தஞ்சை ஆபிரகாம் பண்டிதர்.

பழந்தமிழர் இசை வடிவமே இந்தியாவில் பல பகுதிகளில் பல்வேறு வடிவ இசை வாத்தியங்களில் இசைக்கப்படுகிறது என்பதை நிரூபித்தார். சிலப்பதிகாரத்தில் இடம் பெறும் இசை குறித்த செய்திகள் கர்நாடக இசையில்"'" மூல இலக்கணங்களாக"'" இருப்பதை சுட்டிக்காட்டினார். இதன் மூலம் தமிழிசையே இந்தியாவின் பிற பகுதிகளிலும் இசையாக வலம் வருகிறது என்பதை நிரூபித்தார்.

தொல் தமிழ் இசையின் பண்முறையே ராகங்கள் ஆகியது. அதுவே கர்நாடக சங்கீதத்தின் அடிப்படையாகவும், இந்துஸ்தானி இசையின் ராக முறையாகவும் அமைந்தது என்றார்.

12 ராசி சக்கரம் என்பது சோதிடம் சார்ந்தது மட்டுமல்ல. அது தமிழரின் மிகப் பழமையான, வான நூல் ஆகும். மற்றும் காலத்தைக் கணிப்பது, பிற கணக்குகளுக்கும் அதுவே அடிப்படை என்று விளக்கினார்.

தமிழரின் அடிப்படை சுருதிகள் 24 என்பது பண்டிதரின் கணிப்பு, அதை 1907 ஆம் ஆண்டில் பரோடாவில் நடந்த அகில இந்திய இசைக் கலைஞர்கள் மாநாட்டில் "'"வட்டப்பாலை"'"என்ற அவரின் ஆய்வு அடிப்படை தமிழ் இசை கணக்கினை சமகால கர்நாடக சங்கீத ராகங்களையும் சுருதி கணக்கில் எடுத்துக்காட்டி விளக்கினார். அதுவரை இந்தியாவில் தோன்றிய இசை வல்லுனர்கள் எவரும் இவர் காட்டிய ஆதாரப்பூர்வமான கணித அடிப்படையில் எழுதவில்லை...? நிரூபிக்க முடியவில்லை என்பதே உண்மை. ஆகையால் அன்றைய பிரிட்டிஷ் இந்திய அரசு 1909 இல் இவருக்கு "இராவ் சாகேப்" என்ற விருதை வழங்கி பாராட்டியது.

1 செம்பாலை 2 அரும்பாலை 3 கோடிப்பாலை 4 மேற் செம்பாலை 5 படு மலைப்பாலை 6 செவ்வலி 7 விரிம் பாலை என்ற கணித கணக்கில் "வட்டப் பாலை" முறையை அமைத்து.. இவர் ஆய்வு செய்த நூலை "கர்ணாமிர்த சாகரத் திரட்டு" என்ற இசை நூலாக தொகுத்து 1917 ல் 1346 பக்கங்களுடன் வெளியிட்டார். தமிழ் இசையின் வளர்ச்சிக்கு இதுவே மூல நூலாகும்.

பரதரின் நாட்டிய சாஸ்திரம், சாரங்க தேவரின் சங்கீத ரத்னாகரம் உள்ளிட்ட பிற மொழி இசை நூல்களையும். சிலப்பதிகாரம், சங்க இலக்கியங்கள், கல்லாடாமை, தண்டியலங்காரம் போன்ற பண்டைய தமிழ் நூல்களையும் பழந்தமிழ் இசை நூல்களையும் கற்றார்.

மேல்நாட்டு கிறிஸ்தவ சங்கீதத்தை தமிழிசைக்கும், தமிழ் சங்கீதத்தை கிறிஸ்தவத்திற்கும் கொண்டு சென்ற பெருமை தஞ்சை ஆபிரகாம் பண்டிதரையே சாரும் .

சகலகலா வல்லவரான ஆபிரகாம் பண்டிதர், தமிழர்களை விட்டு விலகிச் செல்லும் தருவாயில் இருந்த யாழ் இசைக்கருவியில் இருந்து மருவி மாற்றான் கொண்டாடிக் கொண்டிருந்த வீணை இசையை மீட்டெடுத்தார். தமிழ் மொழிக்கும், தமிழ் இசைக்கும், பாரம்பரியத்திற்கும் பெருமை சேர்த்தார். தமிழராய் பிறந்த நாம் அவருக்கு பெருமை சேர்க்க வேண்டும். தனது 60வது வயதில் 1919 ல் தஞ்சையில் அவரது சித்த மருத்துவ பண்டிதர் தோட்டத்தில் இயற்கை எய்தினார்.

தஞ்சைக்கு வடக்கு மற்றும் தெற்கு கீழ தஞ்சை பகுதியில் தமிழர்களின் பாரம்பரிய இயல் இசை நாடகம் சிதைவு பெற்றது என்றே கூறலாம். அதே புதுக்கோட்டை ..மதுரை பகுதிகளில் யாழ் வீணையின் மறு உருவமான "ஆர்மோனிய இசை என்பது"' இயல் இசை நாடகத்தை காப்பாற்றி உள்ளது. அது அந்தப் பகுதியில் ஆட்சி புரிந்த தொண்டமான், சிவகங்கை ராமநாதபுரம் மன்னர்களின் ஆட்சி மற்றும் வைராக்கியமான தமிழ் மேல் பற்றுதல் உள்ள தமிழர்களின் பெருமையை சாரும். இதை யாரும் மறுக்க முடியாது.

வில்லின் நாணில் தோன்றிய யாழ் இசை 9 பண்புகளை கொண்ட தம்புரா மற்றும் 7 பண்புகளை கொண்ட வீணை இசை உலக இனக்குழுவிற்கு வாழ்வியல் பருவ கால சூழ்நிலைக்கு ஏற்ப பரிணாம வளர்ச்சி அடைந்துள்ளது. என்றால் அது உண்மையே...! ஆர்மோனிய இசை, புளூட், சரோடு, வயலின், கிட்டார் இசை இப்படியாக...

முப்பத்து முக்கோடி தேவர்களில் கலகப்பிரியர் மாமுனிவர் நாரதர் கையில் இருக்கும் "மகதி" என்ற கருவியும் வீணை தான். உலகத்தின் உயரிய விருதான ஆஸ்கார் விருது பெற்ற நமது தமிழ்நாட்டின் ஏ. ஆர்.ரகுமான் கையில் இருக்கும் ஹார்மோனியம் பெட்டியும் ஒரு வகையில் வீணைதான். கிட்டார் என்ற இசைக்கருவி மூலம் உலகையே தன்னை திரும்பி பார்க்க வைத்த மைக்கேல் ஜாக்சன் கையில் உள்ளதும் வீணை தான்.

எது எப்படியோ உலக மக்களின் மனதை ஒருநிலைப்படுத்தவும் இன்ப துன்ப காரியங்களில் நாடி நரம்புகள் முருக்கேறவும் இசை மனிதனுடன் ஒன்றுடன் ஒன்று கலந்து விட்டது என்பது மறுக்க முடியாத உண்மை.

தொடர்புக்கு: 63830 87773



பி.எஸ்.மாசிலாமணி



# கடுகை தொலைத்து எறிய மரபணு மாற்றுக் கடுகு!

**கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது. அந்த கடுகையே தொலைத்தெறிய மரபணு மாற்று கடுகுக்கு ஒன்றிய அரசு அனுமதி அளித்துள்ளது.**

பிரதமர் மோடி, இயற்கை வழி வேளாண்மையே சிறு, குறு உழவர்களை வாழ வைக்கும் என்று போகும் இடமெல்லாம் பிரச்சாரம் செய்கிறார். ஆனால் இவரது ஆட்சித் துறையின் கீழ் உள்ள இந்திய உணவு தரக் கட்டுப்பாட்டு ஆணையமோ, 2021 நவம்பர் 15 அன்று மரபணு மாற்றப்பட்ட உணவு பற்றிய வரைவு விதிமுறைகளை அறிவித்துள்ளது. உணவுப் பயிர்களில் மரபணு மாற்று முறையை குறிப்பிட்ட நிலையில் அனுமதிக்கும் வரையறுப்பை கொண்டுள்ளது என தெரிகிறது. உற்பத்தி அதிகரிப்பு என்ற ஒற்றை நோக்கில் இந்த தொழில்நுட்பம் வருவதாக சொல்லப்படுகிறது. இது உண்மை இல்லை. பி.டி:(பாசில்லஸ் துரிஜியன்ஸ்) தொழில் நுட்ப மரபணு மாற்று பருத்தி விதைகளை பயிரிட்டால் உற்பத்தி உயரும்; அமெரிக்கன் காய்ப்புழுவை அழிக் கும் திறன் கொண்ட நுண்ணுயிர் மரபணு பி.டி.பருத்திவிதைகளில் புகுத்தப்பட்டு, பூச்சிதாக்குதல் இருக்காது என்று 2002ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்டது. ஆனாலும் காய்ப்புழு தாக்குதல் உயர்ந்ததுதான் மிச்சமாகும். உற்பத்தியும் பெரிய அளவில் உயர்ந்திடவில்லை. பாரம்பரிய விதைகள் இதனால் காணாமல் போய்விட்டது. புதிய வகை பூச்சிகளும்; வீரியமிக்க களைகளும் தான் புதியதாக வந்தது. இவைகளை தடுத்திட குளுஃபோசனைட் (Glufosinate) என்ற களைக் கொல்லியை காப்புரிமை பெற்ற பேயர் என்ற பன்னாட்டு நிறுவனம் வழங்கியது. வேறு வழியில்லாமல் விவசாயிகள் கூடுதல் விலை கொடுத்து வாங்கி பல தடவை இதை தெளிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்பட்டனர். இதனால் கொள்ளை லாபம் அடைந்தது இந்தகம்பெனியே ஆகும்.

**இந்த பருத்திப் பாலை சாப்பிடும் குழந்தைகள் மற்றும் மக்களின் உடலில் நஞ்சேறியது. எண்ணற்ற ஆடுமாடுகள் பருத்திக்கொட்டைகளை, செடிகளை சாப்பிட்டுஇறந்து போயின. இந்தியாவில் இறந்துபோன விவசாயிகளில் 40 சதம்பேர்கள் பி.டி.பருத்தி சாகுபடி செய்தவர்கள் என தகவல் உள்ளது.**

இதன்பின் மறைமுகமாக வெளி உலகம் அறியாமல் 2008 வாக்கில் கத்தரி, பின் தக்காளி போன்ற உணவு பயிர்களிலும் மரபணுமாற்று வந்துள்ளது.

இந்த நிலையில்தான் ஐரோப்பிய ஒன்றியத் திற்கு 2012ல் இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்ட பாசுமதி அரிசி மரபணு மாற்றம் செய்யப்பட்டது என நிராகரிக்கப்பட்டுள்ளது. 2021ஆம் ஆண்டு இதேபோல ஏற்றுமதியான அரிசியை 500 டன் மரபணு மாற்றம் செய்யப்பட்டது என அங்கே தடுக்கப்பட்டது. மரபணு மாற்றப்பட்ட அரிசி எப்படி வந்தது? கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் ஆய்வு நடந்த போதே தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் உள்ளிட்ட அமைப்புகள் எதிர்த்து போராடின. குழந்தைகள் உணவில் மரபணுமாற்றம் முறை அனுமதி இல்லை என்று ஒன்றிய அரசின் ஆணையம் கூறுகிறது. அப்படி எனில் அதில் நஞ்சு உள்ளது என அறிந்த இத்துறை வளர்ந்தவர்கள் சாப்பிட அனுமதிக்கிறதா.? நடைமுறையில் இது எப்படி சாத்தியமாகும். சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் கீழ் உள்ள மரபணு பொறியியல் மதிப்பீட்டுக்குழு இதை அறிவித்துள்ளது.

இந்தசூழலில், மரபணு மாற்றம் செய்யப்பட்ட T.M.H-II (தாரா மஸ்டர்ட் ஹைப்ரிட் II) கடுகு பயிரை வியாபார தேவைக்காக களப் பரிசோதனை செய்திட மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் கீழ் உள்ள மரபணு பொறியியல் மதிப்பீட்டுக்குழு அனுமதித்துள்ளது. இந்த நிலையில் உச்சநீதிமன்றத்திற்கு வந்த வழக்கின்படி, இதை நிறுத்தி வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. ஆனால் வழக்கிற்கு முன்னரே இது பயிரிடப்பட்டு விட்டது என்றபதிலை கொடுத்துவிட்டு, பயிரிடும் பணிகளை தொடர்ந்து வருகிறது. டெல்லி பல்கலைக் கழகத்தின் சோதனையில் கிடைத்த அனுபவத்தைக் கொண்டு, ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள மரபணு பொறியியல் ஒப்புகைக்குழு (GEAC)விடம் அடுத்த கட்ட உற்பத்திக்கு அனுமதிபெற்று இது நடந்து வருகிறது. பா்னசே பார்ஸ்டார் என்ற மரபணு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி (மகரந்த சேர்க்கையில் மாற்றம் நிகழ்த்துவது) விதையில் ஆண்தன்மையை நீக்கி, பெண் தன்மையை மட்டும் பிரித்து இது பயிரிடப்பட்டுள்ளது. பேயர் என்ற அதே பன்னாட்டு கம்பெனி தான் இந்த தொழில்நுட்பத்திற்கும் காப்புரிமை பெற்றுள்ளது. கடுகு உலக சராசரி மகசூல் ஏக்கருக்கு 2200 கிலோ. இந்தியாவில் 1200 கிலோ என்பதை உயர்த்துவதாம். இந்தியா முழுதும் கடுகு உணவில் ஒரு அங்கமாக உள்ளது. இதில் மருத்துவ குணங்கள் அதிகம். 4 மாநிலங்களில் கடுகு எண்ணையாக பயனாகிறது. மரபணு மாற்று கடுகு என பெயரிட்டால் எதிர்ப்பு வரும் என்பதற்காக, இந்த கடுகுக்கு தாரா கலப்பின கடுகு என்று பெயரிட்டுள்ளனர். கடுகு இறக்குமதியை குறைத்தால், அன்னிய செலாவணி இழப்பு குறையும் என்பது உண்மை இல்லை. ஏனெனில் கடுகு என்பது குறைந்தபட்ச அளவே இறக்குமதி ஆகிறது. இதுவல்ல இவர்களின் நோக்கம். பல மாநிலங்களில் கடுகு பயன்படுத்தப்படாததால் இதற்கு எதிர்ப்பு குறைவாக இருக்கும் என்பதால் கடுகை பி.டி. பயிராக மாற்றி பயிரிட்டு, தொடர்ந்து பின்னால் பல உணவுப் பயிர்களை மரபணு மாற்றப்பட்ட முறையில் கொணர்ந்திடவே இந்த தொடக்க ஏற்பாடு. ஆண்தன்மை நீக்கப்பட்டு வளர்க்கப்படும் இப் பயிர்களால் தேனீக்கள் விரட்டப்படும். இதன் மருத்துவ குணங்கள் என்னவாகும் என்பது கேள்விக்குறி.

**இதில் அமரும் தேனீக்களால் ஒரு புதிய பன்மய சுழற்சி ஏற்படவும் வாய்ப்புள்ளது. இதனால் பாரம்பரிய கடுகு உற்பத்தி மற்றும் பிறபயிர்களின் உற்பத்தி பாதிக்க வாய்ப்புள்ளது.**

தேனீக்கள்தான் வேளாண்மை உற்பத்திக்கும், உயர்வுக்கும் அடிப்படை. இவைகளை வெளியேற்றுவது என்பது அந்த இனங்கள் அழிவதற்கான சூழலைக் கூட ஏற்படுத்தலாம். இதனால் பிறபயிர்களின் மகரந்த சேர்க்கைக்கும் பாதிப்பு வரலாம். இதைப் பற்றி எல்லாம் ஆய்வு செய்யாமல் ஒன்றிய அரசு அனுமதி அளித்துள்ளது. தற்போது 400க்கும் மேலான கடுகு வகைகள் இந்தியாவில் பயிரிடப்படுகிறது. கலப்பினங்களாகவும் உள்ளது. களைக்கொல்லிகளை தாரா கடுகுகள் உடனடியாக ஈர்க்கும் திறன் கொண்டது. தேவை கருதி விவசாயிகள் பருத்திபோல் இவைகளை தெளித்தால் எல்லாமே பாதிப்பை ஏற்படுத்தும். பருத்திக்காக கொண்டு வரப்பட்ட கிளைக்கோஸ் களைக்கொல்லியில் புற்றுநோய் காரணி இல்லை என்றார்கள். ஆனால் பின்னர் இதில் உள்ளது என கண்டறியப்பட்டது. தாரா கடுகில் வரும் குளுக்கோசைட்டில் புற்று நோய்க்கான காரணி இல்லை என எப்படி நம்புவது. இந்திய வேளாண்மையில் களைகள்தான் அதிகம் பாதிக்கிறது என்பது உண்மை. எனவே இதனையே பிரதானமாக அழிக்கும் திறன்கொண்டது என, ஆய்வுக்கு உட்படுத்தப் படாமல் கட்டுப்பாடற்று அமலாக்கினால், உயிர்ம தன்மை அழிந்து, அழிக்கப்பட இயலாத களைகள் உருவாகிவிட்டால் வேளாண்மை கேள்விக்குறியாகும்.

இது நாள்வரை இந்தியாவில் ஏற்பட்ட அறிவியல் தொழில் நுட்பம் என்பது அனைவருக்குமான நுகர்வில் இல்லை. ஏழைகள்; சிறு, குறு விவசாயிகளுக்கு பயனளிக்கக்கூடியதும் அல்ல என்பது தான் வரலாற்று உண்மை. இல்லை என்றால், குடியிருப்பு கட்டுமானங்களின் நவீனங்களின் பெருக்கத்திலும், குடிசைகளும்; ஒற்றை வீட்டிற்குள் இரண்டு, மூன்று குடும்பங்களும், சாக்கடைகளில் சகதிகளில் மக்கள் வசிக்கின்றனரே ஏன்?

நவீன கரன்சிகள் வந்த நிலையிலும் சுருக்கு பையில்தானே பலர் காசு வைத்துள்ளனரே ஏன் ! சிறு, குறு விவசாயிகளே அதிகமுள்ள இந்தியாவில் நவீன தொழில்நுட்பம் எப்படி இவர்களை சென்றடையும். உலகின் பெரும் கம்பெனிகளின் வேட்டைக்கு இந்திய விவசாயிகளை பலியிட வேண்டாம். உற்பத்தி உயர்ந்தாலும் பாதிக்கப்படபோவது விவசாயிகளே;

ஏனெனில் வேளாண் விளைப் பொருட்களின் உற்பத்தி குறைந்தாலும், விலை உயர்வால் கிட்டும் லாபம் இடைத்தரகர்களுக்கே செல்லும். உற்பத்தி கூடுதல் ஆகி, இதன் விலை குறைந்து போனால், தன் விளைப் பொருட்களை சாலையில் கொட்டி அழிப்பவர்களும், அழுபவர்களும் விவசாயிகளே!

எனவே ஒன்றிய அரசு வேளாண்மை உற்பத்தி முறைகளில் இரட்டை வேடத்தை நிறுத்திட வேண்டும். கேடு விளைவிக்கும் மரபணு மாற்றுபயிர் கள் கூடாது என உறுதி செய்திட வேண்டும். பாரம்பரிய வேளாண்மைக்கு வலுவான, விரிவான, உடல் நலனுக்கு தீங்கில்லா திட்டமிடல் வேண்டும்.

தொடர்புக்கு: 94438 65101

# பொங்கல் பரிசு தொகுப்பு திட்டத்தில் தேங்காய்களும் வழங்கிட வேண்டும்

**தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் முதல்வருக்கு கடிதம்**

தமிழ்நாடு விவசாயிகள் சங்க பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறியுள்ளதாவது:

உழவர் திருநாளாம் பொங்கல் பெருநாளில் பொங்கல் பரிசுதொகுப்பு திட்டம் மூலம் ரூ.1000த்துடன் இவ்வாண்டும் கூடுதல் பொருட்கள் சேர்த்து வழங்க உள்ளதாக தமிழக அரசு முடிவு செய்திருப்பதை வரவேற்று பாராட்டுகிறோம். வழங்கப்பட உள்ள பொருட்களில் கரும்பை தவிர்க்க உள்ளதாக தெரியவருகிறது. கடந்தாண்டு தேங்காய்களையும் இத்திட்டத்தில் இணைத்து வழங்கிட தங்களுக்கு கோரிக்கை வைத்தோம். அப்போது இக்கோரிக்கையை தாங்கள் ஏற்று செயல்படுத்திட இயலவில்லை என கருதினோம்.

கடந்தாண்டு முதலே தேங்காய் விலை மிகச்சரிந்து இன்று வரை உரிய விலை கிடைக்காது விவசாயிகள் பொருள் இழப்பை சந்தித்து வருகின்றனர் என்பதை தாங்கள் அறிவீர்கள். இதனால் தமிழக அரசும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் கொப்பரை கொள்முதல் நிலையங்களை சில மையங்களில் திறந்தது. விளையும் தேங்காய்கள் அனைத்தையும் இங்கு விற்பனை செய்ய முடியாத நிலையில் விவசாயிகள் உள்ளனர். ஏனெனில் தொடர் மழை பொழிவும், சிறு, குறு விவசாயிகள் கொப்பரையாக தயார் செய்திட இயலாத நிலையிலும், வழக்கம்போல் மிகக் குறைந்த விலையிலும் வேறு வழியில்லாமல் வியாபாரிகளிடம் விற்பனை செய்து வருகின்றனர். எனவே தான் கேரளா அரசு போல் உரித்த தேங்காய்களாக அரசு கொள்முதல் செய்திட வேண்டுமென நாங்கள் தொடர்ந்து கோரிக்கை வைத்து வருகிறோம்.

அரசு கொடுக்கும் இந்த உதவி திட்டத்தில் கிடைக்கும் பொருட்கள் என்பது அளவு குறைவாக இருக்கலாம். ஆனால் எண்ணற்ற குடும்பங்களுக்கு இது அடிப்படை அவசியமாகும் என்பதுடன், தமிழக முதல்வர் அவர்கள் தமிழக வாழ் குடும்பங்களுக்கு பொங்கல் வாழ்த்தாகவும் இது அமையும். என்பதில் பெருமை கொள்கிறோம். இந்த நிலையில் இப்பொருட்களுடன் தேங்காய்களும் அவசியம் என்பதை தாங்கள் அறிவீர்கள்.

எனவே தாங்கள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் மூன்று தேங்காய்கள் மற்றும் கரும்புகள் வழங்கிட நடவடிக்கை எடுத்திட அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு கடிதத்தில் கூறியுள்ளார்.



# சங்கே முழங்கு!

# ஆசிரியர் கி.வீரமணி என்றைக்கும் இளமையானவர்

## இரா.முத்தரசன் பேச்சு

திராவிடர் கழகத் தலைவர், ஆசிரியர் கி.வீரமணி அவர்களின் 90 ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா சென்னை கலைவாணர் அரங்கில் நவ.02 அன்று நடைபெற்றது. இதில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் கலந்துகொண்டு ஆசிரியர் கி.வீரமணி அவர்களை வாழ்த்திப் பேசினார்.

அப்போது, “விஞ்ஞானம் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டிருக்கிறது; முன்னேறிக் கொண்டிருக்கிறது. அஞ்ஞானம் ஒருபோதும் வெற்றி பெற முடியாது. இந்தப் போராட்டம் தான் நாட்டில், தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. விஞ்ஞானக் கொள்கை வெற்றி பெற வேண்டும் என்பதற்காக அர்ப்பணித்துக் கொண்டிருக்கிற ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் என்றைக்கும் இளமையாக இருக்கிறார்.

விஞ்ஞானத்துக்கு எதிரான கொள்கை உடைய, மனுதர்மத்தை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்பதற்காக; சனாதனத்தை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்பதற்காக காவி உடை தரித்த பாசிச கும்பல், நாட்டின் ஆட்சி அதிகாரம் தங்களின் கைகளில் இருக்கிறது என்பதற்காக ஏராளமான நாடகங்களை நடத்திக் கொண்டிருக்கிறது.

இப்போது புதிய நாடகத்தை தொடங்கி இருக்கிறது. காசியில் தமிழ் சங்கமம் என்ற நாடகம் ஒரு மாத காலத்திற்கு நடைபெறும் என அறிவித்து, அந்த நிகழ்ச்சியை பிரதமர் தொடங்கி வைக்கிறார். அப்போது, மிகச் சிறப்பாக தமிழைப் பற்றி அவர் பேசியிருக்கிறார்.

உலகத்தின் மூத்த மொழி தமிழ்; தமிழ் மரபைக் காப்பது 138 கோடி இந்தியர்களின் கடமை; அதனைப் புறக்கணிப்பது தேசத்திற்கு பெரும் அவமதிப்பு இவ்வாறு பேசியிருப்பது நாட்டினுடைய பிரதமர் மோடி.

இதனை இங்குள்ள சில பத்திரிகைகள் வரவேற்று, பாராட்டி, மகிழ்ந்து தலையங்கம் எழுதியிருக்கிறார்கள். இப்படி பாராட்டிப் பேசப்படுகிற பிரதமர் மோடி, தமிழுக்கு செய்த தொண்டை பார்க்க வேண்டும்.

அவருடைய ஆட்சியில் 2017–2018 ஆம் நிதி ஆண்டில் சமஸ்கிருத மொழிக்கு ஒதுக்கிய தொகை ரூ.198.31 கோடி; அதே ஆண்டில் தமிழுக்கு ஒதுக்கிய தொகை ரூ.10.59 கோடி.

2018–2019 ஆம் நிதி ஆண்டில் சமஸ்கிருத மொழிக்கு ஒதுக்கிய தொகை ரூ. 214.38 கோடி. இதே ஆண்டில் தமிழுக்கு ஒதுக்கிய தொகை ரூ.4.65 கோடி.

2019–20 ஆம் நிதியாண்டில் சமஸ்கிருத மொழிக்கு ஒதுக்கிய நிதி, கடந்த ஆண்டில் ஒதுக்கப்பட்டதைவிட கூடுதலாக ரூ. 231.15 கோடி. தமிழுக்கு ஒதுக்கிய நிதி ரூ. 7.7 கோடி.

3 ஆண்டுகளில் சமஸ்கிருத மொழிக்கு ஒதுக்கப்பட்ட நிதி ரூ. 643.84 கோடி. தமிழ் மொழிக்கு ஒதுக்கப்பட்ட நிதி வெறும் ரூ. 28.31 கோடி. நாடகத்தை எப்படி நடத்திக் கொண்டிருக்கிறார்கள் பாருங்கள்.

எத்தனை கோடி மக்கள் சமஸ்கிருதம் பேசுகிறார்கள்? சமஸ்கிருதம் எங்கே பேசப்படுகிறது? கல்லோடு பேசப்படுகிறது.

கல்லோடு பேசப்படும் மொழிக்கு 643 கோடி ரூபாய்.

தமிழ்நாட்டில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் வாழும் 10 கோடி மக்கள் தாய்மொழியாக ஏற்றுக்கொண்டிருக்கிற தமிழ் மொழிக்கு மிகக் குறைவான நிதி.

தமிழைச் சொன்னால், தமிழை உயர்த்திப் பேசினால், தமிழகத்தில் கால் எடுத்து வைத்து விட முடியும் என நரேந்திர மோடி இப்படி நாடகங்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்.

டிசம்பர் 29ஆம் தேதி மோடி அரசாங்கமே! ஆளுநரைத் திரும்பப் பெறு! என பல்லாயிரக்கணக்கான மக்களுடன் ஆளுநர் மாளிகை முற்றுகையிடுவது என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி முடிவு எடுத்திருக்கிறது. ஆளுநர் மாளிகையை முற்றுகையிடுவதற்கு முன்னால் ஆளுநர் அவராக திரும்பிச் செல்ல வேண்டும் அல்லது அவரை நியமித்த நரேந்திர மோடி திரும்பப்பெற வேண்டும்” என தோழர் இரா.முத்தரசன் உரையாற்றினார்.

# தமிழகம் முழுவதும் டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் 66ஆம் ஆண்டு நினைவு நாள்


இந்திய அரசியல் சாசனத்தை எழுதிய, பெருமைக்குரிய தலைவர் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் 66 வது ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி தமிழகம் முழுவதும் கடைபிடிக்கப்பட்டது.



**திருத்துறைப்பூண்டி:** திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி பட்டுக்கோட்டை சாலையில் உள்ள அம்பேத்கர் உருவசிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. சட்ட பேரவை உறுப்பினர் க.மாரிமுத்து, சட்டபேரவை முன்னாள் உறுப்பினர் கே.உலகநாதன், ஊராட்சி ஒன்றியபெருந்தலைவர் அ.பாஸ்கர், மாநில கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் எம்.வையாபுரி, ஒன்றிய செயலாளர் வி. ஜவஹர், நகர செயலாளர் டி.பி.சுந்தர் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். நிகழ்ச்சியில் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் பி.வி.சந்திரராமன், வி.முத்துகுமரன், எம்.முருகேசன், எம்.மகாலிங்கம், கே. விஜயா, கே.ராஜேந்திரன்,அ.குமரேசன், வாசுதேவன், ராமலிங்கம், தாஜுதீன், கே.சுஜாதா மற்றும் 100 க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்துகொண்டனர்.

**விருதுநகர்:** விருதுநகர் மாவட்டம், இராஜபாளையத்தில் டாக்டர் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மலரஞ் சலி செய்து உறுதிமொழி எடுக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. சிபிஐ நகர செயலாளர் விஜயன் தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, தஓவாஇ மாவட்ட செயலாளர் எஸ.பழனிக்குமார், ஏஐடியுசி வி.இரவி உள்பட பலர் கலந்து கொண்டனர். சிவகாசியில் சிபிஐ வட்ட செயலாளர் ஜீவா தலைமையில் மாவட்ட துணை செயலாளர் சமுத்திரம், இக்பால், ஏஐடியுசி முனியசாமி, கலைவாசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். விருதுநகர் சத்திரரெட்டிபட்டியில் வட்ட செயலாளர் சக்கணன் தலைமையில் நகர செயலாளர் முத்துக்குமார், தஓவாஇ முருகேசன், மாதர்சங்க மாரீஸ்வரி உள்ளிட்டோரும், சேத்தூர் காமராஜ் நகரில் வழக்கறிஞர் பகத்சிங் தலைமையில், ஒன்றிய செயலாளர் கணேசமூர்த்தி உள்பட பலரும், முகவூரில் தவிதொச மாவட்ட செயலாளர் வரதராஜ் தலைமையிலும் நடைபெற்றது.

**கோவை:** வடகோவை இந்திய உணவு கழகம் வளாகத்தில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம். ஆறுமுகம் தலைமை தாங்கினார். சிபிஐ மாவட்ட செயலாளர் சி. சிவசாமி முன்னிலை வகித்தார். தஓவாஇ கோவை மாவட்ட செயலாளர் ஏ. அசரப்அலி, சிபிஐ மாவட்ட துணை செயலாளர் ஜே.ஜேம்ஸ், தஓவாஇ மாநில பொருளாளர் வழக்கறிஞர் கே. சுப்பிரமணியன், மாவட்டத் தலைவர் பி.முருகன், மாநில குழு உறுப்பினர் பி.சக்திவேல், மாவட்ட பொருளாளர் பி. சற்குணம் உள்ளிட்டோர் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்தனர்.




மாமன்ற உறுப்பினர்கள் சாந்தி சந்திரன், பிரபா ரவீந்திரன், மைலம்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் சாரதாமணி, கே.எம். செல்வராஜ், யூ. கே. சுப்பிரமணியன், ஆர். பாலகிருஷ்ணன், ப.பா. ரமணி, மத்திய மண்டல செயலாளர் கே. ரவீந்திரன், மேற்கு மண்டல செயலாளர் என். சந்திரன், வடக்கு மண்டல துணைச் செயலாளர் வி.ஆர்.பாண்டியன், மத்திய மண்டல துணை செயலாளர் ஏ.பி. மணிபாரதி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**தஞ்சை:** அம்பேத்கர் நினைவு நாள் நிகழ்ச்சி தஞ்சாவூர் காவேரி சிறப்பங்காடி அருகில் நடைபெற்றது. சிபிஐ மாவட்ட நிர்வாககுழு உறுப்பினர் வெ.சேவையா தலைமை வகித்தார். இடதுசாரிகள் பொதுமேடை ஒருங்கிணைப்பாளர் துரை. மதிவாணன், மக்கள் அதிகாரம் மாவட்ட செயலாளர் தேவா ஆகியோர் முன்னிலை வகித்தனர். மக்கள் அதிகாரத்தின் மாநில பொருளாளர் காளியப்பன் அம்பேத்கர் பற்றி உரையாற்றினார். நிகழ்வில் ஏஐடியுசி மாவட்ட செயலாளர் ஆர்.தில்லைவனம், ஏஐசிசிடியு மாவட்ட செயலாளர் கே.ராஜன் மற்றும் தொழிற்சங்க நிர்வாகிகள் பங்கேற்றனர்.

**வியாசர்பாடி:** வடசென்னை மாவட்டம், வியாசர்பாடி மகசின்புரம் பகுதியில், தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாவட்டத் தலைவர் இரா.மோ.சந்தோஷ்குமார் தலைமையில் நடைபெற்றது. அம்பேத்கர் சிலைக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக்குழு உறுப்பினர் லி.உதயகுமார் மாலை அணிவித்து அவரது புகழ் குறித்து பேசினார்.

நிகழ்ச்சியில் சிபிஐ மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் ஆ.சுப்பிரமணி, ஏஐடியூசி மாவட்ட பொதுச் செயலாளர் அருள், சிபிஐ மாவட்டக்குழு உறுப்பினர் சு.பாஸ்கர், பெரம்பூர் தொகுதிக்குழு உறுப்பினர்கள் க.ராஜாராம், என்.மூர்த்தி, இரா. பார்த்திபன், எஸ்.விக்ரம், வெங்கடேசன், சிவா, ச.கோவிந்தன் உள்பட ஏராளமானோர் பங்கேற்றனர்.

**அம்பத்தூர்:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அம்பத்தூர் பகுதி குழு செயலாளர் இரா.விஜயகுமார் தலைமையில், ஏ.எஸ்.கண்ணன் எக்ஸ்.எம்.எல்.ஏ., எம்.வி.ஜெகநாதன் ஆகியோர் அம்பத்தூரில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்தனர். மாவட்டத் துணைச் செயலாளர் ப.மாரியப்பன், கட்டட சங்க மாநிலச் செயலாளர் இரா.துரை சாமி, என்.கோபிநாதன், லோகநாதன், இம்ரன், கிருஷ்ணமூர்த்தி, சிவா, யேசு, கணேசன், மணிகண்டன், மாணிக்கவல்லி, மோகன், மூர்த்தி உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

**திருவள்ளூர்:** திருவள்ளூர் மாவட்டம், சோழபுரம் ஒன்றியம், ஞாயிறு கிராமத்தில், அண்ணல் அம்பேத்கர் நினைவு நாள் அனுஷ்டிக்கப்பட்டது. இதில் தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் என்.எஸ்.பிரதாப் சந்திரன் அம்பேத்கர் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார். இதில் அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற மாவட்ட துணைத்தலைவர் எஸ்.பி.சுரேஷ், சோழவரம் ஒன்றிய செயலாளர் சபாபதி மோகன், ஞாயிறு ஊராட்சி மன்ற உறுப்பினர் கே. சதீஷ்குமார், ஆர். ராஜேஷ் உள்ளிட்டோர் பங்கேற்றனர். திருவள்ளூர் மாவட்டம், செங்குன்றத்தில் சிறு கடை நடைபாதை வியாபாரி சங்கம் சார்பில், சங்க செயலாளர் ஏ.ஆதாம் தலைமையில் அண்ணல் அம்பேத்கர் திருவுரு சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது. இதில் தமிழ் மாநில விவசாய தோழர் சங்க மாவட்ட செயலாளர் என்.எஸ் .பிரதாப் சந்திரன், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாவட்ட துணை செயலாளர் மதி யோவான் மற்றும் எம்.எம்.கனி, முகமது யூசுப், மாரி, புருஷோத்தமன், ஸ்ரீதர், முஜிப்பூர் ரஹ்மான் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**திண்டுக்கல்:** வேடசந்தூர் ஒன்றிய குழு சார்பில் வேடசந்தூர் ஒன்றிய செயலாளர் சி.எஸ். முத்துசாமி தலைமையில் அம்பேத்கரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் கட்சியின் மாவட்ட செயலாளர் ஏ.பி.மணிகண்டன், மாவட்ட செயற்குழு உறுப்பினர் எம்.சந்திரசேகரன், ஏ.பிச்சை இஸ்மாயில், மாமுண்டி, சுருளி, எஸ்.பழனிச்சாமி மற்றும் பல தோழர்கள் கலந்து கொண்டனர்.

**உளுந்தூர்பேட்டை:** உளுந்தூர்பேட்டை நகரகிளை சார்பில், விருத்தாசலம் ரோடு மும்முனை சந்திப்பில் அம்பேத்கர் உருவப்படத்திற்கு முன்னாள் வட்டார செயலாளர் மீசை ஆறுமுகம் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். உளுந்தூர்பேட்டை சிபிஐ ஒன்றிய துணை செயலாளர் இரா.நந்தகோபாலகிருஷ்ணன் மற்றும் ஏரளாமானோர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

**ஆலந்தூர்:** ஆலந்தூர் தொகுதி குழு சார்பாக பல்லாவரத்தில் அமைந்துள்ள டாக்டர் அம்பேத்கர் திருஉருவ சிலைக்கு மாதர் சங்க தரணி தலைமையில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் காஞ்சிபுரம் மாவட்ட துணை செயலாளர் ஜா.பூபாலன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதில் காஞ் சிபுரம் மாவட்ட செயலாளர் பல்லாவரம் பா.கார்த்திக் கலந்து கொண்டார். மற்றும் ரவி, சிங்காரவேலன், பிரணவ், ஆலந்தூர் மாதர் சங்க த.சரண்யா கலந்து கொண்டனர்.

**உயர்நீதிமன்ற வளாகம்:** சென்னை உயர்நீதி மன்ற வளாகத்தில் உள்ள அம்பேத்கர் திருவுருவ சிலைக்கு, இந்திய வழக்கறிஞர்கள் சங்கத்தின் சார்பாக மாலை அணிவித்து வீர வணக்கம் செலுத்தப்பட்டது. நிகழ்ச்சியில், வழக்கறிஞர்கள்

தொடர்ச்சி 14ம் பக்கம்

# துறையூர் பி.சந்திரன் மறைவு

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னோடி துறையூர் பி.சந்திரன் (74) நவ.03 அன்று இலால்குடியில் உள்ள அவரது இல்லத்தில் காலமானார் என்ற துயரச் செய்தி கேட்டு அதிர்ச்சியுற்றோம்.

திருச்சி மாவட்டம், துறையூர் அருகில் உள்ள காளிப்பட்டியில் ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர் பி.சந்திரன். அதிராம்பட்டினத்தில் கல்லூரி படிப்புப் படிக்கும் காலத்தில் அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தில் சேர்ந்து செயல்பட்டு வந்தவர். சமூக சமத்துவத்திற்கு மார்க்சிசம் லெனினிசம் தான் சரியான பாதை என தேர்வு செய்து கொண்டவர்.

தற்போது தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் திருச்சி மாவட்டச் செயலாளராக செயல்பட்டு வரும் பி.கணேசன், அவரது உடன்பிறந்த தம்பி என்பதும், அவரை கட்சி வாழ்க்கைக்கு முன்னுரிமை தந்து பணியாற்றும்படி ஊக்கம் அளித்து உதவி வந்தவர் சந்திரன் என்பதும் குறிப்பிடத் தக்கது.

பி.சந்திரன் கல்லூரி கல்வி முடித்து, ஊரக வளர்ச்சித் துறையில் பணியில் சேர்ந்து சிறப்பாக பணியாற்றியவர். படிப்படியான பணியுயர்வில், வட்டார வளர்ச்சி அலுவலராக பணியாற்றி, ஓய்வு பெற்றவர். இவரது மனைவி ராஜபாக்கியம் சுகாதாரத் துறையில் கிராம சுகாதார செவிலியராக பணியாற்றி, அத்துறையில் கண்காணிப்பாளராக பணியுயர்வு பெற்று, ஓய்வு பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மிக சிறந்த மக்கள் ஊழியர் பி.சந்திரன் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. அவரை பிரிந்து வாடும் அவரது மனைவி ராஜபாக்கியத்திற்கும், அவரது குடும்பத்தினருக்கும் ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

# ஜீவா நினைவு ஜோதி தொடர் ஓட்டம்



ஏஐடியுசியின் 20வது மாநில மாநாடு நெல்லையில் டிசம்பர் 1,2,3 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. இந்த மாநாட்டுக்கு பொதுவுடைமை இயக்கத்தின் மூத்த தலைவர் பேராசான் ஜீவா நினைவு ஜோதி அவர் பிறந்த பூதப்பாண்டி மண்ணிலிருந்து நெல்லைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இந்த நினைவு ஜோதி தொடர் ஓட்டத்தை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாவட்ட செயலாளர் தா.சுபாஷ்சந்திரபோஸ் தொடங்கி வைத்தார். ஏஐடியூசி மாவட்ட தலைவர் அனில்குமார் ஜோதியை பெற்றுக்கொண்டார். சிபிஐ மாவட்ட துணை செயலாளர் எஸ்.நாராயணசுவாமி, சீனிவாசன் ஆகியோர் தொடர் ஓட்டத்தில் கலந்து கொண்டனர். செண்பகராமன் புதூர் கிளை செயலாளர் வி.கல்யாணசுந்தரம், ஆரல்கிளை செயலாளர் வி.அருள்குமார் தகஇபெ மாவட்ட துணைத்தலைவர் ஆரல் பகவதி ஆகியோர் தலைமையிலும், மூவேந்தர்நகரில் தோவாளை தாலுகா செயலாளர் அண்ணாதுரை, ஆரல்கிளை முன்னாள் செயலாளர் எல்.சுப்பிரமணியம் ஆகியோர் தலைமையில் வரவேற்பு அளிக்கப்பட்டது.ஜீவா நினைவு ஜோதியை ஏஐடியூசி மாநிலச் செயலாளர் காசி விஸ்வநாதன் முன்னிலையில் சிபிஐ மாநில துணைச்செயலாளர் நா.பெரியசாமி பெற்றுக்கொண்டார்.

# தோழர் கே.எஸ்.மாணிக்கம் மறைவு

சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் கே.எஸ். மாணிக்கம் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தில் பல்வேறு பொறுப்புக்களில் திறம்பட பணியாற்றியவர். இந்திய கலாச்சார நட்புறவு கழகத்தில் மாவட்ட கௌரவத் தலைவராக கடைசி வரை செயலாற்றியவர். தனது 90வது வயதில் நவ.24 அன்று உடல்நலக்குறைவால் காலமானார்.



அவரின் உடலுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சேலம் மாவட்ட செயலாளர் ஏ.மோகன், பொருளாளர் டி.கண்ணன், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் என்.எம்.சடையன், டி.வி.கருணைதாஸ், வி.ச. மாவட்ட செயலாளர் என்.கே. செல்வராஜ், பெத்தநாயக்கன்பாளையம் நகர செயலாளர் எஸ்.முருகன், துணைச்செயலாளர்கள் எம்.அர்ச்சுனன், என்.ராஜேஷ், சிபிஎம் எம்.ராமசாமி, தி.மு.க. பி.வெங்கடேசன், அ.தி.மு.க. எஸ்.ராவணன், நாம் தமிழர் கட்சி ஆ.ஜெகதீசன், சிபிஐ மாவட்டக்குழு உறுப்பினர்கள் ஈ.ஆர்கே, ஜெ.ஸ்டாலின் உட்பட ஏராளமானோர் அஞ்சலி செலுத்தினர்.

## பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி

# பழங்குடி மக்கள் ஆர்ப்பாட்டம்




பழங்குடி மக்களை வனத்தைவிட்டு வெளியேற்ற கூடாது. பழங்குடிகள் வாழாத வனப்பகுதிகளில் சரணாலயம் அமைத்திட வேண்டும். சரணாலயம் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ள வனங்களிலிருந்து பழங்குடி மக்களை வெளியேற்ற கூடாது. பழங்குடி மக்கள் சாகுபடி செய்து வரும் அனைத்து நிலங்களுக்கும் பட்டா வழங்க வேண்டும்.

பழங்குடியினர் வாழும் பகுதிகளில் உள்ள ஊர்களை வருவாய் கிராமங்களாக ஆக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழக பழங்குடிகளை ஐந்தாவது அட்டவணையில் சேர்த்திட வேண்டும். ஆக்கிரமிப்பில் உள்ள பழங்குடியினர் நிலங்களை மீட்டுத்தர வேண்டும்.

வாழ்விடத்திலேயே பட்டா வழங்கி அரசு தொகுப்பு வீடு, இலவசமின்சாரம், வீட்டு மனை இல்லாத குடும்பங்களுக்கு வீட்டு மனை பட்டாவுடன் கூடிய வீடு, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை இடித்து விட்டு புதிய தொகுப்பு வீடுகள் கட்டித்தரவேண்டும்.

அனைத்து குடும்பங்களுக்கும் ஐந்து ஏக்கர் சாகுபடி நிலம் வழங்க வேண்டும். நாட்டுரக மாடுகள், ஆடுகளை வழங்கிட வேண்டும். பழங்குடியினருக்கு தனி ஆணையமும், தனி அமைச்சரையும் ஏற்படுத்த வேண்டும்.

வளர்ச்சி பெற சிறப்பு நிதி ஒதுக்கிட வேண்டும்.பழங்குடியினருக்கு சமூக, பொருளாதார கல்வி வளர்ச்சிக்கென ஐந்து சதவிகிதம் இடஒதுக்கீடு வழங்க வேண்டும்.

பழங்குடியினருக்கென தனி பல்கலைக்கழகம், கல்வி நிறுவனங்களை அமைத்திட வேண்டும். அரசு வைத்துள்ள பழங்குடியினர் பட்டியலை ஆய்வு செய்து திருத்தி அமைத்திட வேண்டும்/ லம்பாடி (சுகாளி) மக்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்த்திட வேண்டும். போலி சான்றிதழ் பெறுவதை கண்காணித்து நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

கிராமப்புற வேலை வாய்ப்பு திட்டத்தில் காடு வளர்ப்பையும் சேர்க்க வேண்டும். வனவளர்ப்பு திட்டத்தின் மூலம் பழங்குடி மக்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

தருமபுரி

**தருமபுரி:** பென்னாகரம் பழைய பேருந்து நிலையம் அருகில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு சங்கத்தின் மாவட்ட தலைவர் அண்ணாதுரை தலைமை வகித்தார்.தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கத்தின் மாநில சிறப்பு தலைவரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான ந.நஞ்சப்பன் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார். சிபிஐ மாவட்ட செயலாளர் எஸ்.கலைச்செல்வம், மாநிலக்குழு உறுப்பினர் எம்.மாதேஸ்வரன், மாவட்டக்குழு உறுப்பினர்கள் எம்.கோபால், காதர், முனியப்பன், புல்லாறு, வழக்கறிஞர் மாதையன், அழகேசன், முத்து, சண்முகம், தொட்டி, தகஇபெ நிர்வாகி நடிகர் சிங்காரவேலன்,வட்டார செயலாளர்கள் பென்னாகரம் சம்பத், ஏரியூர் விஸ்வநாதன்,பாப்பாரப்பட்டி பெருமாள்,இண்டூர் மாது, நகர செயலாளர் விஜயபாரதி ஆகியோர் பேசினர்.

**செங்கல்பட்டு:** செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் 320 பெண்கள் உட்பட 460 க்கும் மேற்பட்ட பழங்குடி மக்கள் கலந்து கொண்டனர். பல்லாவரம் இராணுவ நிலத்தில் குடியிருந்து வரும் பழங்குடி மக்களுக்கு மாற்று இடம் வழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி சங்கத்தின் மாவட்ட தலைவர் க.ஜெகதீசன் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தை சமூக சமத்துவத்திற்கான டாக்டர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜி.ஆர்.இரவிந்திரநாத் துவக்கிவைத்து பேசினார்.

சங்கத்தின் மாநில துணைத் தலைவர் ஜா.பூபாலன், ஏஐடியூசி மாநில செயலாளர் வி.ஆதிமூலம், மாவட்ட செயலாளர் கே.முனுசாமி, இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் எம்.பார்த்திபன், துணை செயலாளர் இ.முனுசாமி, துணைத் தலைவர் இ.ஆறுமுகம், ஆர்.தேவராஜ், ஏ.வரதன், ஏ.குமாரி, பி.முரளி, ஜி.கண்ணன், மல்லிகா, கபாலி, ராமச்சந்திரன் ஆகிய முன்னணி தோழர்கள் கலந்துகொண்டனர். மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை மனு கொடுக்கப்பட்டது. ஒய்.ஹாருன்பாஷா நன்றி கூறினார்.

# டிசம்பர் 29 – கூட்டாட்சி முறை பாதுகாப்பு நாள்

## சி.பி.ஐ தேசிய நிர்வாகக் குழு அறைகூவல்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா, புதுடெல்லியில் உள்ள கட்சியின் தலைமையகமான அஜாய் பவனில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வெளியிட்ட செய்தி அறிக்கை பின்வருமாறு:

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாகக் குழு கூட்டம் டெல்லியில் உள்ள கட்சியின் தலைமையகமான அஜாய் பவனில் டிசம்பர் 3 மற்றும் 4 ஆகிய இரு நாட்கள் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு பினாய் விஸ்வம் தலைமை வகித்தார். கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா அறிக்கைகளைச் சமர்ப்பித்தார். அக்டோபர் மாதம் விஜயவாடாவில் வெற்றிகரமாக நடைபெற்று முடிந்த கட்சியின் 24 வது அகில இந்திய மாநாடு குறித்து தேசிய நிர்வாகக் குழு ஆய்வு செய்தது. புதிதாகத் தேர்வு செய்யப்பட்டுள்ள தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கு கட்சிப் பொறுப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.

கூட்டாட்சி முறையைப் பாதுகாப்போம், ஆளுநர் பதவி ஒழிப்பு – ஆகியவற்றுக்கான பிரச்சாரம். தேசத்தின் கூட்டாட்சி முறையைப் பாதுகாத்திட அனைத்து ஜனநாயக சக்திகளும் ஒரணியாகத் திரள வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாகக் குழு அறைகூவல் விடுக்கிறது. நமது அரசியலமைப்பின் அடித்தளங்களைத் தகர்ப்பதற்காக, ஆர்.எஸ்.எஸ் கட்டுப்பாட்டில் உள்ள இந்த அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்து தேசிய நிர்வாகக் குழு எச்சரிக்கை செய்கிறது. இந்த நோக்கத்திற்காக, ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தத்தின் அதிகார மையப்படுத்துதலின்படி, ஆளுநர் பதவி தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. கேரளா, தமிழ்நாடு, தெலங்கானா ஆகிய மாநிலங்களில், ஆளுநர் அலுவலகங்கள் பா.ஜ.க வின் கட்சி அலுவலகங்களாகச் செயல்படுகின்றன.

இந்தப் பின்புலத்தில், ஆளுநர் பதவி ஒழிப்பு கோரிக்கையை முன்வைப்பதற்கான காலம் கனிந்துவிட்டதாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. எனவே, இந்தக் கோரிக்கையை முன்னிட்டு, டிசம்பர் 29 ஐ, கட்சியின் அனைத்து அணிகளும் "கூட்டாட்சி முறை பாதுகாப்பு நாளாகக்" கடைபிடிக்குமாறு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாகக் குழு அறைகூவல் விடுக்கிறது. அந்த நாளில், கட்சியின் மாநில குழுக்கள் பல்வேறு வகையான பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு கட்சியின் பொதுச் செயலாளர் வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்ட தேதி மாற்றம்

சென்னை போக் ரோட்டில் உள்ள இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில தலைமையகமான பாலன் இல்லத்தில், தமிழ்நாடு கோவில் மனையில் குடியிருப்போர் சங்க மாநில தலைவர் வி.அ.பாலசுப்ரமணியன் தலைமையிலும், மாநில பொருளாளர் எஸ்.ஏழுமலை முன்னிலையிலும் மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. டிச.10 ஆம் தேதி நடைபெறவிருந்த கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் குறித்து, நடைபெற்ற கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டதில் வருகின்ற டிசம்பர் 8, 9, 10 ஆகிய தினங்களில் சென்னை உள்பட பெருவாரியான மாவட்டங்களில் கன முதல் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆராய்ச்சி மையம் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளதால் கூட்டத்தில் பங்கேற்ற நிர்வாகிகளின் கோரிக்கையை ஏற்று கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் வருகின்ற 17.12.2022 அன்று காலை 10.00 மணியளவில் வள்ளுவர் கோட்டம் அருகில் நடைபெறும் என்று முடிவெடுக்கப்பட்டது என்பதை மாநில தலைவர் அவர்களின் ஒப்புதலோடு தெரிவித்து கொள்கிறோம்.

# மயிலாடுதுறையில் ஜன.10ல் குத்தகை விவசாயிகள் மாநாடு



மயிலாடுதுறையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டக்குழு கூட்டம் எஸ்.சுந்தரய்யா தலைமையில் நடைபெற்றது. மாநில செயலாளர் இரா. முத்தரசன், நாகை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் எம். செல்வராசு ஆகியோர் கலந்து கொண்டு அரசியல் விளக்க உரையாற்றினர். மாவட்ட செயலாளர் அ. சீனிவாசன் அரசியல் அறிக்கை மற்றும் எதிர்கால கடமை குறித்து பேசினார்.

தமிழ்நாட்டில் கோவில் மடம் மற்றும் தர்ம நிறுவனங்களுக்கு சொந்தமான பல ஆயிரம் ஏக்கர் நிலங்களில் நிலமற்ற குத்தகை விவசாயிகள் பல ஆண்டுகளாக சாகுபடி செய்து வருகின்றனர்.

இதன் மூலம் கிடைக்கிற வருவாயை கொண்டு விவசாயிகள் இதில் ஒரு பகுதி கோயில்களுக்கு குத்தகையாக கொடுக்கிறார்கள்.

ஆண்டாண்டு காலமாக பின்பற்றப்படும் இந்த நடைமுறைகளால் கோயில்களில் நிர்வாகத்திற்கு இது பயன்படுகிறது. இதை நம்பியுள்ள நிலமற்ற விவசாயிகளுக்கும் வாழ்க்கை தேவைக்கு அடிப்படை வருமானமாக ஒரு பகுதி கிடைக்கிறது எல்லாவற்றுக்கும் மேலாக சம்பந்தப்பட்ட நிலங்கள் தரிசாக விடப்பட்டு பயனற்று போகாமல் நஞ்சை நிலங்களாகவே விவசாயிகளால் பாதுகாக்கப்பட்டு வருகிறது தமிழகத்தின் உணவு தேவை பெருமளவு இதன் மூலம் கிடைத்து வருகிறது. தமிழகத்தின் மொத்த நிலங்களில் பெரும்பகுதி நிலம் இப்படியான குத்தகை முறையில் தான் உள்ளது

எனவே குத்தகை நிலங்களை நம்பி உள்ள விவசாயிகளை பாதுகாத்திட தமிழக அரசை வலியுறுத்தி, குத்தகை விவசாயிகளின் கோரிக்கை மாநாட்டை மயிலாடுதுறையில் கோயில் நிலம், குத்தகை விவசாயிகள் பாதுகாப்பு மாநில மாநாட்டை ஜனவரி 10 ஆம் தேதி மயிலாடுதுறையில் நடத்துவது எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாவட்ட துணை செயலாளராக கே. ராமன், பொருளாளராக எஸ்.சி. கணபதி மற்றும் தனிக்கை குழு உறுப்பினர்களாக எஸ். சுந்தரய்யா, பி. வீரராஜ், எஸ். கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

# கிளாமங்கலம் பிரச்சினைக்கு தீர்வு காண ஆனைத்துக் கட்சி கூட்டத்தை கூட்டிடுக!

## மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை மனு!

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், கிளாமங்கலம் கிராமத்தில் பாதிக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் ஒரத்தநாடு வட்டாட்சியரிடம் முறையிட்டு, அமைதிப் பேச்சு வார்த்தை நடத்தப்பட்ட பின்னரும், அதே நிலை நீடித்தது. தற்போது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மளிகை, தேனீர் உள்ளிட்டு எந்தவித பொருளும் தரகூடாது, எவ்வித உதவிகளும் செய்யக் கூடாது, மீறினால் ரூ.5000 ம் அபராதம் விதிக்கப்படும் என கட்டுப்பாடு போடப்பட்டதாக வந்த தகவலால் தாழ்த்தப்பட்ட மக்கள் அச்சத்தில் உள்ளனர்.

மேலும், இரு சமூகத்தினருக்கும் ஆதரவானவர்கள் அடிக்கடி வந்து செல்வது சுற்றுப்புற கிராம மக்களையும் அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது. மாவட்ட ஆட்சியர் தலையிட்டு அப்பகுதியில் நிலவிவரும் பதட்ட நிலையை போக்கிட அனைத்து அரசியல் கட்சியினரையும் கூட்டி பேச்சு வார்த்தை நடத்தி சமூக நல்லிணக்கத்தையும், அமைதியை ஏற்படுத்த வேண்டும். பட்டுக்கோட்டை வேப்பங்காடு பட்டியல் இனத்தவர் வாழும் பகுதியில் பலமுறை கோரிக்கை மனு அளித்தும் மாணவர்கள், மக்கள் நலனை கருத்தில் கொள்ளாமல் டாஸ்மாக் கடை கொண்டு வருவதை தடை



செய்யவும் வேண்டுமென்று மாவட்ட ஆட்சியரிடம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் முத்து.உத்திராபதி தலைமையில் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது. மாவட்ட துணை செயலாளர் கோ.சக்திவேல், நிர்வாகிகள் அ.கலியபெருமாள், சோ. பாஸ்கர், மாவட்ட குழு உறுப்பினர் சீனி.முருகையன், ஒன்றிய செயலாளர்கள் க.பூபேஷ்குப்தா, வாசு. இளையராஜா, ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாவட்ட துணைசெயலாளர் வீ.கல்யாணசுந்தரம், சிபிஎம்எல் மக்கள் விடுதலை மாவட்ட செயலாளர் இரா. அருணாசலம், சமூக ஆர்வலர் ஏகலைவன் ஆகியோர் உடனிருந்தனர்.

# தோட்டக்கலை விளை பொருட்களை தமிழக அரசே கொள்முதல் செய்திட வேண்டும்

## தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்

தமிழ்நாடு விவசாயிகள் சங்க பொதுச் செயலாளர் பி.எஸ். மாசிலாமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

தமிழகத்தின் பல மாவட்டங்களில் விளையும் காய்கறிகள், பழங்கள், பூக்கள் பருவ கால சூழலின் பாதுகாப்பிற்கு ஏற்ப சில நேரங்களில் கூடுதல் விளைச்சல் தருகிறது. அப்படி விளையும் இந்த வேளாண்உற்பத்தி பொருட்களை சந்தையில் கொண்டு சென்றால் அடிமாட்டு விலைக்கு கேட்கப்படுகிறது. கிருஷ்ணகிரி, தர்மபுரி, கோயம்புத்தூர் போன்ற மாவட்டங்களில் விளைந்த தக்காளியை சந்தைப்படுத்தும் போது வியாபாரிகள் கேட்கும் மிக, மிக குறைந்த விலைக்கு விற்க முடியாமல் சாலைகளில் கொட்டி அழித்து விவசாயிகள் கண்ணீர் சிந்தினர்.

அண்மையில் கூட தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கோயமுத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு, விளைந்த தக்காளியை அரசே வாங்கிட வேண்டும் என தக்காளி விவசாயிகள் போராட்டம் நடத்தி அங்கு வந்த பொதுமக்களிடம் கிலோ ஒரு ரூபாய்க்கு தக்காளியை விற்பனை செய்தனர். தற்போது திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, திண்டுக்கல் போன்ற மாவட்டங்களில் விளைந்து வரும் வெண்டைக்காய்களை விவசாயிகள் சந்தைக்கு கொண்டு போகிற பொழுது வியாபாரிகள் கிலோ 5 ரூபாய்க்கு கேட்பதால், வேதனையுற்று வேறு வழி இல்லாமல் செய்வதறியாது திகைத்து உள்ளனர். சில விவசாயிகள் ஆத்திரத்தில் சாலைகளில் கொட்டி செல்கின்றனர்.

இதே போல் கடந்த காலங்களில் தான் விளைவித்த பல நூறு கிலோ பூக்களை விற்க இயலாது விளைவித்த விவசாயிகளே அழித்ததும் நடந்தது. குறுகிய கால பயிர்.. தோட்டக்கலை பயிர் என்ற நிலையில் குடும்பமே உழைத்து சாகுபடி செய்து வருகிற விவசாயிகளுக்கு பல நேரங்களில் இப்படியான பொருளாதார அழிவும் பாதிப்பும் ஏற்படுகிறது.

அண்மையில் தமிழக முதல்வர் அவர்கள் பூக்கள் பூங்கா அமைத்து பெங்களூர் வியாபாரிகள் வந்து கொள்முதல் செய்வதற்கான ஏற்பாடு செய்திருப்பது பாராட்டக்கூடியது. எனவே தமிழ்நாடு அரசு இதற்கென சிறப்பு திட்டம் வகுத்து காய்கறி, மலர், பழங்களுக்கு உரிய கொள்முதல் விலையை நிர்ணயித்து அரசே கொள்முதல் செய்திட வேண்டும். தமிழக அரசு இவைகளை பாதுகாத்திட குளிர் சேமிப்பு கிடங்குகள் கட்டி நுகர்வோர்களுக்கு தேவையான நேரங்களில் விற்பனை செய்திட உரிய நடவடிக்கை எடுத்திட வேண்டும் என தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

# திருஆரூரான் சர்க்கரை ஆலையால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் போராட்டம்

## தமிழநாடு விவசாயிகள் சங்கம் ஆதரவு



தஞ்சை மாவட்டம், பாபநாசம் ஒன்றியத்தில் உள்ள திருஆருரான் சர்க்கரை ஆலை நிறுவனம் கரும்பு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை தாமதமின்றி வழங்க கோரியும், கரும்பு விவசாயிகள் பெயரில் பல்வேறு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் மோசடி செய்து பெற்ற கடனை உடனடியாக ரத்து செய்யக் கோரியும் சர்க்கரை ஆலை முன்பு கரும்பு விவசாயிகள் தொடர் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.

போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் சாமு.தர்மராஜன் தலைமையில் விவசாய சங்க நிர்வாகிகளும் மற்றும் கட்சி நிர்வாகிகளும் களத்திற்கு சென்று ஆதரவை தெரிவித்தனர்.

இதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட பொருளாளர் எ.ராஜேந்திரன், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் டி.ஆர்.குமரப்பா, தங்க.சக்கரவர்த்தி, பாபநாசம் ஒன்றிய செயலாளர் பொன்.சேகர், அம்மாபேட்டை ஒன்றிய செயலாளர் எம்.வெங்கடேசன், பாபநாசம் ஒன்றிய நிர்வாகிகள் கானுர். எஸ்.மணி, தாடி.எஸ்.சாட்சிலிங்கம், ஈச்சங்குடி.எம்.புகழேந்தி, மாஞ்சேரி.பாலகிருஷ்ணன் உள்ளிட்ட முன்னணி நிர்வாகிகள் பங்கேற்று ஆதரவை தெரிவித்தனர்.

## சிபிஐ யானைமலை ஒத்தக்கடை நகர் குழு சார்பில்

# விழிப்புணர்வு பொதுக்கூட்டம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை புறநகர் மாவட்டம் யா.ஒத்தக்கடை நகர் குழு சார்பாக ‘‘விழிப்புணர்வு பொதுக்கூட்டம்‘‘ நகரச் செயலாளர் கார்த்திக் தலைமையில் நடைபெற்றது. இதில் கிழக்கு தாலுகா செயலாளர் ராமேஸ்வரி முன்னிலை வகித்தார்.

இக்கூட்டத்தில் மாநில கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் பா.காளிதாஸ், புறநகர் மாவட்டச் செயலாளர் முத்துவேல், மாவட்ட குழு உறுப்பினர்கள் சந்தனம், பூமிநாதன் மற்றும் நகர் குழு உறுப்பினர் ராஜேந்திரன் ஆகியோர் ஆவின் பால், மின், சொத்து வரி, பெட்ரோல் டீசல், சமையல் எரிவாயு விலை உயர்வு அரசு பள்ளிக்கு விளையாட்டு மைதானம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகள் குறித்து விளக்கிப் பேசினர். நகரக் குழு ஈஸ்வரன் நன்றியுரை கூறினார். பொதுமக்கள், பெண்கள் உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டனர்.

# இண்டூரில் வேளாண்மை விரிவாக்க மையத்தை ஏற்படுத்திடுக!

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் இண்டூர் வட்டாரக்குழு கூட்டம் வட்டார துணைச் செயலாளர் எம்.மாதையன் தலைமையில் இண்டூரில் நடைபெற்றது. கூட்டத்தில் மாநிலக்குழு உறுப்பினர்கள் எஸ்.சின்னசாமி, எம்.மாதேஸ்வரன் ஆகியோர் இன்றைய அரசியல் நிலை குறித்து பேசினார்கள்.

கூட்டத்தில் நல்லம்பள்ளி ஒன்றியத்தை பிரித்து இண்டூரை தலைமையிடமாக கொண்டு தனி ஒன்றியம் ஏற்படுத்தவேண்டும்.

நாகலாபுரத்தில் செயல்பட்டு வரும் வேளாண்மை விரிவாக்க மையத்தை இண்டூரில் அமைக்கவேண்டும்.நல்லம்பள்ளி ஒன்றியத்தில் உள்ள கிராம பஞ்சாயத்துகளுக்கு கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்து வளர்ச்சி பணிகளை மேற்கொள்ள வேண்டும்.100 நாள் வேலை திட்டத்தில் முறைகேடுகள் இல்லாமல் முறையாக பணிகளை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.நல்லம்பள்ளி ஒன்றியத்தில் சுடுகாடு இல்லாத அனைத்து கிராமங்களுக்கும் சுடுகாடு வசதி ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# இந்த வார தம்பிக்குறள்

## 99. கடமை

**கையுரைக் கொண்டு கடமைய தாற்றாஅன்**
**மெய்யுரையும் பொய்யுரை யாம்.**


கையூட்டு (இலஞ்சம்) பொற்றுக் கொண்டு உரிய கடமை தவறி, தவறு செய்பவன் உண்மையே பேசினும் பொய் பேசுகிறான் என்றே கருதப்படுவான்.

**கண்ணிற் கணிகலன் கண்ணோட்டம் எண்ணின்**
**கடமையது கண்ணிற் கொளி.**

கண்ணுக்கு அழகுதருவது, கண்ணோட்டமே, (அதாவது தயவு தாட்சண்யம் எனும் பண்பே) கண்ணுக்கு ஒளியைத் தருவது, ஏற்ற கடமையைத் தவறாது, சிறப்புறச் செய்வது தான்.

# நூல் நயம்

## இந்தியக் கம்யூனிஸ்டுகள் சந்தித்த முதல் சதி வழக்குகள்



இந்தியாவில் ஒரு கட்சி கருக் கொள்ளும்போதே அடக்குமுறைகளையும், சதி வழக்குகளையும் சந்தித்து முன்னேறிய கட்சி ஒன்று உண்டென்றால், அது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தான். அது தொடக்க காலத்தில் சந்தித்த சதி வழக்குகளை பற்றி, மூத்த வழக்கறிஞர் கே. சுப்பிரமணியன் அவர்கள் எழுதிய நூல் "இந்தியக் கம்யூனிஸ்டுகள் சந்தித்த முதல் சதி வழக்குகள்" என்னும் இந்நூல் ஆகும்.

இந்திய கம்யூனிஸ்டுகள் சந்தித்த ஏகப்பட்ட சதி வழக்குகளில், மூன்று மிக முக்கியமான சதி வழக்குகள் ஆகும். பெஷவர் சதி வழக்கு, கான்பூர் சதி வழக்கு, மீரட் சதி வழக்கு ஆகும். இந்த சதி வழக்குகளை பற்றி இன்னுள் விரிவாக பேசுகிறது. கான்பூர் சதி வழக்கு நடவடிக்கைகள் இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சியை தொடங்குவதற்கான ஆயத்தங்களை செய்து கொண்டிருந்த எஸ்.ஏ.டாங்கே, முசாபர் அஹமது, சௌகத் உஸ்மானி, நளினி குப்தா, குலாம் உசேன், சிங்காரவேலர், எம்.என்.ராய், ஆர்.சி.சர்மா ஆகிய 8 தலைவர்கள் மீது சதி வழக்குகள் பாய்ந்தன. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் இந்த பொய் குற்றச்சாட்டால் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் கம்யூனிஸ்ட் தலைவர்களுக்கு ஆதரவாக எழுச்சிகள் நடந்தேறின. மீரட் சதி வழக்கில் கைது செய்யப்பட்டவர்களில் 23 பேர் மட்டுமே கம்யூனிஸ்டுகள், மீதி எட்டு பேர் முற்போக்கு எண்ணம் கொண்ட கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவாளர்கள்.


மீரட் சதி வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 31 தோழர்களும் லாகூர், மும்பை ,கான்பூர் மற்றும் கொல்கத்தா போன்ற நகரங்களில் செயல்பட்டு வந்த கம்யூனிஸ்ட், தொழிற்சங்க, விவசாய சங்க, மாணவர் இளைஞர் பெருமன்ற தலைவர்கள் ஆகும். இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட பெண் பிராட்லி , பிலிப் ஸ்பிரட், லெஸ்டர் அட்சின்சன் ஆகிய மூவர் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த முக்கியமான கம்யூனிஸ்ட் தொழிற்சங்க தலைவர்கள் ஆவார். சட்டக் கல்லூரி மாணவனாக இருந்து 22 வயதில் மீரட் சதி வழக்கில் சிறைபிடிக்கப்பட்ட பி.சி.ஜோசியின் வாக்குமூலத்தை கேட்போம் "இந்த வழக்கில் குற்றவாளி கூண்டில் நிற்பது நாங்கள் அல்ல, மாறாக ஆங்கிலேய ஏகாதிபத்தியம் தான். இங்கு இறுதி தீர்ப்பு வழங்கப்போவது இந்திய மக்கள்தான். நீங்களோ அல்லது பிரிட்டிஷ் அரசாங்கமோ அல்ல, இந்த வழக்கிலே நாங்கள் குற்றம் சாட்டப்பட்டவர்கள் அல்ல. மாறாக குற்றம் சாட்டுபவர்கள். இந்திய மக்கள் என்னும் அந்த உண்மையான நீதிபதிகள் கூறப்போகும் இறுதி தீர்ப்பு புரட்சியை நோக்கி முன்னேறுங்கள் என்பதாகத்தான் இருக்கும்"என கூறினார். நமது தலைவர்கள் சித்தாந்த தெளிவோடும், கொள்கை உறுதியோடும் களமாடி இருக்கிறார்கள்.

இதுபோன்று நாடு முழுவதும் எத்தனையோ சதி வழக்குகளை சந்தித்து தான் நிமிர்ந்து நிற்கிறது இந்திய கம்யூனிஸ்ட் இயக்கம். நமது முதல் தலைமுறை சந்தித்த கொடூரங்களையும், அடக்குமுறைகளையும், தியாகங்களையும் அறிந்து கொள்வதற்கு இந்த நூல் மிக முக்கியமான நூலாகும். இந் நூலை அனைவரும் வாங்கி படிக்க வேண்டும்.

– இன்சுவை பாரதி

| | |
|---|---|
| நூலாசிரியர் | : வழக்கறிஞர் கே . சுப்பிரமணியன் |
| பக்கம் | : 116 விலை ரூ: 100 |
| வெளியீடு | : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 50 |

## சிப்பாய்களும் போர்களும், தமிழகத்தில் காலனிய மயமாக்கமும் அதன் சமூகத் தாக்கமும்



சிப்பாய்களும் போர்களும் தமிழகத்தில் காலனி மயமாக்கமும் அதன் சமூகத் தாக்கமும் 1565 – 1857 என்ற ஆங்கில நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு நூல் இது. இந்நூலை ஆங்கிலத்தில் எஸ்.ஜெயசீல ஸ்டீபன் எழுதியுள்ளார். இதை தமிழில் கி. இளங்கோவன் மொழி பெயர்த்துள்ளார்.

தமிழக ஆட்சி முறையில் போர்களும் , முற்றுகைகளும் முக்கிய இடம்பெறுகின்றன.போர் செய்வதற்கு சிப்பாய் படை மட்டுமல்லாது, குதிரைப்படை, யானைப்படை போன்ற பெரிய படைப்பிரிவுகளை வைத்திருந்தனர். உதவிக்கு ஒட்டகங்களும், எருமை மாடுகளும் கூட பயன்படுத்தப்பட்டன.

முதலாம் தேவராயர் வில் எரிவதில் திறன் பெற்று இருந்தவராக குறிப்பிடப்பட்டுள்ளது. இவர் பெரிய யானை படையும் பராமரித்ததாக தெரிகிறது. நன்கு பயிற்சி அளிக்கப்பட்ட யானைகளை போர்க்களங்களில் பயன்படுத்தியதாகவும், வீர தீரமிக்க போர் வீரர்கள் இப்ப பெரும் விலங்குகளிடம் வீழ்ந்தனர் என்றும், அதிக எண்ணிக்கையிலான யானைகள் போர்க்களத்தில் இறந்து விழுந்து கிடந்ததாகவும் குமரகம்பன்னாவின் அரசி கங்காதேவி இயற்றிய "மதுரா விஜயும்" என்ற காவியத்தில் இத்துயரமான சம்பவத்தைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழகத்தில் நாயக்கர்கள் அதிக எண்ணிக்கையிலான காலாட்படை வீரர்களை பராமரித்து வந்தனர் . வீரர்களின் பொது ஆயுதங்கள் ஈட்டியும், கேடயமாகும் . வில்லியர்கள் என்ற வீரர்கள் வில் அம்புகளுடன் இருப்பர். 1624 ஆம் ஆண்டு தரங்கம்பாடி டச் அதிகாரி ரோலன்ட் கிராப், ரகுநாத நாயக்கருக்கு டென்மார்க் நாட்டில் இருந்து இரண்டு புதிய மெருகேற்றப்பட்ட வெண்கல பீரங்கிகளை அன்பளிப்பாக வழங்கினார்.

1629 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் அற வீடு ராமதேவியின் திருத்தணி படைக்கூடாரங்கில் 65 ஆயிரம் பேர் இருந்ததாக டச் கிழக்கு இந்திய நிறுவன ஆவணங்கள் தெரிவிக்கின்றன.இதேபோன்று 1634 ஆம் ஆண்டு அறவீடு திம்மராய படைக் கூட ரங்கில் செங்கல்பட்டு அருகில் இருந்த கருங்குழியில் 20,000 பேர் இருந்துள்ளனர் . தஞ்சாவூர் நாயக்கர் 1627 ஆம் ஆண்டு 40,000 காலாட் படைவீரர்கள் வைத்திருந்ததாக ஜேசு சபையார் ஆண்டோ பிரியோன்சா குறிப்பிட்டுள்ளார்.1767 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் சென்னை ஆலோசனை குழு ஹைதர் அலிக்கு எதிராக போரிட நாலாயிரம் குதிரைகளை அனுப்புமாறு கோரி உள்ளது. தமிழக போர் வரலாறுகளில் சிப்பாய்களும், விலங்குகளும் முக்கிய பங்காற்றி உள்ளன,வெளிநாடுகளில் இருந்து படை எடுத்து வந்தவர்கள் நவீன கருவிகளோடு இருந்ததால் இவர்களை எளிதாக வீழ்த்த முடிந்தது. தமிழக போர்க்கள சூழ்நிலை அறிந்து கொள்வதற்கு இது முக்கியமான ஆவண நூல் ஆகும். இந் நூலை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டும்.

– சமரன்

| | |
|---|---|
| நூலாசிரியர் | : ஆங்கிலத்தில்: எஸ் .ஜெயசீல ஸ்டீபன் தமிழில்: கி.இளங்கோவன் |
| பக்கம் | : 200 விலை: 250 |
| வெளியீடு | : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,அம்பத்தூர், சென்னை – 50 |

11 ம் பக்கத் தொடர்ச்சி

கே.தேசிங், ஏ.ஆதிமூலம், எம்.ஜி.டி.ஸ்டாலின் மற்றும் ஆர்.சென்ன கேசவன், எஸ்.தினகரன், என்.எஸ்.வேந்தகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**மதுரை:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநகர் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தல்லாகுளம் அவுட் போஸ்ட்டில் உள்ள அம்பேத்கரின் திருஉருவச்



சிலைக்கு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.முருகன், துணைச் செயலாளர் தாமஸ், பொருளாளர் இருளாண்டி, இஸ்கப் ஜெயராமன், மாதர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் ராஜலெட்சுமி, மாதர் மாநில குழு மணிமேகலை, சுகந்தி, மத்திய கிழக்கு செயலாளர் ரவிச்சந்திரன், ஏ.ஐ.டி.யு.சி துணைச் செயலாளர் இரா.முருகன், பஞ்சு ஆலை சங்கம் பாலகிருஷ்ணன் உள்ளிட்ட பலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தல்லாகுளம் அவுட் போஸ்ட்டில் உள்ள அம்பேத்கரின் திருஉருவச் சிலைக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநில கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் பா.காளிதாஸ், புறநகர் மாவட்டச் செயலாளர் பா.முத்துவேல், ஏ.ஐ.டி.யூ.சி மாவட்ட பொதுச் செயலாளர் சேது, தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் மாவட்டச் செயலாளர் மூர்த்தி, இந்திய மாதர் தேசிய சம்மேளனம் மூக்கம்மாள், ஏ.ஐ.பி.எஸ்.ஓ மாவட்டச் செயலாளர்கள் ஜீவானந்தம், விருமாண்டி உள்ளிட்ட பலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

**செங்கல்பட்டு மாவட்டம்** : திருப்போரூர் ரவுண்டானாவில் உள்ள அம்பேத்கர் திரு உருவச்சிலைக்கு, ஏஐடியுசி மாவட்ட செயலாளர் ஜி.ஜெகதீசன் தலைமையில், ஏஐடியூசி மாநில செயலாளர் விஆதிமூலம் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திருப்போரூர் சட்டமன்ற தொகுதி செயலாளர் எம்.பார்த்திபன், இளைஞர்பெருமன்ற மாநில துணை தலைவர் மோ.வெங்கடேசன், கட்சியின் மாவட்ட குழு உறுப்பினர் இ. முனுசாமி மற்றும் கட்சியின் தொகுதி குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.



மதுராந்தகம் ஒன்றியம் மெய்யூர் அம்பேத்கர் நகரில் அமைந்துள்ள அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவிக்கும் நிகழ்வு இந்திய கம்யூனிஸ்டு கட்சி கிளை செயலாளர் செ.இன்பராஜ் தலைமையில் நடைபெற்றது. சிபிஐ மாவட்ட செயலாளர் ஏ.ராஜ் குமார் பங்கேற்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். மாவட்டத் துணைச் செயலாளர் வி.வீராசாமி மாவட்ட குழு உறுப்பினர் கே.வி. சேகுவாராதாஸ், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் மாவட்டத் துணைத் தலைவர் எம். முருகன், கிளை துணை செயலாளர் எம்.நாகராஜ், இளைஞர் மன்ற கிளைச் செயலாளர் கு.அய்யனார் மற்றும் கிளை முன்னணி தோழர்கள் பங்கேற்ற சிறப்பித்தனர்.

**தருமபுரி:** தமிழ்மாநில விவசாய தொழிலாளர் சங்க தருமபுரி மாவட்டக்குழு சார்பில் தருமபுரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை முன்பு இருக்கும் அம்பேத்கர் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இதில் சங்க மாவட்ட செயலாளர் ஜெ.பிரதாபன், மாவட்ட தலைவர் ஜி.மாதையன், மாவட்ட துணைத்தலைவர்கள் ஜி.ராஜகோபால், என்.முருகேசன், மாவட்ட துணைச்செயலாளர் ஜி.பச்சாகவுண்டர், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் வெ.பை.மாதையன், மற்றும் ஜி.சம்பத், கோவிந்தசாமி, காளி , முனுசாமி ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

**நாமக்கல்:** தஒவாஇ சார்பில், அம்பேத்கர் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி மாவட்டத் தலைவர் என்.செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது. கே.தங்கராசு, சி.முருகேசன் எக்ஸ்.எம்.சி., பி.கதிர்வேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிபிஐ மாவட்டச் செயலாளர் கே.அன்புமணி அம்பேத்கர் படத்திற்கு மாலை அணிவித்து சிறப்புரையாற்றினார். தஒவாஇ மாவட்டச் செயலாளர் எஸ்.ராமகிருஷ்ணன், ஏஐடியூசி மாவட்டத் தலைவர் எஸ்.ஜெயராமன், ஏஐடியுசி மாவட்ட பொது செயலாளர் பி.தனசேகரன், வி.தொ.ச மாவட்ட செயலாளர் சி.ஜெயராமன், சிபிஐ திருச்செங்கோடு நகர செயலாளர் எஸ். சுகுமார், துணைச் செயலாளர்கள் பி.கார்த்திக், எஸ்.தண்டபாணி உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர்.

**வேலூர்:** வேலூர் மாவட்டம் பேரணாம்பட்டு சிவராஜ் நகரில் அமைந்துள்ள அம்பேத்கர் சிலைக்கு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 18 வது வார்டு கிளை மற்றும் தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் சார்பில் மாலை அணிவிக்கப்பட்டது. மாவட்ட துணை செயலாளர் நா.சே. தலித்பாஸ்கர் தலைமை தாங்கினார். இதில் சிறப்பு அழைப்பாளராக இந்திய தேசிய லீக்கட்சி மாநில செயலாளர் எம்.லியாகத் அலி கலந்து கொண்டார்.

**அரியலூர்:** அரியலூர் நகராட்சி அலுவலகத்தில் இருந்து ஏஐடியூசி சுகாதாரத் தொழிலாளர்கள் அம்பேத்கர் திருவுருவ படத்துடன் ஊர்வலமாக சென்று பேருந்து நிலையம் எதிரே உள்ள திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். பின்னர் ஏஐடியூசி மாவட்டப் பொதுச் செயலாளர் த.தண்டபாணி, அம்பேத்கரின் பணிகள் பற்றி பேசினார்.

**திருச்சி:** திருச்சி மாநகர், புறநகர் மாவட்ட குழுக்கள் சார்பில் அரிஸ்டோ ரவுண்டானா பகுதியில் அமைந்துள்ள அம்பேத்கர் சிலைக்கு, மூத்த தலைவர் த.இந்திரஜித் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இதற்கு மாநகர் மாவட்ட செயலாளர் எஸ்.சிவா, புறநகர் மாவட்ட செயலாளர் செ.ராஜ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் ஏஐடியுசி மாவட்டம் பொது செயலாளர் க.சுரேஷ், முன்னாள் மாநில குழு உறுப்பினர் செல்வராஜ், அமைப்புசாரா மாவட்ட செயலாளர் ஏ.கே.திராவிடமணி, தலைவர் நடராஜா, இடை கமிட்டி செயலாளர் எம்.ஆர். முருகன், இரா. சுரேஷ் முத்துசாமி, சையத் அபுதாஹிர், எம்.ஆர். எஸ்.ராஜலிங்கம், ஏ.பால் கிறிஸ்டி, மாணவர் பெருமன்ற நிர்வாகிகள் ஜி.ஆர். தினேஷ்குமார், க.இப்ராஹிம், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாவட்ட செயலாளர் எஸ். சூர்யா,இளைஞர் பெருமன்ற மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் த.விஷ்வா ஆகியோர் கலந்து கொண்டனர்.

**குமரி:** கன்னியாகுமரியில் சிபிஐ மாவட்டச் செயலாளர் தா.சுபாஷ் சந்திர போஸ் தலைமையில் அம்பேத்கர் நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. மூத்த தோழர்ஆரல் குருசாமி, அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். சிபிஐ மாவட்ட துணை செயலாளர்கள் ஜி.சுரேஷ் மேசியதால், எஸ்.நாராயணசாமி, ஏ.ஐ.டி.யுசியின் மாவட்ட தலைவர் எஸ்.அனில்குமார், தகஇபெ மாவட்ட பொருளாளர் ந.நாகராஜன், சொக்கலிங்கம், சிபிஐ மாநகர செயலாளர் ஆர்.இசக்கிமுத்து, பொருளாளர் கே.நாகராஜன், மாதர் தேசிய சம்மேளன மாவட்ட அமைப்பாளர் ஆர்.செல்வராணி, சிபிஐ மாவட்ட குழு உறுப்பினர்கள் எஸ்.கே.கங்கா, சுகுமாரன், ஆர்.கே.ஸ்ரீகுமார், ஆரல் செல்வராஜ், முற்போக்கு பேரவையின் மாநில துணைத் தலைவர் சுந்தரம், அர்ஜுனன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**தென்காசி:** தென்காசி மாவட்டம், சிவகிரியில் அம்பேத்கர் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. நகர செயலாளர் பி. பாலசுப்பிரமணியம் தலைமை தாங்கினார். சி.பி.ஐ. மாவட்ட செயலாளர் தி. இசக்கித்துரை முன்னிலை வகித்தார். ஏஐடியூசி மாவட்ட ஆட்டோ ஓட்டுநர் சங்க செயலாளர் வி.முனியாண்டி, சி.பி.ஐ. நகர துணைச் செயலாளர் ராஜேந்திரன், விவசாய சங்க செயலாளர் பா.வேலுச்சாமி, கவுன்சிலர் பி.அருணாசலம், இளைஞர்பெருமன்ற நகரசெயலாளர் க.பு.பால்சாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.



1 ம் பக்க தொடர்ச்சி






ஆகியவற்றுக்கான 44 சட்டங்களை நான்கு சட்ட தொகுப்புகளாக மோடி அரசு மாற்றியுள்ளது. இந்தச் சட்டங்களில் இருந்த தொழிலாளர்களுக்கான பாதுகாப்புகள் அனைத்தும் உறிஞ்சப்பட்டு சக்கைகளாக இந்த சட்டத் தொகுப்புகள் வந்துள்ளன.

இந்திய மக்களின் வரிப்பணத்தில் உருவாக்கப்பட்ட பல லட்சம் கோடி ரூபாய் பெறுமானம் கொண்ட பொதுத்துறை நிறுவனங்கள் ஒவ்வொன்றாகத் தனியார் பெருமுதலாளிகளுக்கு அடிமட்ட விலையில் அல்லது முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

கார்ப்பரேட் பெரு முதலாளிகளுக்கு மட்டுமே சாதகமாக வகுக்கப்படும் பொருளாதாரக் கொள்கைகளின் விளைவாக, சிறு, குறு, நடுத்தரத் தொழில்கள் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. சரிபாதி எண்ணிக்கையில் ஆலைகள் மூடப்பட்டுள்ளன. இதனால் பல லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்து இருக்கிறார்கள்.

முன்னெப்போதும் இல்லாத வகையில் வேலையின்மை கடுமையாக அதிகரித்து வருகிறது. உலகத் தரப் புள்ளி விவரங்களின் படி கடுமையான பசி பட்டினியும் ஏழ்மையும் கொண்ட நாடாக மாற்றப்பட்டுள்ளது.

ஒருபுறம் வருவாய் இழப்பு மறுபுறம் தாங்க இயலாத விலைவாசி உயர்வு என்ற கிடுக்கிப்பிடியில் இந்திய மக்கள் சிக்கி இருக்கிறார்கள்.

இந்த வாழ்வியல் பிரச்சனைகளில் இருந்து மக்களின் கவனத்தை திருப்புவதற்காக மக்களை பிளவு படுத்தி, ஜாதி, மத மோதல்களை தனக்குள்ள ஆட்சி அதிகாரத்தை பயன்படுத்தியும், தனது சங்கப் பரிவாரங்கள் வழியாகவும் முழு வீச்சில் ஆர்.எஸ்.எஸ். பி.ஜே.பி. தூண்டி வருகிறது.

இந்தியக் குடியரசின் அரசியல் அமைப்பு சாசனத்தின் மீதும் அது வழங்கியுள்ள ஜனநாயகம், சுதந்திரம், மனித உரிமைகள் மீதும் திட்டமிட்ட பெரும் தாக்குதல் தொடுக்கப்படுகிறது. அரசியலமைப்புச் சட்டம் ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காக உருவாக்கியுள்ள அமைப்புகள் அனைத்தும் தகர்க்கப்படுகின்றன.

**வருகிற 2024 நாடாளுமன்றத் தேர்தலில், ஆர்எஸ்எஸ், பிஜேபியை ஆட்சியில் இருந்து இறக்குவது ஒன்றே இந்திய தொழிலாளர்களையும், மக்களையும் பாதுகாப்பதற்கான ஒரே தீர்வாகும். அதற்கான தனித்த போராட்டங்களையும், அனைத்து தொழிற்சங்க இயக்கங்களையும் முன்னெடுப்பது என்று மாநாடு முடிவு செய்கிறது.**

ஆர்எஸ்எஸ், பிஜேபி மதவாத வலதுசாரி கொள்கைகளுக்கு எதிரான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு ஆதரவு தந்து தமிழ்நாட்டு மக்களும் தொழிலாளர்களும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியை தமிழகத்தில் உருவாக்கினார்கள். “நீட்” தேர்வு, வேளாண் சட்டங்கள் ஆகியவற்றை தமிழ்நாடு அரசு, ஒன்றிய அரசை முழு மூச்சுடன் எதிர்த்து நின்றது வரவேற்கத்தக்கது.

அதே நேரத்தில் தொழிலாளர்களுக்கு விரோதமான சட்டத் தொகுப்புகளையும், தொழிலாளர்கள் உரிமை பறிக்கப்படுவதையும் தமிழக அரசு எதிர்க்கும் என தொழிலாளர்கள் நம்பினார்கள். ஆனால் தமிழ்நாட்டின் தொழிலாளர் துறை ஒன்றிய அரசின் சட்டங்கள் அமலுக்கு வராத நிலையிலேயே, அதனை வரவேற்று செயல்படுத்த ஆயத்த நிலையில் உள்ளது. சில அம்சங்களை இப்போதே செயல்படுத்திக் கொண்டும் இருக்கிறது. இச்செயல் பெரிதும் ஏமாற்றத்தை அளிக்கிறது.

மின்சாரம், போக்குவரத்து கழகங்கள், டாஸ்மாக், அரசு மருத்துவமனைகள் உள்ளிட்டவற்றில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு அரசு இயற்றிய சட்டங்களையும் கூட அமலாக்க மறுக்கும் நிலை குறித்து தொழிலாளர்கள் கோபமும் அதிருப்தியும் கொண்டிருக்கிறார்கள்.

ஊராட்சி முதல் மாநகராட்சிகள் வரை துப்புரவுப் பணியில் ஈடுபடும் தொழிலாளர்கள் சமூகத்தின் அடித்தளத்தில் அழுத்தப்பட்டுக் கொணாடிருக்கிற ஒடுக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்தவராகள் ஆவர். அவர்களுக்கு குறைந்த பட்சக் கூலியைக்கூட வழங்க மறுப்பது நியாயமற்றது. இனி புதிய நியமனங்கள் இல்லை என்றும் தொழிலாளர்களை வெளிச்சந்தை முறையில் வாடகைக்கு எடுத்துக்கொள்வது என்றும் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இவை சமூக நீதிக் கோட்பாட்டிற்கு எதிரானவை ஆகும். இந்நிலையில்

- 240 நாட்கள் பணிபுரிந்தால் பணிநிரந்தரம்...
- எந்தத் தொழிலில் பணிபுரிந்தாலும், ரூபாய் 21,000க்கு குறையாத மாத ஊதியம்...
- EPS 95 மற்றும் நலவாரியங்களில் மாதம் 6000/ரூபாய்க்கு குறையாத ஒய்வூதியம்...
- நலவாரியப் பதிவுகளை எளிமைப்படுத்தி தாமதம் இல்லாமல் நிதிப்பயன்களை உயர்த்தி வழங்குதல்...

உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தியும், மோடி அரசின் தொழிலாளர் விரோதக் கொள்கைகளையும் நான்கு சட்டத் தொகுப்புகளையும் எதிர்த்தும் 2023 ஜனவரி 24ஆம் தேதி அன்று தமிழ்நாடு முழுவதும் மறியல் போராட்டத்தை மேற்கொள்வது என்று தமிழ்நாடு ஏஐடியுசியின் 20வது மாநாடு ஒருமனதாகத் தீர்மானித்து உள்ளது.

## டிசம்பர் 29 இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கவர்னர் மாளிகை முற்றுகை போருக்கு ஆதரவு!

ஆளுநர் ஆர்.என்.ரவி தமிழ்நாட்டில் போட்டி அரசாங்கம் நடத்திக் கொண்டு இருக்கிறார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை அவமதித்து, ஆர்எஸ்எஸ் கொள்கையை பரப்பும் கொள்கை பரப்புச் செயலாளர் போல செயல்பட்டு வருகிறார். அரசியல் அமைப்புச் சட்டத்தின் மாண்புகளுக்கும், சட்டத்திற்கும் விரோதமாக பேசியும், செயல்பட்டும் வருகிறார். கூட்டாட்சி தத்துவத்தை சீரழித்து வருகிறார் ஆளுநர் ஆர். என். ரவி அவர்களை ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டும் என்று கோரி டிசம்பர் 29 அன்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஆளுநர் மாளிகை முன்பு முற்றுகை போராட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த போராட்டம் அரசியல் அமைப்புச் சட்டத்தின் மாண்புகளை பாதுகாக்க, மாநில உரிமைகளைப் பாதுகாக்க நடத்தப்படும் போராட்டம் ஆகும். எனவே ஏஐடியூசியுடன் இணைக்கப்பட்ட சங்கங்கள், உறுப்பினர்கள் இந்த முற்றுகைப் போரில் திரளாக பங்கேற்பது என முடிவு செய்யப்பட்டது.

## பணியாளர் மற்றும் தொழிலாளர் கொள்கை வகுத்திடுக...

வேலை அளிப்போர், தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களை பணி அமர்த்தும் போது, அவர்களது பணிப் பாதுகாப்பு, காலமுறை ஊதியம். ஓய்வூதியம் உள்ளிட்ட பல உரிமைகள் நிலைநாட்டப்பட்டிருந்தன. ஆனால், ஒன்றிய, மாநில அரசுகளின் கொள்கை நிலை படிப்படியாக நிதி மூலதன சக்திகளுக்கும், பன்னாட்டு நிறுவனங்களுக்கும் ஆதரவாக மாறியுள்ளது. இதனால் ஒப்பத்தப் பணியாளர், தொகுப்பூதிய பணியாளர், அயல்பணி அமர்வு என்ற முறையில் மட்டுமே பணியமர்வு செய்யும் முறை மட்டுமே நடைமுறையாகியுள்ளது.

இது தொழிலாளர் சமூகத்திற்கு இழைக்கப்படும் அநீதியாகும். சமூகத்தின் தனித்துவம் கருதி சமூக நீதி வழங்கும் திசையில் அமலாக்கப்படும் இடஒதுக்கீடு கொள்கை அர்த்தமிழந்து போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதில், தனியார் துறை வேலையளிப்போருக்கு முன் மாதிரியாக செயல்பட வேண்டிய ஒன்றிய, மாநில அரசுகள் எதிர்மறையாக செயல்படுவது தொழில் உறவில் அமைதியற்ற நிலையை உருவாக்கி வருகிறது.

இதனைக் கருத்தில் கொண்டு ஒன்றிய, மாநில அரசுகளிலும், அரசு தொடர்புடைய பிரிவுகளிலும் பணிபுரியும் பணியாளர்கள், தொழிலாளர்கள் அனைவரையும் பணிநிரந்தரம் செய்து, அவர்களுக்கு காலமுறை ஊதியம், ஓய்வூதியம் பெறுவது உள்ளிட்ட உரிமைகளை உறுதி செய்யும் வகையில் தமிழ்நாடு அரசு கொள்கை நிலை மேற்கொள்ள வேண்டும்.

நிரந்தரத் தன்மையுள்ள பணியிடங்களில் ஒப்பந்த தொழிலாளர் முறையை கைவிட வேண்டும். ஒன்றிய, மாநில அரசு அலுவலகங்களிலும், பொதுத்துறை நிறுவனங்களிலும் உள்ள காலிப் பணி யிடங்களை நிரப்ப வேண்டும். பழைய ஓய்வூதிய திட்டத்தை அமலாக்க வேண்டும். வேலை உறுதி அளிப்பு திட்டத்தில் ஆண்டுக்கு 200 நாள் வேலை வழங்க வேண்டும். நகர்ப்புறங்களுக்கும் அதனை விரைவுப்படுத்த வேண்டும். மின்சார திருத்தச் சட்டம் 2022 ஐ அமுலாக்க கூடாது. மின் இணைப்புக்கு ஆதார் கட்டாயமாக்க கூடாது.

வீட்டை அடிப்படையாகக் கொண்டு பணிபுரியும் தொழிலாளர் தேசிய கொள்கை உருவாக்க வேண்டும். உழைக்கும் பெண்கள் தேசிய ஆணையம் அமைக்க வேண்டும். மாநில பொதுத்துறை நிறுவனங்களை தனியார் மயமாக்கும் முயற்சியை கைவிட வேண்டும். ஒன்றிய அரசின் பொதுத் துறை நிறுவனங்களையும் மாநில அரசு பெற்று மாநில பொதுத்துறை நிறுவனங்களாக்க வேண்டும். நகர்ப்புற உள்ளாட்சி தொழிலாளர்களை வஞ்சிக்கும் அரசாணை 152 உள்ளிட்ட அனைத்து அரசாணைகளையும் திரும்ப பெற வேண்டும். மீனவர்கள் சிறை பிடிப்பதை தடுக்க காரரான நடவடிக்கை வேண்டும்என்பன உள்ளிட்ட 60 க்கும் மேற்பட்ட தீர்மானங்கள் இயற்றப்பட்டன.

## ஏஐடியுசி புதிய நிர்வாகிகள்

தலைவர்:
எஸ்.காசி விஸ்வநாதன்
துணைத் தலைவர்கள்:
கே.சுப்பராயன் எம்.பி
டி.எம்.மூர்த்தி
இரா.முத்தரசன்
எம்.செல்வராசு எம்.பி
நா.பெரியசாமி முன்.எம்.எல்.ஏ.
ஏ.எஸ்.கண்ணன் முன்.எம்.எல்.ஏ.
மீனாள் சேதுராமன்
என்.செல்வராஜ்
எம்.சங்கையா
சி.தங்கவேல்
எஸ்.மூர்த்தி (மின்சார வாரியம்)
ஆர்.சடையப்பன் (நெல்லை)
கே.மணி (தருமபுரி)
எம். ஜஹாங்கீர் (செங்கல்பட்டு)
பொதுச் செயலாளர்:
ம.இராதாகிருஷ்ணன்
செயலாளர்கள்:
கே.இரவி
வகிதா நிஜாம்
எம்.ஆறுமுகம் முன்.எம்.எல்.ஏ.
எஸ்.சந்திரகுமார்
ஆர்.ஆறுமுகம்
எஸ்.சின்னசாமி
என்.சேகர்
ஆர்.தில்லைவனம்
ஆ.பாஸ்கர்
வி.ஆதிமூலம்
பொருளாளர்:
பி. பீட்டர் துரைராஜ்

## பொதுக் கூட்டத்தில் இரா.முத்தரசன் முழக்கம்

நெல்லையில் நடைபெற்ற ஏஐடியுசி பொதுக்கூட்டத்திற்கு ஏஐடியுசின் மாநில தலைவராக புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள எஸ்.காசி விஸ்வநாதன் தலைமையேற்று ஒருங்கிணைத்தார். ஏஐடியுசியின் தேசிய செயலாளர் வஹிதா நிஜாம், மாநில துணைத் தலைவர்கள் டி.எம்.மூர்த்தி, என்.பெரியசாமி, புதிய மாநில பொதுச் செயலாளர் எம்.ராதா கிருஷ்ணன் உள்ளிட்டோரும் கலந்து கொண்டு பேசினர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் பேசும்போது, இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி நம் நாடு மதச்சார் பற்றது. வேற்றுமையில் ஒற்றுமை கொண்டதும் ஆகும். எனவே இந்திய நாட்டில் ஒரே நாடு, ஒரே மதம் என்று நிச்சயமாக இருக்க முடியாது. ஆதலால் மதச்சார்பின்மைக்கு எதிராக செயல்பட்டு வரும் தமிழக ஆளுனரை ஒன்றிய அரசு திரும்பத் பெற வலியுறுத்தி டிச.29 இல் சென்னையில் ஆளுநர் மாளிகை முற்றுகைப் போராட்டத்தில் கட்சியினரும், தொழிற்சங்கத்தினரும் திரளாக கலந்து கொள்ள வேண்டும். அதுபோல 2023 ஜனவரி 24 அன்று தமிழக முழுவதும் ஒன்றிய அரசை கண்டித்து நாம் நடத்தும் மறியல் போராட்டம் ஒன்றிய அரசு இனி ஆட்சிக்கு வர முடியாது என்று சொல்கிற அளவுக்கு மறியலாக இருக்க வேண்டும் என பேசினார்.

கூட்டத்தில் செயலாளர்கள் எம்.ஆறுமுகம், கே. ரவி, நெல்லை மாவட்ட தலைவர் சடையப்பன், நா. பெரி யசாமி , முன்னாள் எம்.பி லிங்கம், எம். எல். ஏ ராமசாமி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தென் காசி மாவட்ட செயலாளர் எஸ்.இசக்கி துரை உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். கூட்டம் முடிவில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நெல்லை மாவட்ட செயலாளர் செ.லட்சுமணன் நன்றி தெரிவித்தார். கொட்டும் மழையிலும் செம்படை யினரும் தொண்டர்களும்தொழிலாளர்களும் கட்சி அமைப்பினரும் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**JANASAKTHI** Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
**Posted on 10.12.2022 at Egmore RMS 1 / Patrika Channel.**
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57




Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,** Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.